உ
சிவமயம்

# குமார தீபம்



அமரர்

## சிவஸ்ரீ.கதிரவேலு குமாரசாமி ஐயா

அவர்களின் நினைவு வெளியீடு

10.07.2012

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சிவஸ்ரீ.கதிரவேலு குமாரசாமி ஐயா

(வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் ஆலய பூசகர், காப்பாளர், புராணிகர், துத்தியில் ஐயனார் ஆலய அறங்காவலர்)

## நினைவு வெளியீடு

# "குமார தீபம்"

10.07.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

வையகத்தில் சீரோடும் சிறப்போடும்
வாழ்ந்து எங்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
என்றும் உறுதுணையாய், கலங்கரை விளக்காய்
வழிகாட்டியாய் வாழ்ந்து நல்லதொரு சமூகத்தொண்டனாய்
வாழ்க்கைத் துணைவனாய், பாசமுள்ள தந்தையாய்,
அன்புப் பேரனுமாய், அனைவருக்கும் உயர்வான
பண்பாளராய்,வாழ்ந்து நின்றதும்,பேசியதும்,
சிரித்ததும்,பின் கண்மூடிப் போனதும்,நிஜமாகிப்
போன நிலையில் எங்கள் உயிரினும் மேலான
தெய்வத்தின் நினைவுகளைச் சுமந்த வண்ணம்
வாழ்வினைத் தொடர ஆசிபுரிய வேண்டி
அரனடி சேர்ந்த அன்புத் தெய்வத்திற்கு
"குமாரதீபம்" என்னும் மலரினை வெள்ளிப்பள்ளத்து
வீரகத்தி விநாயகன் திருப்பாதத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இதயத்தில் என்றும் நிறைந்து
உரு அறுத்து உலகு துறந்த உத்தமர்



மலர்வு 14 . 06 . 1926

உதிர்வு 25 . 06 . 2012

அமரர்

# சிவஸ்ரீ.கதிரவேலு குமாரசாமி ஐயா

## அவர்கள் திதி நிர்ணய வெண்பா

சிந்தையுயர் நந்தனமே சேர்மாதம் சீரானி
வந்தவுயர் வதுஷஷ்டி வளர்திதியில்-முந்தவுமே
காண்கதிர வேலுதருங் கவின்குமார சாமியவர்
பேண்பரமோர் பேறுற்றார் பேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | தோத்திரப்பாடல் | 03 |
| 02. | விநாயகர் அகவல் | 11 |
| 03. | கௌரிகாப்பு | 14 |
| 04. | பட்டினத்தார் பாடல் | 18 |
| 05. | வாழ்க்கைச்சுவடு | 21 |
| 06. | சுவாமிகளின் செய்தி | 27 |
| 07. | பிரதமகுருவின் செய்தி | 28 |
| 08. | சைவசமய கலாச்சாரத்தின் காவலன் | 29 |
| 09. | அமரர் சிவஸ்ரீ கதிரவேலு குமாரசாமி ஐயா அவர்களின் வாழ்வியற் செய்திகள் | 30-46 |
| 10. | பிள்ளையர் சுழி | 47 |
| 11. | விநாயகரின் திருக்கரங்கள் | 51 |
| 12. | சைவ சித்தாந்தம் | 54 |
| 13. | துடக்கு | 68 |
| 14. | அபரக் கிரியைகள் | 74 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் துதி

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்
யானைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்

திருவும் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலாள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாது சார்வார் தமக்கு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப்பெருமான் துணை

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

-திருப்புகழ்

வானோ புனல் பார்கனல் மாருதமோ
ஞானோதயமோ நவில் நான்மறையோ
யானோ மனமோ எனைஆண்ட இடம்
தானோ பொருளாவது சண்முகனே!

முருகன் குமரன் குகன்என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்என்று அருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ! எண்குண பஞ்சரனே!

என்தாயும் எனக்கு அருள் தந்தையும்நீ
சிந்தாகுல மானவை தீர்த்து எனைஆள்
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே!

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குரவாய் வருவாய் அருள்வாய் குகனே!

-கந்தரநுபூதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன், முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்,
வெய்ய வாரணம்போல்
கைதான் இருபது உடையான்
தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன், உமையாள்
பயந்த இலஞ்சியமே!

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவனே!
மறவேன் உனைநான்
ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டு
ஓட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையு முன்னே
வந்து காத்தருளே!

நாள் என்செயும் வினைதான் என்செயும் எனைநாடி வந்த
கோள் என்செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் என்முன்னே வந்து தோன்றிடினே.

பத்தித் திருமுகம் ஆறடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித்து இருக்கும் அமுது கண்டேன் செயன்மாண்டு அடங்கப்
புத்திக் கமலத்து உருகிப் பெருகிப் புவனம் எற்றித்
தத்திக் கரைபுரளும் பரமாநந்த சாகரத்தே!

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்
விரித்தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கு ஒரு தாழ்வில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலம் பிடித்து எமபாசம் சுழற்றித் தொடர்ந்து வரும்
காலன் தனக்கு ஒருகாலும் அஞ்சேன், கடல்மீது எழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே நமக்கு ஒரு மெய்த்துணையே.

ஆறிருதடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க! யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க! வாழ்க சீரடியார் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## சிவபெருமான் துதி

திருஞானசம்பந்தர் பண்: நட்டராகம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

பண்: வியாழக்குறிஞ்சி

காவினை இட்டும் குளம்பல தொட்டும்
கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்று எரித்தீர்
என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி
போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்து எமைத்
தீண்டப்பெறா திருநீலகண்டம்.

திருநாவுக்கரசர் : பண்: தனித்திருக்குறுந்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே.

திருத்தாண்டகம்

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டு ஒளிசேர் கங்கைச் சடையாய் என்றும்
சுடர்ஒளியாய் உள்விளங்கு சோதீ என்றும்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா என்றும்
கடல்விடம்அது உண்டு இருண்ட கண்டா என்றும்
கலைமான் மறி ஏந்துகையா என்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

சுந்தரர்: பண்: கொல்லிக்கௌவாணம்

வேயன தோளி மலைமகளை விரும்பிய
மாயமில் மாமலை நாடனாகிய மாண்பனை
ஆயன சொல்லி நின்றார்கள் அல்லல் அறுக்கிலும்
பேயனே பித்தனே என்பரால் எம்பிரானையே.

பண்: தக்கேசி

பேரோர் ஆயிரமும் உடையானை
பேசினால் பெரிதும் இனியானை
நீரூர் வார்சடை நின்மலன் தன்னை
நீடூர் நின்று உகந்திட்ட பிரானை
ஆரூரன் அடிகாண்பதற்கு அன்பாய்
ஆதரித்து அழைத் திட்ட இம்மாலை
பாரூரும் பரவித்தொழ வல்லார்
பத்தராய் முத்திதாம் பெறுவாரே.

மாணிக்கவாசகர் திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வான்ஆகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானேபொய் என்நெஞ்சம் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்(து) உறுமாறே.
திருச்சிற்றம்பலம்

## உமாதேவியார் துதி

திருவிளையாடல்:

செழியார்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து, செங்கோ லோச்சி,
முழுது உலகும் சயங்கொண்டு, திறைகொண்டு,
நந்திகண முனைப்போர் சாய்த்து,
தொழு கணவற்கு அணிமண மாலிகை சூட்டி,
தன்மகுடம் சூட்டிச் செல்வம்
தழைவுறு தன்அரசளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் வைப்போம்.

அபிராமி அந்தாதி:

நன்றே வருகினும் தீதேவிளைகினும் நான்அறிவது
ஒன்றேயும் இல்லை, உனக்கேபரம், எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன், அழியாதகுணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!
திருச்சிற்றம்பலம்

## தில்லைநடராசர் துதி

அப்பர்: திருநேரிசை

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்திசெய்வேன் என்னைநீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தா! உன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே!

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொண்தம்தான் என்செயும்
தில்லை மாநகர் சிற்றம்பல வனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே!
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமகள் துதி

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்க
வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாது கொலோ!
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க, ஒழித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே!
திருச்சிற்றம்பலம்

## திருமகள் துதி

மகா இலக்குமி மலரடி போற்றி
பாக்கிய இலக்குமி பதமலர் போற்றி
விசய இலக்குமி விறைகழல் போற்றி
சுந்தர இலக்குமி திருவடி போற்றி
திருமகள் தாமரைத் திருப்பதம் போற்றி
திருச்சிற்றம்பலம்

## தட்சணாமூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வரும் வாக்குஇறந்த
பூரணமாய், மறைக்கு அப்பாலாய்,
எல்லாமாய், அல்லதுமாய், இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.
-திருவிளையாடல்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டேசுரர் துதி

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதற்கு அமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன்ஆடைகள் பிறவும்
வேறு தனக்கென்று அமையாமே
மன்னும் தலைவன் பூசனையில்
மாங்கும் பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளும்
தூயோன் அடித்தாமரை தொழுவோம்.
திருச்சிற்றம்பலம்

## நவக்கிரக துதி

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து எனது
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. -சம்பந்தர்
திருச்சிற்றம்பலம்

## நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழிதிருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.
திருச்சிற்றம்பலம்

## மங்கலம்

ஆட லேற்றினான்
கூடல் ஆலவாய்
பாடியே மனம்
நாடி வாழ்மினே -சம்பந்தர்
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

ஒளவைப்பிராட்டியார் அருளிய

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூக்ஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளத்தினிற் புகுந்து
குரவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்

விநாயகர் அகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்திறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



முன்னின்று செய்யுன் முறையாப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மோடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மன் தாயிரே
காத்தென்னை தோற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
உண்ணும் உணவாக உயிரினும் உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமாக தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளேஅம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நிகைத்தல்லே சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய் காட்டுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பை புனைத்துவிடு காலபயம் ஒட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையை தந்து விடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளும்மம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பை அருளும்மம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளம்மம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளும்மம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பை அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தூயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு திருமளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி காருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேன்ம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கும் வித்தகளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடும் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்கு போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வால்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாங்கள் கேட்பதெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
நந்தனைச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றும் இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகிறேன்
காப்பெனக்கு கையிலுண்டு கடமைகளை செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெலாந் தருவாள் சீர்பெருகு கௌரியம்மா
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களேல்லாம் ஏற்றியெம்மைப் போற்றிடுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்

கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்

முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர

ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே

காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

-முற்றும்-



இது விதி என்று பிறப்பு உண்டாகிறதோ? வாழ்வின் விதியும் அன்றே நிர்ணயிக்கப்படுகிறது. இதிலிருந்து எவருமே விலகிவிடமுடியாது. இதனை நாம் உணர்வோம். இறந்துபோன எம் உறவுக்காகப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்
## உடற்கூற்றுவண்ணம்

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்தன
தனனதனந்த தனனதனந்த
தானனதானன கானனதந்த-
தந்ததனதான தனதானை
ஒரு மடமாது ஒருவனுமாகி
இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி யொழுகிய விந்து
ஊறு சுரோகணித மீத கலந்து-
பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கபடமி தென்று
பார்வைமெய்வாய்செவி கலைகைகளென்று.
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பது மொன்றுநி றைந்து மடந்தை
உதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளுமறிந்து-
மகளிர்கள் சேனை தாவணை யாடை
மண்பட வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளிநகை யூறல் இதழ்மட வாரும்
உவந்துமு கந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப-
உடைமணி யாடை யரைவட மாட
வுண்பவர் தின்பவர் தங்கொள டுண்டு
தெருவி லிருந்து புழுதி யலைந்து
தேடிய பாலரோ டோடி நடந்து-
அஞ்சு வயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குருவுப தேச
முத்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறுபி ராயமும் வந்து-
மயிர்முடி கோதி யறுபதநீல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கு பணிக ளணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க-
மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டும ருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
மாயில் போலவர் போவது கண்டு-
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுத லாகு முதுபொரு ளாயி
ருந்த தனங்களும் வம்பி விழுந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து-
வன்மையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோதகு ரோதம டைந்து
செங்கை யினிலோர் தடியு மாகியே
வருவது போவ தொருமுது கூனு
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மிழந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல்வி டாமல் மொழிந்து
துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சுமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு-
கலியுக மீதில் இவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மசலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து-
தெளிவும் இராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சமும் அலைந்து மருண்டு
திடமு முலைந்து மிகவு மலைந்து
தேறிந லாதர வேதென நொந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
மேதினி வாழ்வு நிலதினி நின்ற-
கடன்முறை பேசும் எனவுரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு பொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமும் நாலுசு வாசமும் நின்று-
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே.
வளர்பிறை போல வெயிறு முரோம
முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து-
வலைகொடு வீசியுயிர்கொடு போக
மைந்தரும் வந்துகு னிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் காலம றிந்து-
பழையவர் காணும் எனுமய லார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேகவி சாரியு மென்று
பலரையு மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களப மணிந்து
பாவ மேசெய்து நாறுமுடம்பை-
வரிசை கெடாமல் எடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து-
விறகிடை மூடி யழல்கொடு போட
வெந்துவி ழுந்து முறிந்து நிணங்கள்
உறுகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறுமி லாத வுடம்பை-
நம்புமடி யேனை யினி யாளுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



16.07.2010 கும்பாபிஷேகம் - திருக்கதவு திறக்கப்பாடியபோது



16.07.2012 கும்பாபிஷேக பூர்ணாகுதி கொண்டுவருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவஸ்ரீ கதிரவேலு குமாரசாமி ஐயா அவர்களின் வாழ்க்கைச் சுவடு

நீர்வளமும் நிலவளமும் சீதோஷ்ணநிலையும் சிறந்தோங்கும் தேசம், ஆழிகடல்சூழ் ஈழமணித்திருநாடு. இதன் வடபால் அமைந்திருக்கும் வன்னிப்பிரதேசத்தின் வடமேல் திசையில் காடும், வயலும், கடலும் சேர்ந்தமைந்த பூமி பூநகரி. இதன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மன்னார் வீதியின் பன்னிரண்டாம் கட்டைச் சந்தியிலிருந்து மேற்கு ஏழுமைல் தொலைவில் காணப்படுவன பொன்னாவெளி, வேரவில், வலைப்பாடு கிராமங்கள்.

பாலும் தேனும் நித்தம் சொரிந்த பூமி பொன்னாவெளி. பால்மாடுகளின் கூட்டம் கூடித்திரியும் பூமி. ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் காலத்தில் பொன்னா வெளியிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்குப் பாலும் தயிரும் அனுப்பப்பட்டதாக மூத்தோர் கூறுவர். அக்கிராமத்து விநாயகர் அருளோடு சிவன் மற்றும் அம்பாளின் ஆட்சிகளில் விளைந்த தெய்வீக சூழலில் பிறந்து வளர்ந்த சண்முகம் கதிரவேலு, யாழ்ப்பாணத்து நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வெள்ளாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்டு மங்கைப்பருவமெய்திய அம்மை சிதம்பரம் அவர்களை வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். வளம்நிறைந்த வேரவில் பதியில், குடியேறி கமத்தொழிலில் ஈடுபடலானார். இனிமை கூடிய இல்லற வாழ்வின் பயனாக குஞ்சுப்புள்ளை, (அமரர்) நாகபூசணி எனும் பெண் பிள்ளைகளும் குமாரசாமி அவர்களும், தொடர்ந்து திருநீலகண்டன் (அமரர்) என்ற பெயரில் ஒரு கனிஷ்ட புத்திரனும் பிள்ளைகளாக அவனியில் தோன்றினர்.

வேரவில் ஊரின் பத்துப்பனைக் காணியில் வாழ்ந்த வந்த குமாரசாமி அவர்கள் இளமையிலே தந்தையாரை இழந்தாலும் தாயின் மன வைராக்கியத்தினாலும், உற்றார் உறவினர் ஒத்துழைப்போடும் சிறந்ததொரு பிள்ளையாக சகோதரர்களுடன் வளர்ந்து வரலானார். சிறிய வயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி மூத்தோரிடம் பாடம் கேட்டும் வேரவில் வரும் ஆசிரியர்களிடம் புராண இதிகாசங்களைக் கற்றும் தமது அறிவைப் பெருக்கி ஆளுமை மிக்கவராகத் தம்மை உருவாக்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940 களில் வேரவில் இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராக விளங்கிய கல்வயல் இராமுப்பிள்ளை எனும் பெரியோரிடம் ஊருக்குச் சென்று சனி, ஞாயிறு தினங்களில் பாடம் கேட்டு தம்மை வளர்த்துக் கொண்டார்.

வேரவில் வெள்ளிப்பள்ளத்து விநாயகருக்கு நாள்தோறும் பூசைசெய்யும் பாக்கியமும் இளைஞர் குமாரசாமிக்கு வாய்த்தது.

உரிய வயதில் திருமணம் செய்ய தாயாரும் உற்றாரும் வலியுறுத்த கொழும்புத்துறை மற்றும் கட்டைப்பிராய் வழிவந்த பெற்றாரைப் பெற்ற உத்தமியாம் செல்வலஷ்மி எனும் பெண்மணியை இல்லத்தரசியாக அக்கினிசாட்சியாக ஏற்றுக்கொண்டார். திருமதி குமாரசாமியின் மூத்த சகோதரர் திரு.நடராசா பூநகரி செட்டியாகுறிச்சி முனியப்பர் கோயில் பூசகர் ஆவார். இளைய சகோதரர் சபாரத்தினம் வவுனியாவில் வாழ்ந்து வருகின்றார்.மனோன்மணி,லீலாவதி (அமரர்) அன்னலட்சுமி மூன்று பெண் சகோதரர்ளனும் வாழ்ந்து வருகிறார்கள்.

இல்லறவாழ்வின் நல்லறத்தின் பயனாக ஏழு குமாரர்களைத் திரு திருமதி குமாரசாமி செல்வலஷ்மி தம்பதியினர் பெற்றுக்கொண்டு இறைபக்தியும் இறைபணியும் இறைவன் தொண்டும், வந்தாரை இன்முகத்துடன் வரவேற்கும் பண்போடு விருந்தோம்பலும் கூடிய சிறப்பானதொரு வாழ்வை மேற்கொண்டு வந்தனர்.

**"செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பான்**
**நல்விருந்து வானத்தவர்க்கு"**

எனும் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரின் வாய்மொழிக்கமைய விருந்தோம்பலில் சிறந்ததொரு தம்பதியினராய் இறுதிக்காலம் வரை விளங்கினார். பெரியார் குமாரசாமியின் சமூக உணர்வு காரணமாக பல்லவராயன்கட்டு கிராமசபை உறுப்பினராகவும், கிராமசபைத் தலைவராகவும் இருபத்தைந்து வருடங்களாகப் பணிபுரிந்தார். அவர்காலத்தில் வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு, பாலாவி, நாச்சிக்குடா, பல்லவராயன்கட்டு, வன்னேரிக்குளம், கிராஞ்சி, குமுழமுனை ஆகிய ஒன்பது கிராமங்களும் பல்லவராயன்கட்டு கிராமசபையில் உறுப்புரிமையைப் பெற்றிருந்தன. பல்லவராயன்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலையின் உருவாக்கம் அன்னாரின் தலைமையில் நடந்தேறியமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வேரவில் முகாமையாளராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வருடங்கள் கடமையாற்றி இவ்வூர் மக்களின் அபிமானத்தைப் பெற்றுக்கொண்டார். அரசியலிலும் தமிழ் உணர்வு சார்ந்து தமிழரசுக்கட்சியுடனும் தமிழ்க் கூட்டணியுடனும் இணைந்து பணியாற்றி ஊர் மட்டத்தில் விருந்தோம்பல் முதல் செய்ய வேண்டிய காரியங்களை மனைவி பிள்ளைகளுடன் ஆற்றி நின்றார்.

மிக இளைய வயதில் - 12 வயதில் - ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாகச் சன்னி பிடித்திருந்து 40 நாட்கள் காய்ச்சலில் தவித்து 41 ஆம் நாளன்று வேரவில் பிள்ளையார் கோயிலில் கிணற்றில் அள்ளி குளித்து பூசை செய்ததன் பயனாக உடல்நலம் தேறினார். அன்று முதல் இறக்கும் நாள் வரை விநாயகப் பெருமானின் நித்தியபூசைகளைப் பொறுப்பேற்று செவ்வனே நடாத்தி இறைஅருள் பெற்ற சிறப்புக்குரியவர் ஆனார்.
20ஆம் நூற்றாண்டின் 1960 களின் இறுதிநாளில் பெரிய கோயிலாகக் கட்டியிருந்த பிள்ளையார் கோயிலைப் புதுப்பித்து 1977 இல் முதல் முதல் கும்பாபிஷேகத்தை ஊரவர், உற்றார் உறவுகளின் உதவியோடு நிறைவேற்றி இறைபணியில் திளைத்திருந்தார்.

திருக்கேதீஸ்வரத்துக்குப் பாதயாத்திரை செய்வோர் பாலாவி, பொன்னாவெளி, வேரவில் ஊடாக வரும்போது அவர்களுக்குச் செய்ய வேண்டிய தாகசாந்தி, அன்னதானம் என்பவற்றை முன்னின்று நடாத்தியும், கிராம முன்னேற்றச் சங்கத்துக்கான கட்டிடம் கட்டுவதிலும், பாடசாலைக் கிணறு வெட்டுவதிலும் திரு இராமுப்பிள்ளை அதிபருக்கு ஒத்தாசை வழங்கியும் தமது சேவையை வழங்கி நின்றார்.

மேலும், முழங்காவில் முருகன் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடாத்தவும் அருள்பாலித்தது. அமரர் குமாரசாமியின் ஒன்றுவிட்ட மூத்த சகோதரர் பேரம்பலசுவாமிகள் கதிர்காம யாத்திரை மேற்கொண்டு திரும்பி வந்தபோது வேல் ஒன்றையும் கொண்டுவந்து கொடுத்தார். அதனை வைத்து கோயில் ஒன்றுகட்டும்படி வேண்டி அமரத்துவம் எய்தினார். மீதிப் பணிகளைப் பெரியவர் குமாரசாமி அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

தெய்வீகப் பணிகளில் பெரியாரின் ஈடுபாடு பல பரிமாணங்களைக் கொண்டது. பல்லவராயன்கட்டு பிரதேசத்தில் ஏழு ஐயனார் கோயில்கள் இருந்ததாகவும் அவை எல்லா இடமும் ஒரே நேரத்தில் பூசை நிகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் ஒரு ஐதீகம் உண்டு. அவற்றில் ஒன்று வேரவில் துத்தியில் ஐயனார் கோயிலாகும். அங்கு ஒவ்வொரு வருடமும் ஆனி பூரத்தன்று பொங்கல் நடப்பது வழமை. இரவிரவாக நடைபெறும் பொங்கல் நிகழ்வின்போது வீதியின் நான்கு மூலைகளிலும் பந்தங்கள் நாட்டி ஆயுதங்களான வில், அம்பு, வாள் என்பன கூட்டி வைக்கப்படும். கும்பங்கள் உலாவரும்போது பூசகர் ஆயுதங்களை எடுத்து ஆடும் காட்சியும், பல இடங்களில் அவற்றை வைத்து ஆடும் காட்சியும் ஈற்றில் பொங்கல் பானையைத் தூக்கி ஆட்டியபடி ஆடி ஆடி வீதி முற்றும் சுற்றும் காட்சியும் பொங்கலின் பூர்வீகச் சிறப்பை எடுத்தியம்புவன. பழையகால நிகழ்வுகளின் குறியீட்டுக் காட்சியே இச்செயற்பாடுகளாக இருக்கும். இத்தகைய கோயிலின் பூசை உரிமையைத் தொடர்ந்தும் பேணித் தமது உறவுகளான அமரர் ஐயம்பிள்ளை திரு.சிங்கம், அமரர் திருநீலகண்டன், திரு.குமாரசாமி சரவணமுத்து (கட்டப்பிராய்) ஆகியோரின் உதவியுடன் பூசை ஆற்றி வந்தார். துத்தியில் மரங்கள் நிறைந்த சூழலில் ஐயனார் வீற்றிருந்தமையால் துத்தியில் ஐயனார் என அழைக்கப்பட்டார். என்ற ஐதீகம் உண்டு.

வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகருக்கு கோயிலின் கும்பாபிஷேகத்தை மீண்டும் 1992 இலும் போர்க்காலத்துக்கு பிற்பாடு 2010 இலும் நிறைவேற்றி அமைதி அடைந்தார் அமரர் குமாரசாமி அவர்கள்.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அந்தவகையில் அமரர் குமாரசாமி அவர்களும் தமது வாழ்வை ஊரவர்க்குப் பயன்படும் வண்ணம் வடிவமைத்துத் தனது கமத்தொழில், வியாபாரத் தொழில் மற்றும் கோயில் கைங்கரியங்கள் எல்லாவற்றிலும் குடும்பத்தினரை ஈடுபடுத்தி விருப்புடன் இசைவாக்கி முக்கியமாக திருமதி செல்வலஷ்மி குமாரசாமி அவர்களின் கைவண்ணம் மூலமாக அனைத்து நிகழ்வுகளிலும் விருந்தோம்பல் பண்பாட்டைப் பேணித் தமது ஏழு புத்திரர்களையும் பவுத்திரமாக வளர்த்தெடுத்தார்.

மூத்த புத்திரன் சிவஸ்ரீ சுமுகலிங்கம் அவர்கள் ஆரம்பக்கல்வியை வேரவில் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்று தொடர்ந்து ஆசிரியராகி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கற்று பயிற்றப்பட்ட ஆசிரியராகி, தஞ்சாவூர் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்து வெளிவாரி மாணவனாகி பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைமாணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தில் முதுகலைமாணிப்பட்டத்தையும் பெற்று இன்று ஒரு சிறந்த சமய சொற்பொழிவாளராகத் திகழ்கின்றார்.

இவர் சரசாலை வைத்திலிங்கம் அவருடைய மகள் இரத்தினேஸ்வரி அவ்களை திருமணம் செய்து சிவஸ்ரீ குரவரதன், அபிஷேகசாயினி ஆகிய இரு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டாவது மகன் வரதராஜன் ஆரம்ப இடைநிலைக் கல்வியை வேரவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் பெற்று தொடர்ந்து ஒரு பெரும் வியாபாரியாக சிறப்படைந்து மீசாலையைச் சேர்ந்த தம்பையா அவர்களின் மகள் வசந்தமலர் அம்மையாரைத் திருமணம் செய்து அகிலன், கல்பனா எனும் இரு பிள்ளைகளைப் பெற்று அமரராகினார். (1987)

மூன்றாவது மகனான சண்முகலிங்கம் ஆரம்ப இடைநிலைக் கல்வியை வேரவில் இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையில் பெற்று வியாபாரத் தொழில் புரிகின்றார். தனது மாமன் சோமசேகரர் அவர்களின் மகளான பாக்கியலஷ்மியைத் திருமணம் செய்து ஹரிகரன் (அமரர்), கஸ்தூரி பெற்று வாழ்ந்து வருகின்றார்.

நான்காவது மகன் யோகராசனும் கல்வியை வேரவில் பாடசாலையில் பெற்று கமத்தொழில் புரிந்து வருகின்றார். அவர் வறணியைச் சேர்ந்த நடராசா அவர்களின் மகள் மனோகரி மங்கையை மணஞ்செய்து ஜங்கரன், ஷர்வாணிக்கா எனும் இரு பிள்ளைகளைப் பெற்று விநாயகர் பணியையும் பார்த்துச் சிறப்புற வாழ்ந்து வருகின்றார்.

ஐந்தாவது மகனான கதிரவேற்பிள்ளை வேரவில் பாடசாலையில் கல்வியைக் கற்று கமத்தொழில் புரிந்து வருகின்றார். அவர் முழங்காவிலைச் சேர்ந்த பொன்னுச்சாமி அர்களின் மகள் மருத்துவதாதியான சாந்தி அவர்களை (அமரர்) மணம் செய்து விஷ்ணுகாநத், ஹேமகாந்த், விமலகாந்த் மூன்று புத்திரர்களைப் பெற்று வாழ்ந்து வருகின்றார்.

ஆறாவது மகனான சண்முகதாசன் கல்வியை வேரவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையிலும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும் பெற்று பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்து இன்று சுயதொழில் வியாபாரம், கமம் என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றார். அவர் பூநகரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் தேவகியை மணம் செய்து கேனுஜா, கேனுஜன் இரு பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்து வருகின்றார்.

கனிஷ்ட புத்திரன் பரமநாதனும் வேரவில் மற்றும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கல்வியைப் பெற்று கமம் மற்றும் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். அவர் தொண்டைமானாறைச் சேர்ந்த இராசகுரு அவர்களின் மகள் ரஞ்சினியை திருமணம் செய்து கயானந்தவதனி, துஷ்யந்தன், கஜவதனா மூன்று பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்து வருகின்றார்.

இவ்வண்ணம் குடும்பம், பிள்ளைகள் சமூகம் சமயம், தமிழ் என வாழ்த்து தனது 86 ஆவது வயதில் (25.06.2012) இவ்வுலகை நீத்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**



சிவதொண்டு செய்வாற்கு செல்வம் உண்டு, கல்வி உண்டு, சிந்தை தெளிவுமுண்டு, சினமில்லை, அச்சமில்லை, தீய பிணி நோய் இல்லை, பழியூண் உணவுமில்லை, பொறுமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2011ம் ஆண்டு சதாபிஷேகம் நடைபெற்ற போது.



2011ம் ஆண்டு சதாபிஷேகம் நடைபெற்ற போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவர் சுவாமிகள்
மகாதேவா ஆசிரமம்,
ஜெயந்தி நாகர்,
கிளிநொச்சி.

# காலத்தின் தேவை உணர்ந்தவர்

அனைவருக்கும் அன்பும் ஆசியும் கிடைப்பாதாகுக

சிவஸ்ரீ கதிர்வேலு குமாரசாமி ஐயா அவர்களின் பூவுலக வாழ்வு நிறைவாகிய செய்தியறிந்தேன். அமரர் என்றும் பேறுபெற்றுள்ளர் குமாரசாமி ஐயா. வெள்ளிப்பள்ளம் என்று சொன்னால் குமாரசாமி ஐயா, அவர்களின் முகம் முன்னே நின்று ஆனந்தமயப்படும். தெய்வீகப் பொலிவாளர் சைவப் பெருமகனார் இறைபதம் அடைந்தது காலவயதால் ஏற்பட்ட மாற்றமாகும். அவர்பணியை அவர் பிள்ளைகள் தொடரும் பக்குவமாக தன்னைப் போன்று வளம்படுத்தி வளர்த்துள்ளார். இவ்வகையில் விநாயகப் பெருமானின் அரவணைப்பை ஏற்றார் குமாரசாமி ஐயா. அவர் பணியை தொடர வேண்டியது புத்திரர்களின் தலையாய கடமையாகும். காலத்தின் தேவையறிந்து 2010ஆம் ஆண்டு கும்பாபிஷேகப் பெருவிழாவை நிறைவாக்கிய பெருமகனார். பலன் கருதாது சேவை செய்யும் மனப்பக்குவத்துக்கு அவர் ஆற்றிய பணிகள் கண்முன்னே சான்றாதாரங்களாக காட்சி கொடுக்கின்றன. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீமத் கணேசானந்த
மகாதேவ சுவாமிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமகுருவின் செய்தி

இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கைத் தீவின் வடபால் வந்தாரே வரவேற்கும் விருந்தோம்பாலும் வீரம் நிறைந்திருக்கும் வன்னி மண்ணில் நீர்வளமும் நில வளமும் அமையப் பெற்ற வாழைகளும் தென்னஞ் சோலைகளும் சூழ்ந்திருக்கும் வேரவில் எனும் பசுமை மிக்க ஊரிலே பூர்விகமா விநாயகப் பெருமானுக்கு பூஜையைக் கடமையினைச் செய்து வந்த சிவஸ்ரீ குமாரசாமி ஐயா அவர்கள் இறைபதம் அடைந்தமை கண் கலங்க வைத்துள்ளது.


தனது வாழ்நாளினை ஆன்மீகப் பணியிலே கழித்து வந்த ஐயா அவர்கள் தனது குழந்தைகளையும் அவ்வழியிலே ஈடுபடுத்தி வை நெறி தவறாது வாழ்ந்து இறைவனடி சேர்ந்துள்ளார் என்பது மிகையாகாது.

**பெருநல் உளனொருவன் இன்றில்லை**
**என்றும் பெருமை உடைத்திவ் வுலகு.**

என வள்ளுவர் பகர்ந்தாலும் இவரை நினைத்து மனவேதனை அடைவதுடன் இவரது இழப்பினால் கலங்கி நிற்கும் குடும்பத்தினர் அமைதியும் சாந்தியும் அடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவஸ்ரீ ஜே.ஜெயதீஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்.
ஸ்ரீ முருகன் ஆலயம்
குமரபுரம் பரந்தன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்த பாசனி சமேத சந்திரசேகர வாரிவனநாதர் சுவாமி தேவஸ்தானம், சாவகச்சேரி

## சைவசமய கலாச்சாரத்தின் காவலன்

அமரர் சிவசிறி கதிரவேலு குமாரசாமி ஐயா அவர்கள் அகில இலங்கையிலும் வாழுகின்ற சைவசமய காலச்சார நெறிப்படுத்துனர்களுள் ஒருவராகத் திகழ்ந்துள்ளார் என்றால் மிகையாகாது. பூநகரி பிரதேசத்தில் பொன்னாவெளி, வேரவில், கிராஞ்சி, பாலாவி, வலைப்பாடு ஆகிய கிராமங்களில் வாழுகின்ற மக்களுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்துள்ளார். சுத்தசைவ போச முறையைக் கைக்கொண்டு சிவபூசகராகவும், புராணிகராகவும், ஓதுவாராகவும், தலைசிறந்த நிர்வாகியாகவும் வாழ்ந்து காட்டியுள்ளார். பல்லராயன்கட்டு கிராமசபையின் உறப்பினராகப் பல ஆண்டுகள் சேவை செய்துள்ளார். தன்னுடைய வாழ்நாளில் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு அரும்பணி ஆற்றிய வகையில் வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானம் வேரவில் துத்தியில் ஐயனார் தேவஸ்தானம், முழங்காவில் ஏற்றம்பிட்டி முருகன் ஆலயம், முழங்காவில் விநாயகர் ஆலயம், பூநகரி செட்டிய குறிச்சி நல்லதண்ணீகட்டு முனியப்பர் ஆலயம் என்பன இவருடன் தொடர்புடைய ஆலயங்கள் ஆகும்.

குறிப்பாக முழங்காவில் முருகன் ஆலயம் இவரால் அமைக்கப்பெற்று இவரது சகோதரரான பேரம்பலசுவாமியாருக்கு கதிர்காமத்தில் தரிசனத்தில் கிடைக்கப்பெற்ற வேல் இங்கு பிரதிஸ்டை செய்யப்பட்டது. வேரவில் வெள்ளி பள்ளத்து வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானம் மகோற்சவம் நடைபெறும் ஆலயவரிசையில் முன்னணியாக திகழ்கிறன்றது என்றால் அமரர் குமாரசாமி ஐயா அவர்களின் அளப்பரிய சேவையினால் என்றால் மிகையாகாது. இவ்வகையில் இவர் சைவசமய கலாச்சாரத்தின் காவலனாக இருந்துள்ளார் என்பதை இத்தருணத்தில் வெளிப்படுத்துவதில் பெருமையடைகின்றேன். அன்னாரின் மறைவுச் செய்தியானது சைவசமய உலகிற்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதமகுரு சிவப்பிரமசிறி
தட்சணாமூர்த்தி சர்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்ச்சோலை"
கிராம்புவில்,
சாவகச்சேரி.

## "தக்கார் தகவிலர் என்பதெல்லாம் அவரவர் எச்சாத்தான் கொள்ளப்படும்"


அமரத்துவம் அடைந்த சிவஸ்ரீ குமாரசாமி ஐயா அவர்கள் இப்புவியில் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியது. சைவசமய ஆசார அனுட்டானத்துடன் வாழ்ந்தார் என்பது அவரது சிரேஷ்ட புத்திரனையும் சிரேஷ்ட பேரனையும் பார்க்கின்றபோது தெட்டத் தெளிவாக தெரிகின்றது. இவரது அயராத முயற்சி வேரவில் வெள்ளிப் பள்ளத்து விநாயகரது வளர்ச்சியிலிருந்து தெரிகின்றது.

இவரது சமய சேவை பூநகரி வாழ் சைவ மக்களிலும் ஆலயங்களிலும் தெரிகின்றது.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவஸ்ரீ.வி.பாலகுமாரக் குருக்கள்,
(பிரதமகுரு, சக்கரத்தாழ்வார் தேவஸ்தானம்)
சாவகச்சேரி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைமாறு கருதாத சைவப்பெரியார்

அமரர் சிவஸ்ரீ கதிரவேலு குமாரசாமி ஐயா அவர்கள் வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதம அறங்காவலராக, காப்பாளராக, பூசகராக தன் வாழ்நாளைக் கழித்துள்ளார். அவரின் வாழ்க்கை இறையர்ப்பணமானது. ஆலய பூசைத்திரவியங்கள் செலவுகள் கொடுத்தாலும் சரி கொடுக்காது விட்டாலும் சரி நித்திய, நைமித்திய பூசைகளை ஆற்றிய பெரியாராவார். இப்பணியை நிறைவாக்கியது அவருக்குத்தான் யாருடைய உபயம் என்பது தெரியும். அப்படியான பெருமகனார், இவ்வாறான சேவை செய்ய இன்று யாரும் இல்லை. இவரின் இடைவெளி யாராலும் நிரப்பி ஈடுசெய்ய முடியாது. இவரின் மறைவு சைவ உலகுக்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ. வீ. தேவகுமார் ஐயா,
வாரிவனம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
ஆதிசிவ வீரபத்திரர் ஆலயம்,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவ்வுதை

பொதுவாக எந்தவொரு மங்கள நிகழ்வுக்கும் அந்த மங்கள காரியத்தில் ஈடுபவர்களை வாழ்த்துவது உலகில் இயல்பு சைவ சமயத்தவர்களாகிய நார் பூர்வக் கிரியை, அபரக் கிரியை பொதுவைபவங்கள் என பல வகை காரியங்களை நாம் அன்றாட வாழ்வில் மேற்கொள்கின்றோம் அப்போது குரு வானவரோ அல்லது பெரியவர்களோ நம்மை வாழ்த்தும் போது நமது சிரசிலே அவ்வுத்தை என்கின்ற மஞ்சள் கலந்த அரிசியைத் தூவி வாழ்த்துவார்கள் (ஷதம்) குத்துவது (அவ்வுதம்) குத்தப்படாதது உலக்கையால் குத்தாத அரிசி அவ்வுதை எனப்படும் அதில் முளை இருக்கும் நெல்லை மெல்ல உரித்து அதில் மஞ்சளும் பன்னீரும் மலர் இதழும் தாவி தாவும் போது செய்யப்பட்ட காரியத்தின் வலனும் ஆசியும் நமக்குகிட்டுகின்றது .

**நவராத்திரி தினத்தில் என்எண்ணை சிட்பு சனிஸ்வரருக்கு ஏன்றலாமா?**

விரததினத்தில் காலையில் எழுந்து ஸ்நாநம் செய்ய வேண்டும். ஸ்நாநம் இருவகைப்படும் ஒன்று சாதரணமாக சுத்த ஜலத்தில் தலையில் ஸ்நாநம் செய்வது மற்றது சனிக்கிழமைகளில் விரதம் அனுஷ்டிக்கும் பொருட்டு நல் எண்ணை தேய்த்து தேசிக்காய், அரைப்பு வைத்து ஸ்நாநம் செய்து ஆலயத்திற்கு சென்று சனிஸ்வர பகவானுக்கு எள்ளு தீபம் ஏற்றி வழிபடுவது வழக்கம் ஆனால் ஷட்டிவிரதம் சதுர்த்தி விரதம் காத்திகை விரதம் மற்றும் விரதங்களுக்கு தலைக்கு எண்ணை வைப்பதோ வாசனை திரவியங்கள் வைப்பதோ கூடாது இன்னும் சிறப்பா சொல்லப்போனால் சனிக்கிழமை விரதத்தை தவிர்ந்த ஏனைய விரதங்களுக்கு புளுங்கல் அரிசி, வெங்காயம்,பூடு, முருக்கங்காய், நீத்துக்காய், சுரக்காய் ஆகியன தவிர்க்கப்பட வேண்டியன ஆனால் சனிக்கிழமை விரதத்தில் இவைகளை சேர்க்கலாம்.

நவராத்திரி விரதத்திற்குள் வரும் சனிக் கிழமைகளில் நவராத்திரி விரதம் இருப்பவர்கள் சனிக்கிழமை விரதம் இருப்பதோ எள்எண்ணை தீபம் ஏற்றுவது செய்யக் கூடாது.இற்றைக்கு இருபது வருடத்துக்கு முன் நவராத்திரி தினத்தில் நவராத்திரி விரதம் இருப்பவர்களைத்தவிர்ந்த பாலர் முதல் வயோதிபம் வரை தலைக்கு எள்எண்ணை வைத்து ஸ்நாநம் செய்து சனிஸ்வர பகவானுக்கு எள்எண்ணை வைத்து ஸ்நாநம் செய்து சனிஸ்வர பகவானுக்கு எள்எண்ணை தீபம் ஏற்றித்தான் சாப்பிடுவார்கள்.

ஆகமங்களோ புராணங்களிலோ வேறு நூல்களிலோ நவராத்திரி தினத்தில் எள்எண்ணை தீபம் ஏற்றக்கூடாது ஒரு சில விளக்க குறைவுகளினால் குப்படி ஏற்றக்கூடாது என்கின்ற கொள்கை பரவுகின்றன இது வருத்ததக்க விடயமாகும்.

சுபம்

சபரிமலை குரு சுவாமி
பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவ சிவாச்சாரியார்
உரும்பிராய்
சிவதர்மசாஸ்த்தா ஸ்தானிகர்
கோண்டாவில் ,மேற்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி உதவி அரசாங்க அதிபரின் இரங்கற் செய்தி

வேரவில் கிராமத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ கதிரவேலு குமாரசாமி அவர்கள் காலமான செய்தி கேட்டு கடும் துயர் கொண்டேன். எமது மக்கள் சொல்லொணா துன்பங்கள் அனுபவித்து மீண்டு வந்த வேளை இறைபணியில் தொடர்ந்தும் தம்மையும் தமது ஊரவர்களையும் ஈடுபடுத்துமுகமாக அன்னார் வேரவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னின்று நடாத்தியமை எல்லோராலும் பாராட்டுப் பெற்றது.

அதுபோல அவர் பழைய காலம் போல் புராண படன நிகழ்வுகளையும் மீளத் தொடங்கியிருந்தார் என அறிந்து மனநிறைவடைந்தேன். ஏனெனில் இதுபோன்ற புராண படன நிகழ்வுகளை கோயில்களில் நடாத்துவோர் இன்று அருகிவிட்டனர். அமரர் குமாரசாமி போன்றோர் தமது ஆத்மீக பலத்தால் இந்நிகழ்வை நடாத்தி ஊருக்கும் மக்களுக்கும் சைவத்துக்கும் தமிழுக்கும் இலைமறை காயாக பணி புரிந்து வந்தமை சிறப்புக்குரியது.

இன்று அன்னாரின் மறைவு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் என் ஆறுதலைக் கூறுகின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.



சுப்பிரமணியம் வசந்தகுமார்
உதவி அரச அதிபர்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவா!

மரணத்திற்கு மரணம் இருந்தால்
நீ என்றோ மரணித்திருப்பாய்
மரணத்திற்கு மரணமும் இல்லை
உனக்கு(ம்) மரணமும் இல்லை
நீ சிரஞ்சிவி
உன் மகிமை தான்
பிரபஞ்ச வாழ்வும் பிரபஞ்ச மரணமும்
களைப்படைந்த
அலுப்புத் தட்டிய
சலிப்பு மிகுந்த
ஆன்மாவிற்கு நீ கொடுக்கும்
ஆறுதலும் அமைதியுந்தான் மரணம்
ஒருவர் ஆறுதலுற்றால்
அதற்கு நாம் அழுவதா
இதுவா பண்பு
ஆன்மா சாக முந்தி
ஆண்டவன் பிழைப்பித்தானே
அதற்கு நன்றி வேண்டாமா

(க.வீ)
-ஆதங்கனுக்குக் குரு-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V.A. Thangkamayl
A.M.S.S.T.(Lond.), F.S.I. (Sri Lanka), (B.A) Sri Lanka. Valuer.
Licensed Surveyor, Leveller Quantity Surveyor, Court's Commissioner,
Sithantha Pandit & Saivappulavar. Dip. Ci. Eng. Quantity Syr.

PLAN NO }
வரைபட இல } 2002-06-30.
Tharikkapattu, Malisanthy,
vathiry, Karaveddy.

**சத்+சித்= ஆனந்தம் (ஃகுரு)**

"தந்தை தாய் பேண்"
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
தந்தை யோடு அறிவு போம்...
தந்தையைப் போல் தனயன்

'தந்தை தாய் குரு" எனும் சொற்றொடர்கள் எம்முள் நீள அகல ஆத இடம் பிடித்து உள்ளது.

**சத் என்பது சத்தியம்**
**சித் என்பது சித்தம்**

சத் எனும் சத்தியத்தை சித் எனப்படும் சித்தத்தால் அறியப்படும் பொழுது ஆனந்தம் ஏற்படுகின்றது. (சத்+சித்=ஆனந்தம்) தந்தை தாய் குருவிடம் சேர்ப்பிக்கும் பொழுது தெளிவு அடைகிறோம்.திருமந்திரம் அஃதே. தந்தையின் கடன் அவையத்து முந்தி இருக்கச் செய்தல்.தனயனின் கடன் இன்னார் பிள்ளை எனச்செய்தல்.திருவள்ளுவர் தெளிவு படுத்துவர்.இந்த வகையில் அன்பர் அமரர் கதிரவேலு குமாரசாமி சைவ வேளாள பௌராணிக ஒழுக்க சிலராய் புராண இதிகாச ஆகம வாழ்வு அன்பில் வாழ்ந்து அன்பாய் தன் கடன் பணி செய்து இன்று உடம்பிற்கு ஒய்வு கொடுத்து அத்துவித வஸ்த்து வாகிய இறைவனோடு அத்துவிதப்பட்டு ஆத்ம சாந்தி எய்தி உள்ளார்.ஔவையை விநாயகர் மேலாமிடம் சேர்த்தவாறு அமரர் அவர்களை பூநகரி வெள்ளிப்பள்ளத்து விநாயகர் வீடுபேறு உய்வித்தார் என்பது எம் துணிவுஃ தும்பிக்கை நம்பிக்கை.

அவர்தம் எச்சங்கள் அவர் பணியை தொடர்வர். அஞ்சல் ஓட்டம் போல இது ஒரு வாழ்க்கைச் சக்கரம் ஆக நாம் போம் அளவும் இட்டு உண்டு அறம் செய்வோமாக. அவர் காட்டிய பாதையை தடம்பதித்து நாம் தொடர்வோமாக.

ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ"......எனும் ஔவை கூற்று என்னே பொருத்தம்.

உள்க உணர்க சாந்தி

இவண்
வ.ஆ. தங்கமயில்

பி.குறிப்பு
"தட்சிணா மூர்த்தி ஸமாரம்பம்
ஆதிசங்கராச்சார்ய மத்யமாம்
வந்தே குரு பரம்பராம்" ஆதி சங்கரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு, அமைதி, ஆசாரம், ஆத்மீகம் என வாழ்ந்து காட்டியவர் அமரர் கதிரவேலு குமாரசாமி

**"பெருமைக்கும் ஏனைய சிறுமைக்கும் அவர் தம்**
**கருமமே கட்டளைக்கல்"**

எனும் திருவள்ளுவரின் பொய்யாமொழிக்கேற்ப பெருமைமிக்க வாழ்வு எப்படி வாழமுடியும் எனத் தனது கருமங்களுடாகக் காட்டி அமரத்துவம் எய்தியவர் பூநகரி வேரவில் கதிரவேலு குமாரசாமி அவர்கள். பழம்பெரும் ஊராம் சைவம் தமிழ் தழைத்தோங்கிய பதியாம், பால், தயிர், தேன் நிறைந்திருந்த கிராமமான பொன்னாவெளியைப் பூர்வீகமாகக் கொண்ட கதிரவேலரின் மூத்த புத்திரனாக இவ்வுலகில் மனிதப் பிறவி எடுத்து "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று "வானுறையும் தெய்வம்" ஆகியவர் பெரியவர் குமாரசாமி அவர்கள்.

சிறு பராயம் தொட்டே தெய்வீக உணர்வு வாய்க்கப்பெற்று தந்தை தாயுடன் வாழ்ந்த பதியாம் வேரவில் வெள்ளிப்பள்ளத்து நாயகன் வீரகத்தி விநாயகரின் பூசைக்கருமங்களை 12 வயது முதல் ஆற்றும் பாக்கியத்தைப் பெற்றவர். வேரவில் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சாவகச்சேரி கல்வயல் இராமுப்பிள்ளை ஆசிரியரிடம் புராண இலக்கியப் பாடங்கள் கேட்டு கலைஞானத்தை வளர்த்தெடுத்து புராணபடனம் எனும் கைங்கரியத்தை தமது வேரவில் பிள்ளையார் கோயிலிலே அமரத்துவம் எய்தும் வரை மேற்கொண்டிருந்தவர். நித்திய பூசை முறைமைகளைச் சரிவரப் பேணிய பெருந்தகை. பிள்ளையாரின் கும்பாபிஷேகம், கொடியேற்றம் முதலான தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா உள்ளடங்கலான மகோற்சவ பாரம்பரியங்களை நடாத்த உறவுகள், ஊர்மக்களுடன் இணைந்து ஏற்பாடுகளைச் செய்த செயல்வீரர்.

வீடு, குடும்பம், கமம், வியாபாரம் எனும் சுயவாழ்வு வட்டத்தினையும் சிறப்புற ஒழுங்குபண்ணியதோடு சமூகம், கல்வி, ஆத்மீகம் சார்ந்த செயற்பாடுகளை இயல்பான ஒழுங்கிலே வடிவமைத்து செயற்பட்டவர். சமூக மட்டத்தில் பல்வராயன்கட்டு, கிராமசபை உறுப்பினராக தலைவராக, கிராமமுன்னேற்றச் சங்க தலைவராக, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளராக, அரசியல் கட்சித் தொண்டராக இயங்கியதோடு வேரவில் பாடசாலை அபிவிருத்தியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து செயற்பட்டவர். அதிபர் இராமுப்பிள்ளை காலந்தொட்டு (1940கள்) இறுதிக்காலம் வரை பாடசாலையில் கிணறு வெட்டுவதிலிருந்து கட்டிடம் போடுவது, பிற ஊர்களில் இருந்து சேவைபுரிய வரும் ஆசிரியர்களுக்கு உணவு, உறைவிடம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது எனப் பல தொண்டுகளை விளம்பரம் இல்லாது செய்து வந்த பொதுநல சேவையாளர்.

ஊரின் சிறப்புக்காக ஆத்மீகம் சார்ந்த செயற்பாடுகளை வேரவில் விநாயகர் ஆலயம், ஐயனார் கோவில், முழங்காவில் முருகன் ஆலயம் மற்றும் பொன்னாவெளி கோயில்கள் ஊடாக மக்களுடன் இணைந்து முன்னெடுத்தவர். ஒரு பண்பாட்டுக் கருவூலமாக, வேரவில் கிராமத்தின் அடையாளமாக திகழ்ந்தவர் பெரியார் குமாரசாமி அவர்கள்.

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்**

எனும் திருவள்ளுவரின் திருக்குறளின் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர். இன்று அவர்தம் பிள்ளைகள் நல்வழியில் தந்தைவழி பேணுகின்றார். மூத்த புதல்வர் தந்தை, தாய் சிந்தையைக் கருத்திற்கொண்டு இளைய சகோதரர்களையும் அணைத்துக்கொண்டு சமூக, சமய கல்விப் பணிகளைத் தொடர்கின்றார்.

கல்விப் பணிக்காக யான் வேரவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு 1985 இல் வருகைதந்த வேளை அன்னாரின் இன்முகமும் பரிவும் ஆதரவும் இருந்தமையினால் 3 வருடங்கள் கல்விப்போதனை, மாலைநேர ஆங்கில வகுப்புக்கள், முதல்முதலாக இல்லவிளையாட்டுப் போட்டி, பாடசாலைக் கீதம் (வீரமணி ஐயர் இயற்றியது) பாடசாலை இலச்சினை, இல்லங்களுக்கான பெயர்கள், கொடிகள், புதிய விளையாட்டு மைதானம் (ஊரவர் உதவியுடன்) கலைவிழா எனப் பலமட்டங்களில் பணியாற்றும் உத்வேகம் வாய்த்தது.

மிக வரட்சியான காலங்களிலும் மரக்கறிகள் கிடைக்காத போதும் திருமதி குமாரசாமி அவர்களின் கைவண்ணத்தில் ஆக்கப்பட்ட காட்டினில் இருந்து பெறப்பட்ட குருவித்தலைப் பாகற்காய்ப் பிரட்டலும், வட்டுக் கத்தரிக்காயின் குழம்பும் மேலும் மேலும் பாடசாலைப் பணியை முனைப்புடன் ஆற்ற வழிவகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்ற திருக்குறளுக்கு ஏற்ப விருந்தினர் முகம் மலரும் வண்ணம் உபசாரம் செய்த ஏந்தல் அவர். அன்னார் இன்று அமரத்துவம் அடைந்தாலும் அவரது புகழ் என்றும் எம்மவர் மனங்களை விட்டு நீங்காது.

"செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பாள்
நல்விருந்து வானத்தவர்க்கு"

இன்று வானத்தவர்க்கு நல்விருந்தாகிவிட்ட அமரர் குமாரசாமி அவர்களின் ஆத்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

முன்னாள் ஆசிரியர் கலாநிதி
கந்தையா ஸ்ரீகணேசன்,
1985 - 1987 சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர்,
கிளி/வேரவில் அரசினர் இந்து
தமிழ்க்கலவன்பாடசாலை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
04.07.2012.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரவிலில் வாழும் குடிகளின் கலங்கரை விளக்கம்

முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழிக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டி தனது 86வது வயதில் புகழுடம்பெய்திய சிவஸ்ரீ குமாரசாமி ஐயா அவர்களை வேரவில் கிராமம் இன்று இழந்து பரிதவிக்கின்றது. முயற்சித் திறனும் தெய்வபக்தியும், தெய்வ ஆற்றலும் இடையிலாத உழைப்பும், தேனியெனும் சுறுசுறுப்பும், தெய்வ பக்தியும், திட்டமிட்டு செயலாற்றும் தன்மையும், எதிர்ப்புக்களுக்கு ஈடுகொடுத்து நிற்கும் திட்பமும், பரந்த பல்துறை அறிவுப் பலமும், அவரவர் பண்பறிந்து ஆற்றும் பாங்கும், வினைத்திறனும் மிக்கவர்.

இவர் வேரவில் கிராமத்தின் முன்னோடி. இவராற்றிய பணி பல்வேறு பரிமானங்களைக் கொண்டது. நீதிபதியாக, வேரவிலின் முகவரியாய் இருந்த குமாரசாமி ஐயா அவர்களே.

வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பூசகராய் இருந்து ஆலயம் உயர்ந்த நிலையினை அடைவதற்கு காலாய் இருந்தவர். தன் பிள்ளைகளின் மூத்த மகனான ஆசிரியர் சுமுகலிங்கத்தோடு நான் அவ்விடம் சென்றிருந்த போது "நீங்கள் ஏதாவது எனக்கு செய்ய வேண்டுமென்றால் ஊர்மக்களோடு சேர்ந்து கோயிலைக்கட்டி கும்பா பிஷேகம் செய்ய உதவி செய்யும்படி கோரினார்.

அந்தளவிற்கு தன் பிள்ளைகளையே தன் கடமைகளை கோயில் ஊடாக பார்த்தவர். சுகயீனமுற்று மூத்த மகனோடு கோப்பாயில் இருந்த காலத்தில் அவர் என்னிடம் கூறிய கருத்து யாதெனில் தான் இறந்தால் எனதுடல் வேரவில் மணல்காட்டு சுடலையில் தான் எரிக்க வேண்டும். நான் பிறந்த, வாழ்ந்த மண்ணிலேயே தான் எரிய வேண்டும் என்று என்னையும் சாட்சியாக்கி பிள்ளைகளிடம் கூறியுள்ளார். அந்த வகையில் வேரவில் மண்ணில் அவர் கொண்ட பற்று உறுதியானது.

கோயில் வாசலில் குடுகுடு என ஓடியோடி திரியும் ஐயா அவர்கள் உள்ளூர் பஞ்சாயத்துப் போல் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நீதிபதியாய் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு காரியத்தையும் முன்னெடுப்பதாய் இருந்தால் கஸ்ரமான காரியமாக இருப்பினும் "முடியும்" என்ற எண்ணத்தோடு முன்னின்று செயற்படுத்துவார். நீண்ட புராண வரலாற்றைப் படித்து பயன்சொல்லும் திறனும் பாடமாக்கியே வைத்திருக்கின்றார்.

இந்த ஊர் மக்களின் வழி நடத்தும் தலைவன். தொடர்ந்து பிரதேசசபை தலைவராக, கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராக இருந்து ஊர் வாசிகளுக்கு பங்காற்றியவர். வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் வளர்ச்சியில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்தவர். வேரவிலிற்கு புதிதாய் நியமனமாகிப் போகும் உத்தியோகத்தர்கள் அறிந்து கொண்டுபோக வேண்டிய ஒருவர் குமாரசாமி ஐயா. அவரிடம் சென்றால் சரி. மிகுமதி அவர் பொறுப்பு உடனே சாப்பாடு. பின் என்னென்ன தேவையோ அவ்வளவும் அவர் வாய்ச்சொல்லில் நடக்கும்.

நான் அதிபராக வேரவில் இந்துவில் கடமையாற்றிய வேளையில் யாராவது பாடசாலைக்கு வந்து சாப்பாடு கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் உடனே எத்தனைபேருக்கு சாப்பாடு தேவை என்று ஆளை அனுப்பினால் உடனே உபசரிப்பு, எல்லோருக்கும் சாப்பாடு வழங்கும் பண்பு அந்த குடும்பத்திற்கே தனி சிறப்பு. ஐயாவின் துணைவியாரும் அந்தளவிற்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டார்.

நல்ல நீதிபதியாய், தலைவனாய், சமூக சேவகனாய், கோயில் பூசகராய், நல் தந்தையாய் வாழ்ந்து காட்டிய கிராமத்தின் வழிகாட்டி என்ற ரீதியில் ஆலோசனைகளும் மதிவாணராகவும் இருந்தார். நிறைகுடம் தளம்பாது பெருமைக்குரிய நற்குண நற்ச் செயல்கள் நிறைந்த ஐயா அவர்களின் ஆத்மா சாந்தி நிலையில் இறைவனோடு ஒன்றித்திருக்க நாமும் அவரின் ஆத்மா சாந்தியடை பிரார்த்திப்போமாக.

**இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் தாற் வாழ்க!**

துரைராசா இளங்குமரன்
விரிவுரையாளர்
வவுனியா தேசியற் கல்லூரி,
முன்னாள் அதிபர்
கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் நன்றே நின்று நிலைக்கும் பொன்றாத புகழாளர் சிவசிறீ க.குமாரசாமி அவர்கள்

கறங்கெனச் சுழன்று கடந்திடும் பொழுதானது நாளென நகர்கின்றபோது வாழ்நாளில் சிறிதளவை அறுத்துச் செல்லும் வாளாக விளங்குவதை உண்மை உணர்ந்த உயரிய உத்தமர்களனறி மற்றவர்கள் சற்றேனும் உணரார். இதனைத்தான்

**"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்"**

என்று என்றொருளாள் நன்றே கூறிச் சென்றுள்ளான். வாழ்வைக் குறைக்கும் வாளே நாள் என்ற உணர்வை என்றென்றும் நன்றே சிந்தையில் சேர்த்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் வண்மையரான திண்மையர் இடையறா இயல்பில் வாழ் நாளை வீழ் நாள் ஆக்காது அர்த்தமுள்ள அருள்நாளாக்கும் தன்மையில் செயற்கரிய செயல்புரிந்து, "பெரியர்" என்று பேசும் பெற்றிதனை அரிய வகையில் அடைந்து கொள்கிறார்கள்.

அத்தகைய அருமைதனைப் பெருமையுறப் பெற்ற பெரியாராகப் பேசப்படுபவரே திருவாளர் கதிரவேலு குமாரசாமி அவர்கள். கருவில் திருவமைந்த கருணையரான இப்பெருமகன் பன்முக நிலையில் சொன்னரு வகையில் தன்னருஞ் சேவைதனை இன்னரும் இயல்பில் இயற்றி இருந்துள்ளார். உளமார் உயர்வுறும் வளமார் இலங்கையின் வடபால் இடமாம் கிளிநொச்சி மாவட்டத்தில், சீருயர் பேரிடமாம் வேரவில் அரும்பதியில் வந்துதித்த வண்மையரான இவர் துள்ளித்திரியும் பள்ளிப்பருவப் பாலகனாக இருந்த காலத்திலே பெருநோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டிருந்தார்.

நோயதால் நொந்த சேயதாய்த் திகழ்ந்த அருமைமிகு குமாரசாமி அவர்கள் அனைத்துமான ஈசனைப் பூசனை செய்த வகையிலே கொடுநோய் நீங்கப் பெற்றார். ஆம் சுலை தந்து அன்றொருளாள் அப்பரடிகளை ஆட்கொண்ட அருமையதற் கொப்பதாக, தீராத பெருநோய் தந்து திருமகனான குமாரசாமி அவர்களைப் பெருமனதோடு பெருமான் ஈசன் அட்கொண்டு விட்ட தன்மைதனை என்னென்பது!

பாலப் பருவந்தொட்டு ஈசனைப் பூசனை செய்து, பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பூமாலையோடு பாமாலையுஞ்சூட்டி, ஆன்மிக வாழ்வினை மேன்மையுற வாழ்ந்து காட்டிய பான்மையானது என்றென்றும் நன்றே உன்னி உணரத்தக்கதொன்றாகும். வேரவில் வெள்ளிப் பள்ளத்துப் பிள்ளையாருக்கு ஆலயம் அமைத்துப் பூசனை புரிந்து அரும்பணி ஆற்றிய பாங்கினைச் சாதாரணமான ஒன்று என்று எண்ணிவிட முடியாது. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளிலே மூன்று குடமுழுக்கினைப் (கும்பாபிஷேகம் புரிந்த பெருமைதனைச் சிந்திக்கின்றபோது, அப்பெருமகனார் இறைபணி அதனை நிறைவுறப் புரிய முறையொரு வகையில்இறையவர் அவரால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட இன்னருளாளரென்றே எண்ணக்கிடக்கின்றது. தான் வாழ்நாளிலே பூசை முறைகளை அரிய வகையில் புரிந்து ஈசனை வழிபட்டதுடன் புராணபாராயணம் செய்து பக்தி வெள்ளம் பாய்ந்தோடும் பேருத்திதனைக் கையாண்ட பாங்கும் இங்கு நினைவில் நிறுத்தத்தக் தொன்றாகும். விந்தைமிகு கந்தக்கடவுளின் அந்தமிலா அருளதனைச் சிந்தைதனில் சேர்க்கவைக்கும் கந்தபுராணப் பாடல்கள் அத்தனையையம் முத்தென மொழிந்து, சித்தமார் திறத்தில் உரைபயன் அதனை உவப்புற உரைக்கும் உன்னதம் அதனைப் பெற்ற உயரருளாளராகவும் உலகதனில் உலவியுள்ளார்.

சமய வாழ்வினை உயரிய முறையில் வாழ்ந்து காட்டிய உத்தமரான இவர் பண்பின் சிகரமாக வாழ்ந்துவந்த பாங்கினையும் இவ்விடத்தில் கூறாது விடமுடியாது. அடியேன் அதிபராக இருந்த யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்திலே சிவசிறீ குமாரசாமி அவர்களது மூத்த புதல்வர் திருவாளர் சுமுகலிங்கம் அவர்கள் பண்புயர் ஆசான் ஒருவராகப் பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் பாடசாலையின் மணிக்கோபுரத் திறப்பு விழாவிற்கு உபயகாரர்களான மதிப்புயர் ஆசான் ம.கங்காதரன் அவர்களும் அவரது துணைவியாரும் அளாளர் தங்கமயில் அவர்களும் அழைக் கப்பட்டிருந்தனர். இக்கோபுரம் அமைப்பதற்குக் காரண கர்த்தவாக இருந்தவர் எமது பெருமகனாரான குமாரசாமி அவர்களின் அருமகனான சுமுகலிங்கம் அவர்களே.

இக்கோபுரத்திற்கான சமயக் கிரியைச் சடங்குகளை ஆசான் சுமுகலிங்கம் அவர்களது அருமை மைந்தனும் சிவசிறீ குமாரசாமி அவர்களின் பெருமைமிகு பேரனும், பூசகருமான சிவஸ்ரீ சு. ஹரிருவரதன் ஐயா அவர்களே புரிந்துள்ளார். அந்த வகையில் பேரனின் பெரும் பணிக்குப் புகழ்சேர்க்கும் அரும்பணியை ஆற்றிய பாங்கும் எண்ணி எண்ணி இன் புறத்தக்க தொன்றாகும்.

குறித்த மணிக்கோபுரத் திறப்பு விழா நிகழ்விற்கும் பெருமகன் குமாரசாமி அவர்களும் அவர்தம் துணைவியாரும் அன்பாக வரவேற்கப்பட்டு உபயகாரரோடு கௌரவிக்கப்பட்டனர். அன்றைய தினம் பெருமகன் குமாரசாமி அவர்களது பக்திப் பரவசத்தினை மாத்திரமன்றிப் பண்பின் பாங்கினையும் இன்சொல்லின் இயல்பினையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவ்வாறான அரிய பண்பு அன்னவர்தம் அருமை மைந்தர் ஆசான் சுமுகலிங்கம் அவர்களுக்கும் அமைந்திருக்கும் பாங்கினை உன்னி உணரத்தக்கதாக உள்ளது. சிவசிறீ குமாரசாமி அவர்கள் அன்றையதினம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண பாராயண வகுப்பினை மாணவர்களுக்கு நடத்தி வைத்த திறமும், அதற்கு ஆசான் சுமுகலிங்கம் அவர்கள் காரண கர்த்தாவாக நின்றிருந்த நிலையும் என்றென்றும் மறத்தற்கரிய ஒன்றாகின்றது.

சமயத் தொண்டரான சிவசிறீ குமாரசாமி அவர்கள் சமூகத் தொண்டராகவும் சாற்றரும் சேவைகளை, ஏற்றரும் இயல்பில் போற்றிடப் புரிந்துள்ளார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்துவராக அமர்ந்திருந்து அரும்பணி புரிந்துள்ளார். இந்நிலையில் இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாகக் குறித்த சங்கத்தின் தலைவராக இருந்து பொறுப்புடன் கருமமாற்றிய பாங்கினை அறியாதார் அறியாதாரே. ஆம், சேவையாம் செய்பணி சீரியர்தன் நேரிய நிறைவை என்றென்றும் நன்றே பறைசாற்றி நிற்குமொன்றாகும்.

எத்தகையோரும் இயற்றிடலரிய இத்தகை இயல்பாம் இன்பணி இயற்றிய நித்திய நிறைவார் நீர்மையரது புண்ணுடம்பு புவியதில் மண்ணொடு மண்ணாய் மறைந்தாலும், இன்பணி அதனால் என்றென்றும் நன்றே நின்று நிலவும் புகழுடம்பு மண்ணொடு பிறவாம் விண்ணது வரையும் விரிந்து விளங்கும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருந்து விட முடியாது. இந்நிலையிலே சொன்னரும் இயல்பார் அன்னவர் ஆத்மா உணரா இன்னருள் எய்த என்னரும் இறையாம் பொன்னவன் பொன்னடியைப் போற்றி ஏற்றிச் சாற்றி நிற்கின்றேன்.

**முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம், (எம்.ஃபில்)**
**முதலாந்தர (ஓய்வுநிலை) அதிபர்,**
**யாழ் பல்கலைக்கழக ஆட்சி மன்ற (பேரவை) உறுப்பினர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலைக்குழு உபதலைவர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்ட சாரணிய ஆணையாளர்,
சப்பச்சிமாவடி,
சாவகச்சேரி

# பண்பின் உறைவிடம்


2009ஆம் ஆண்டின் இடப்பெயர்வு காரணமாக அமரர் சிவஸ்ரீ குமாரசாமி ஐயா அவர்களும் அவரது துணைவியார் செல்வலட்சுமி அம்மையாரையும் அவரது மூத்தமகன் இல்லத்தில் (சாவகச்சேரி) சந்திக்கும் பெறும்பேறு பெற்றேன். அவரில் தோன்றும் புன்னகையும் தெய்வீக சிந்தனையும் திருவாசகத்தை ஒருவாசகமாக, மனவாசகமாக சாவகச்சேரி சிவன் கோவிலில் ஓதுகின்ற போது அவரின் குரல் இனிமை எல்லோர் மனதையும் தொட்டது மாத்திரமன்றி தெய்வீக நிலைக்கு இட்டுச் சென்றதை யாரும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது பண்பென்பது பணிவின் உயர் நிலையே, என்பது அடியார்களும் அவரும் உரையாடுகின்ற பொழுது தொனித்த கருத்துக்களினூடாக யான் அறிந்து கொண்டேன்.

இவ்வாறான பெருமகனார் இன்றுள்ள சமூகத்திற்கு வழிகாட்டியாக வாழ வேண்டியவர் ஆகின்றார்.

காலம் கனிந்து வர வயது முதிர்ந்து வர காலனவன் தன்கடமையை நிறைவேற்றிய செய்தியறிந்தேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

லயன் செ.சுப்பிரமணியம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம்

"திருப்பதி", சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.

## கந்தபுராண வித்தகர்

அமரர் சிவஸ்ரீ கதிரவேலு குமாரசாமி ஐயா அவர்கள் வேரவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி பிள்ளையார் ஆலயத்திருப்பணி, திருத்தொண்டு, சமய சமூக சேவைகளின் காவலராகவும் அரும்பணி ஆற்றியுள்ளார். 2009ஆம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் அவருடைய மூத்தமகன் சிவஸ்ரீ சுமுகலிங்கம் அவர்கள் இல்லத்தில் வசித்து வந்தார். இக்காலத்தில் திருவாசகம் முற்றோதல், திருமுறை முற்றோதல், புராணபடனம் என்பவை எங்கு நடை பெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று சிவப்பணி ஆற்றியுள்ளார்.

கந்தபுராண படனம் நடைபெறும் ஆலயங்களில் இவரது வருகையை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதைக் காணலாம். பயன் சொல்லுகின்ற பக்குவம், விளக்கம், குரல்வளம், ராகம் என்பன மக்கள் எல்லோரையும் கவர்ந்ததை யாரும் மறுக்க முடியாது. கந்தபுராணத்தில் வரும் ஆறுகாண்டங்களில் வரும் பத்தாயிரத்து முன்னூற்றி நாற்பத்து ஆறு பாடல்களையும் நாச்சோராது அடிமுறை பிறளாது கருத்துச் சுவையுடன் பயன் கூறுகின்ற பக்குவம் அவருக்கு நிகர் அவரேதான்.

இப்புராணத்தின் சைவசித்தாந்தக் கருத்துக்களை தாம்புரிந்து கொண்டு சமூகத்துக்கு நல்வழிகாட்டி இந்நெறியிலே மக்கள் வாழ்வாங்கு வாழச்செய்ய வழிகாட்டியது கந்தபுராணதின் உள் ளுணர்வான வித்துவத் தன்மையேயாகும். ஆலயங்களில் மட்டுமன்றி பாடசாலைகளுக்கும் சென்று புராண படன முறையை இலகு வழியாக மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் விளங்க வைத்த பெருமகனார். இன்று பூவுலக வாழ்வை நீத்து இறைபதம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து எம்மன்றத்தினர் அன்னாரின் ஆத்மா திருக்கைலாயம் திருப்பாதங்களைச் சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

செயலாளர் திருமதி கமலாதேவி குணசிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுத்த சைவ போசனம்

எங்கள் குடும்பத்தின் காவலனாய் குலவிளக்காய் இப்பிரதேச மக்களின் காவலனாய், சைவசித்தாந்த தத்துவத்தின் ஞானியாய் திகழ்ந்தவர் அமரர் சிவசிறி குமாரசாமி ஐயா அவர்கள். (எனது மாமா) உணவுப் பழக்கங்களில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் சுத்த சைவபோசனத்தை தானும் தன் குடும்பத்தவர்களும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் ஊர்மக்கள் அனைவரும் பின்பற்றும்படியாக வாழ்ந்து காட்டியவர் ஆவார்.

தீட்சை முறைகளை பின்பற்றி சைவசமயம் கூறும் நெறிமுறைகளை பின்பற்றி வாழ வழிகாட்டியவர். சாத்வீக குணம் மேலோங்க அன்பு, கருணை, இரக்கம், பக்தி என்பற்றை மக்கள் உணர வேண்டுமெனின் புலால் உண்ணல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்படும் நான்கு நெறிகள் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கு மார்க்கங்கள் சிவசாலோகம், சிவசாமீபம், சிவசாரூபம், சிவசாயுச்சியம் என்னும் நான்கு முத்திகளையும் சமயக்குரவர்கள் நால்வரும் எவ்வாறு மக்கள் மதியில் விதைத்தனரோ அவ்வழியை அமரர் சிவசிறி குமாரசாமி ஐயா (எனது மாமா) அவர்களும் வாழ்ந்து காட்டினார். அவ்வழியை பின்பற்றி நாம் எல்லோரும் வாழ்வோமானால் சிவநெறியின் அடித்தளம் சுத்தசைவ போசனம் மேற்கொள்ளும் சிந்தனையை ஒவ்வொருவருக்கும் மனதில் உருவாக வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Heinrich Plett Str.19
Bremerhaven
Germany
அன்பு மருமகள் Rajeswary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2010.07.16 கும்பாபிஷேக கும்பம் கொண்டு வரப்பட்ட வேளை



2009ம் ஆண்டு கோண்டாவில் ஸ்ரீ சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தில் "சபரி நாதம்" நூல் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சுழி

'பிள்ளையார் சுழி போட்டாயிற்றா?" என்பது ஒரு பழமொழி. ஒரு நற்காரியம் தொடங்கியாயிற்றா, ஒரு தொழில் அல்லது வணிகம் தொடங்கிவிட்டதா என்பதை இவ்வாறு கேட்பர்.

நம்பெரியவர்கள் "பிள்ளையார் சுழி" போட்டே எதனையும் தொடங்குவர். கடிதமானாலும் கட்டுரையானாலும் ஒரு நூலானாலும் முதலில் "உ" எனப் பிள்ளையார் சுழி போட்டுவிட்டே தொடங்குவர்.

பிள்ளையார் என்று ஏன் பெயர் வந்தது? அவர் சிவபெருமானின் மூத்த பிள்ளை. இளையபிள்ளை முருகன் "ஆர்" இறுதி மதிப்புக் கருதிச் சேர்ப்பது. பிள்ளை என்பது வீரன், மைந்தன் என்றும் பொருள்படும். பிள்ளையார் அரச மரத்தின் அடியிலும் இருப்பார். ஆலயங்களிலும் "முதல்வராக" முதலிடத்தில் இருப்பார். பிள்ளையார் மிகமிக எளியவர். "பிடித்துவைத்தால் பிள்ளையார்" என்பது ஒரு பழமொழி. மஞ்சளை அல்லது குழைத்த மண்ணைப் பிடித்து வைத்து "பிள்ளையார்" எனக் கும்பிடுவர்.

## பிள்ளைகளின் பிள்ளையார்

இளம்பிள்ளைகளுக்கு பிள்ளையாரின் வடிவத் தோற்றத்தில் ஒரு கவர்ச்சி உண்டு. யானை மணி ஓசை கேட்டதும், அப்பெரிய உருவத்தை, இவர்கள் வியப்போடு விழித்தப் பார்ப்பர். யானைமுகக் கடவுளும், தும்பிக்கையுடன் இருப்பதால், அக்காட்சி பிஞ்சு மனங்களில் பதியமாகும். அதனால் தான் ஔவையார் கடவுள் வணக்க பாடல்களைக் குழந்தைகளுக்கு ஏற்ப பாடியுள்ளார்.

நாட்டுப்புற மக்கள் குழந்தையைப் பாடவைக்கும் முதற்பாட்டு எது தெரியுமா?

குள்ளக் குள்ளரே
குண்டு வயிறரே
வெள்ளிப்பிள்ளையாரே
விநாயக மூர்த்தியே!

என்று சிரிப்புக் கலந்து பாடும் இப்பாடல் தான் அது. இதைப் பிள்ளைகள், மழலைச் சொற்களில் திரும்பப் பாடும்! இப்படிப்பட்ட நாட்டுப்புற இலக்கியப் பாடல்கள் மிகப் பல உள. ஏற்றப்பாட்டிலும் பிள்ளையார் தான் முதலில் வருவார். ஆழமான வயல் கிணறுகளில், ஏற்றல் இறைப்பவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரே வாரும்
பிழைவராமல் காரும்

*என ஒரு வாளி தண்ணீரை இறைத்து ஊற்றுவான்.* பாட்டிமார்கள் தம் பேரன் பேத்திகளுக்கு இவ்வாறு இரண்டடிப் பாடல்களை பலவற்றைப் பாடி, அப்பிள்ளைகள் நெஞ்சில் பக்தியையும் பண்பாட்டையும் பதியம் போடுவர்.

குள்ளக் குள்ளனைக் குண்டு
வயிறனை
வெள்ளைக் கொம்பனை
விநாயகனைத் தொழு!
வெள்ளைக் கொம்பன்
விநாயகனைத் தொழு!
துள்ளியோடும் தொடரும்
வினைகளே!

அதுமட்டுமா?

முப்பழம் வெல்லம் மோதகம் தின்னும்
தொப்பை அப்பனைத் தொழ வினை இல்லையே

என்று பாடிப் பிள்ளைகளை மகிழ்விப்பர். இது "கைத்தல நிறைகனி, அப்பமொடு அவல் பொரி கப்பிய கரிமுகன்" என்ற அருணகிரிநாதரின் திருப்புகழ் போல் உள்ளது.

பள்ளியில் "வேழமுகம்" என்று ஒரு பாடலை முன்பு கற்பிப்பார்கள். அதுவும் நாட்டுப்புற இலக்கிய வழக்கேயாகும்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்!
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே!
அப்பம் முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனை தொழ வினை அறுமே!

நாடோடிப் பாடல்கள் இவ்வாறு இடத்திற்குத் தகவும் பாடுபவர்க்கு தகவும் சிறுசிறு வேறுபாடுகளுடன் பாடப்படுவது அவற்றின் இயல்பு. ஏட்டில் எழுதாமல் நினைத்ததும் பாடுபவை அவை.

வேழமுகப் பாட்டு என்பது போற்றிப் பாட்டு பிள்ளையாரைத் தொழப் பிள்ளைகள் முதல் பெரியவர்வரை அது பயன்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தித்தவர்க்கு அருள் கணபதி சயசய
சீரிய ஆனைக் கன்றே சயசய
அன்புடை அமரர்கள் காப்பாய் சயசய
ஆவித்துணையே கணபதி சயசய
இண்டைச் சடைமுடி இறைவா சயசய
ஈசன் தந்தருள் மகனே சயசய
உன்னிய கருமம் முடிப்பாய் சயசய
ஊர் நவசந்தி உகந்தாய் சயசய
எம்பெருமானே இறைவா சயசய
ஏழ் உலகும் தொழநின்றாய் சயசய
ஐயா கணபதி நம்பியே சயசய
ஒற்றை மருப்புடை வித்தகா சயசய
ஓங்கிய ஆனைக் கன்றே சயசய
ஔவியம் இல்லா அருளே சயசய

அக்கரப் பொருள் ஆனவா சயசய
கணபதி என்வினை கரைவாய் சயசய
ஙப்போல் மழு ஒன்று ஏந்தியே சயசய
சங்கரன் மகனே சதுரா சயசய
ஞயன் நம்பினர் பால் ஆடில் சயசய
இடம் பட விக்கின விநாயகா சயசய
இணங்கிய பிள்ளைகள் தலைவா சயசய
தத்துவ மறைதரு வித்தகா சயசய
நன்னெறி விக்கின விநாயகா சயசய
பள்ளியில் உறைதரும் பிள்ளாய் சயசய
மன்றுள் ஆடும் மணியே சயசய
இயங்கிய ஞானக் குன்றே சயசய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் சயசய
இலவக் கொன்பு ஒன்று நந்தியே சயசய
வஞ்சனை பலவும் தீர்ப்பாய் சயசய
அழகிய ஆனைக் கன்றே சயசய
இளமத யானை முகத்தாய் சயசய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறகு பதி விக்கின விநாயகா சயசய
அனந்தலோடு ஆதியில் அடி தொழ சயசய

இதனை வேழமுகம் என்றும் "பிள்ளையார் சிந்தனை என்றும் கூறுவர். ஜயம்= வெற்றி, பேச்சில் "சயம்" என்பர். இதைப் போற்றி என்றும் சரணம் என்றும் முடிப்பதுண்டு.

தமிழ் எழுத்துக்கள் முப்பது மட்டுமே. உயிர் 12. மெய் 18. இப்பாடலில் உயிர் 12 வரிசையாய் வருகிறது. அக்கரம் என்பதில், மெய்க்கு அடையாளமாகப் புள்ளியுள்ள எழுத்து உளது.

பிறகு க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன எனும் பதினெட்டு மெய்யும் வரிசை மாறாமல் இடம்பெறுகின்றன. பாட்டுக்குப் பாட்டும் ஆயிற்று. படிப்புக்கு படிப்பும் ஆயிற்று. ஒருவாறு தமிழ் நெடுங்கணக்கு அகரவரிசை அரிச்சுவடி மழலைகள் நெஞ்சிலும் நாவிலும் பதிந்து விடுகின்றன அல்லவா.

உயிரும் மெய்யுமே தமிழ் முதலெழுத்துக்கள். ஆங்கிலம் 26 என்றாள் தமிழ் 30 மட்டுமே.

சார்பெழுத்துக்கள் என்பன மொழியிடையே வரும்போது, பொருள் வேறுபாடு தருவன. அவை தனி எழுத்துக்கள் அல்ல. அவ்வாறு பார்த்தால் பிறமொழிகளில் "சொல்லிடையே" வரும் சார்பெழுத்துக்கள் மிகப் பலவாகும். உயிர்மெய் எழுத்துக்கள் தமிழுக்கு கிடைத்த கொடை. க் இ என்று எழுதவேண்டியதை (ki) போல கி என ஒரே வடிவமாக்கினர். க் உ என்பதை (ku) என்பதை இரண்டெழுத்து ஆகாமல் கு என ஒரே எழுத்தில் அடக்கினர். அவை தனி எழுத்துக்கள் அல்ல. இடச்சுருக்கம், காலச் சுருக்கம், முயற்சிச் சுருக்கம் மற்றும் சிக்கனம் கருதிப் படைக்கப்பட்ட "வடிவங்கள்". இது தெரியாதார் உயிர்மெய் 216 என்று (12x18) கொண்டு, தமிழ் எழுத்துக்கள் ஆயுதத்துடன் 247 என்பர். இத்தனை எழுத்துக்களா என மயங்குவர்.

இவ் "வேழமுகம்" தமிழ் முதலெழுத்துக்களை அறிமுகப் படுத்துவது சிறப்பு. ஆத்திசூடி தமிழ் நெடுங்கணக்கை கற்றுத் தருவது போன்றதே இதுவும். முற்காலத்தில் இது திண்ணைப் பள்ளியில் பாடமாக இருந்தது என்பதற்கு "பிள்ளைகள் தலைவன்", "நன்நெறி", "பள்ளியில் உறைதரும் பிள்ளை" போன்ற தொடர்கள் சான்றாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் திருக்கரங்களில் விளங்கும் ஆயுதங்கள்

**"ஏத்தியே என்னுள்ளம் நின்றுமால் எப்பொழுதும்**
**மாத்தனி வெண்கோட்டு மதமுகத்துத் தூத்தழல்**
**செக்கர்த் திருமேனிச் செம்பொன் கழலங்கை**
**முக்கட் கடாயானை முன்"**

என்று கபிலதேவரால் போற்றப்படும் விநாயகர் எளிமையே உருவான தெய்வம். பிள்ளையார் என்று பெயர்பெற்ற பெருமான். திருச்சிராப்பள்ளி மலையிலே உச்சிப்பிள்ளையார் என்றும் திருக்கடவூரில் கள்ளவாரணர் என்றும் சிதம்பரத்தில் திரு முறைசுட்டிப்பிள்ளையாராகவும் முக்குறுணி விநாயகராகவும் திருநறையூரில் பொல்லாப்பிள்ளையாராகவும் சிருச்செங்காட்டாங்குடியில் வாதாபிகணபதியாகவும் திருவலஞ்சுழியில் வெள்ளைப்பிள்ளையாராயும் பிள்ளையார் பட்யிற் கற்பக கணபதியாயும் இப்பெருமான் எழுந் தருளியுள்ளார்.

தவிர, செல்லக்கதிர்காமத்தில் மாணிக்க விநாயகக் கடவுளாயும் தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் பஞ்சமுக விநாய கராகவும் மாவடிப் பிள்ளையாராகவும் காட்சி தருவதுடன் இலங்கையின் யாழ் வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் அருளாட்சி செய்கின்றார். யாழ்ப்பாணத்தரசர் காலத்திலேயே யாழ்ப்பணத்திற் பிள்ளையார் வழிபாடு மேலோங்கி இருப்பதை அரசகேசரி பரராஜசேகரன் கருணாகரன் ஆகிய தமிழரசர்கள் ஸ்தாபித்த பிள்ளையார் ஆலயங்கள் வெளிப்படுத்துகின்றன.

கல்லுக்கு உயிர் கொடுத்து கற்பனையை அதில் செலுத்தி அதிற் கலைக்கடலாம் கணபதியை கண்டனர் நம் முன்னோர். இத்தகு கணபதியின் திருக்கரங்களிற் பல்வேறு ஆயுதங்களை நாம் காணலாம். பஞ்சமுக விநாயகராகப் பெரும்மான் எழுந்தருளுகையில் இவற்றை தெளிவுறத் தரிசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம்

விநாயகரின் திருக்கரத்தில் நாகமே பாசமாக மாறி "நாகபாசம்" ஆகவுள்ளது.இது கயிறு பகைவரின் கைகளையும் கால்களையும் கட்டிச்செயற்பட இயலாமற் செய்யும். இது பிள்ளைத் தெய்வமான இக் கடவுளுக்கேயுரிய அற்புத ஆயுதம்.

## அங்குசம்

யானையை அடக்க இரும்பாற் செய்யப்பட்டு வளைந்த மூக்கும் கூர்மையும் உடையதாயிருக்கும் அங்குசம் யானைமுகப் பெருமானின் அஸ்திரதேவராய் வலது திருக்கரத்தில் விளங்கும்.

## தந்தம்

ஒடிந்த யானைக் கொம்பு வேதவியாசரின் விநய விண்ணப்பத்ததை ஏற்று மகாபாரதத்தைத் தனது ஒற்றைத் தந்தத்தை உடைத்து எழுதினார் விநாயகர்.ஆக எழுத்தாணியாக இந்தத் தந்தம் பயன்படுகின்றது. போருக்கும் இது பயன்படும்.

## வேதாளம்

அச்சம் தரவல்ல பூத வடிவம் வீரவீர கணபதியினுடைய திருக் கரமொன்றில் இதுவுள்ளது. பகைவரை இது கொன்று தின்னும் உயிருள்ள ஆயுதம்.

## அம்பு

கூரிய நுனியுடையது.பின் அந்தத்தில் விரைந்து செல்லக் கழுகின்இறகு கட்டப்படடிருக்கும் வில்லை வளைத்து அதில் வைத்து எய்தப்பெறும் கருவி.

## வில்

மூங்கிலைப் போன்று வளையவல்ல மரத்தால் செய்யப் பெற்று அம்பு எய்தப் பயன்படுவது வில்லின் இரு முனைகளும் நார்க்கயிறால் உறுதியாகக் கட்டப் பெற்றிருக்கும். பிள்ளையாரின் திருக்கரங்களில் வில் அம்பு இடம்பெறக் காணலாம்.

## சக்கரம்

திருமாலின் மருகரான விநாயகர் விஸ்ணுவுக்கே உரிய சக்கரத்தைத் தாங்கியிருப்பார். காஞ்சியில் விகடசக்கரன் என்ற பெயருடன் இவர் விளங்குவார். கந்தபுராணக் காப்புச் செய்யுளில் இதை அவதானிக்கலாம். (விகடசக்கரன மெய்ப் பதம் போற்றுவாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

பீமனுக்கும் பிள்ளையாருக்கும் திருமாலுக்கும் சிறப்பாக உரியது. குண்டாந்தடி என்றும் கூறுவார். பகைவரை அடித்து நொருக்கப் பயன் படும்.

## கொடி

துணியால் வெற்றியைக் குறித்து அமைக்கப் பெற்ற "துவஜம்" என்ற கொடி விநாயகர் கரத்தில் விளங்குகின்றது.

## சாமரம்

இது கவரிமான்வால் மயிரால் ஆக்கப் பெறுவது. ஆயுதம் அன்று விசேட உபசாரமாக விநாயகரின் திருக்கரத்தில் உள்ளது.

## மோதகம்

பூரணத்துவத்தைக் குறிக்கும் பிள்ளையாரின் திருக்கரம் மிசை உள்ளது. முழுமையைக் குறிப்பது பிள்ளையார் தனது கரத்தில் வைத்திருப்பது தான் உண்ண அல்ல. அனைவருக்கும் பகிர்தளிக்க. அனைத்து உயிருக்கும் உணவிட்டு உயிரளிக்கும் தெய்வம்தானே என்று விளக்க.

இவற்றைவிட வஜ்ஜிரம், குத்துக்கத்தி, சம்மட்டி, சூலம் குந்தாலி மழு தண்டம் கமண்டலம் பரசு சங்கம் புஷ்பபாணம் கோடரி ஜெபமாலை, தீ.(நேருப்பு) வீணை போன்றவற்றையும் விநாயகருடைய கரங்களிற் காணலாம். நம்மிடர்களையும் நீக்கி விக்னவிநாயகருக்கு இவ்வாயுதங்கள் அவசியமே.

மேலும் நம்மவருள் சிலரின் நன்றாக உணவுப் பண்டங்களை விரும்பி உண்ணும் தொந்தி வயிறுடைய கடவுள் என்ற எண்ணத்தையும் இது மாற்றும். பிள்ளையார் குழந்தைத் தெய்வம் என்றும் உற்சாகமான கடவுள். வீரத்தின் விளைநிலம். நன்றாகச் சாப்பிட்டு விட்டு தூங்குபவரல்லர். அவரது தொந்தி வயிறு அழகானது. இந்தப் பிரபஞ்சத்தை அடக்கி வைத்திருப்பது.

கஜமுகன் விரசை உதத்தன் நக்கிராசுரன் கிருத்திராசுரன் குசலன் குரூரன் பாலாசுரன் சிந்து அசுரன் அனலாசுரன் என்று பிள்ளை யாரால் அழிக்கப்பெற்ற கொடியவரின் தொகை அதிகம். இது அவரது பராக்கிரமத்தைக் காண்பிக்கும்.

ஓங்கார வடிவான உருவமுடைய பிள்ளையாரை வழிபட்டாற் கல்வி, கலை, ஞானம் மேலோங்கும். இதற்கு நம்பியாண்டார் நம்பியடிகளின் வரலாறே சாட்சி இத்தகு பெருமைமிக்க வெள்ளிப்பள்ளத்து பிள்ளையார் நம் இன்னல்களை கூடாத குணங்களைக் களைந்து நம்மெல்லோரையும் நலமே வாழ அருள் புரிய வேண்டு வோம்.

**அடியமர்ந்து கொள்வாயயே நெஞ்சமே அப்பம்**
**இடியவலோடு எள்ளுருண்டை கன்னல் வடி சுவையில்**
**தாழ்வானை ஆழ்வானைத் தன்னடியார் உள்ளத்தே**
**வாழ்வானை வாழ்த்தியே வாழ்**

சிவஸ்ரீ சுமுகலிங்கம் ஹரிருவரதன் ஐயா
அமிர்தபாசனி சமேத சந்திர சேர வாரிவன
நாத சிவன்கோயில்,
சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை

## ஆதியும் அந்தமும் இல்லாத பொருட்கள் ஆறு

1. பதி (கடவுள்)
2. பசு (உயிர்கள்)
3. பாசம் (போகப்பொருட்கள்)
4. ஆணவம் (அறியாமை)
5. மாயை (அண்டப்படைப்பிற்கான ஒருமூலப்பொருள்)
   (ஒன்றை வேறாகக் காட்டும் ஒரு மயக்கம் என்று, இதனை வேதாந்தம் கூறும். சைவசித்தாந்தம் அதனை ஏற்றுக்கொள்வதில்லை)
6. கன்மம் (முன்வினைப்பயன்)

"ஏகன் அனேகன் இருள் கருமம் மாயையிரண்(டு)
ஆக இவை ஆறும் ஆதியில்"

- சாத்திர நூல், திருவருட்பயன் (52)

## உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு

ஒன்றாய், வேறாய், உடனாய் ஆகிய மூன்று தன்மைகளிலும் உயிருடன் இணைந்து நிற்பன் இறைவன்

1. ஒன்றாய் - உடலை உயிர்செலுத்தல் போன்று ஒன்றாய்க் கலந்து நின்று உயிரை இறைவன் செலுத்துவன்.
2. வேறாய் - பொருட் தன்மையில் உயிர் வேறு இறைவன் வேறு. உயிர் இறைவனல்ல என்பதே சித்தாந்தக் கொள்கை. இறைவன் உயிர் என்பது வேதாந்தக் கொள்கை.
3. உடனாய் - உயிருக்கு உயிராய் இறைவன் இருப்பினும் உயிர் புரியும் நன்மை தீமைகளுக்கு அவன் ஒரு சாட்சியாய் உடன் இருப்பானே ஒழிய அதனால் பாதிக்கப்படான்.

## ஓர் எடுத்துக்காட்டு

ஒரு மாணவன் தேர்வு எழுதுகிறான். அவன் வகுப்பு ஆசிரியரே அங்கு மேற்பார்வையாளராக இருக்கிறார். மாணவன் பிழையாக எழுதுவதைப் பார்க்கிறார். ஆனால் அதைச் சுட்டிக் காட்டவில்லை. (அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மை அல்ல) பிழையின் பயனை மாணவனே அனுபவிக்க வேண்டும். ஆசிரியர் சாட்சியாகவே இருந்தார்.

## உயிரின் அளவு (பரிமாணம்)

கடவுள் சகல அண்டங்களுக்கும் அதற்கு அப்பாலும் வியாபித்து இருப்பவன். அவன் இல்லாத இடமில்லை, பொருளில்லை.

உயிர், கடவுளின் வியாபகத்துக்கு உட்பட்டு அடங்கிய வியாபகமாக இருக்கும். இதனை **வியாப்பியம்** என்பர்.

உயிர்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இவ்வியாப்பியத்தில் வியாபித்திருக்கும்.

### எடுத்துக்காட்டு

உலகில் ஆயிரக்கணக்கான வானொலி நிலையங்கள் ஒலி பரப்புகின்றன. பலவகை ஒலிகள் அனைத்தும் ஒரே வானில் தான் வியாபித்திருக்கின்றன. இதுபோன்றே உயிர்களும் ஒரே வியாபகத்துள் இருக்கும். உயிர்களின் வியாபகம் ஆணவ மலம் எனும் இருளில் அழுந்தி அறிவு செயற்படாது முடங்கிக் கிடக்கின்றன என்பதை அறிவோம். உயிரின் இந்நிலைக்கு இரங்கி இறைவன் அதன் அறிவை விளக்க மாயை எனும் பொருளால் ஆக்கிய ஓர் உடலைக் கொடுக்கின்றான்.

உயிரில் அவ்வுடல் உள்ள அளவிற்கு மட்டுமே அறிவு விளங்கும். மற்றப்பகுதி ஆணவ இருளிலேயே இருக்கும்.

ஒரு கறுப்பு நிறத்துண்டில் வட்டமாக வெள்ளை வர்ணம் பூசியுள்ளது. **துண்டின் அளவு உயிரின் வியாப்பியம்.** வெள்ளை வட்டம் உடல்பெற்ற உயிர், வெள்ளை வட்டம் துண்டின் ஒரு பகுதியே. அது துண்டின் முழு அளவு ஆகாது. இது போன்றே **உடல் பெற்ற உயிர் உயிரின் முழு அளவு ஆகாது. ஒரு பகுதியேயாகும்.**

### எடுத்துக்காட்டு:

கால்பந்து ஒன்றில் காற்றை அடைக்கின்றோம். அது எங்கும் வியாபித்துள்ள காற்றே. பந்தைப் பிடித்து அடித்து உதைத்து விளையாடுகிறோம். ஆனால் வெளியிலுள்ள காற்றை அவ்வாறு செய்ய இயலாது.

பந்து உடலைப் போன்றது. காற்று உயிரைப் போன்றது.

(குறிப்பு: காற்று உயிரன்று - இங்கு உதாரணத்திற்காகக் கூறப்பட்டது)

உயிரின் பரிமாணத்தை மகத்துப்பரிமாணம் என்று சித்தாந்தம் கூறும்.

(மகத்து - பெரிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரின் மூன்று குணங்கள்

1. **அமைதி** (சாத்வீகம்)
2. **ஆதிக்கம்** (இராசதம்)
3. **மயக்கம்** (தாமதம்)

மாயையில் தோன்றிய கரணங்களில் மலாந்தனவே இவை. எல்லா உயிர்களுக்கும் இம் முக்குணங்கள் உண்டு. ஆனால் அவை ஒரே அளவில் நிலையாக இருக்காது. எண்ணற்ற விகிதாசாரங்களில் கலந்து அடிக்கடி மாறும். மனிதர் குணங்கள் வேறுபட்டிருப்பதற்கு இதுவே காரணம்.

**அமைதி (சாத்விகம்)**

மேலோங்கி இருந்தால் சாந்தம் - பக்தி முதலிய தோன்றும்.

**ஆதிக்கம் (இராசதம்)**

மேலோங்கி இருந்தால் பற்றுள்ளம் - விடாமுயற்சி முதலிய தோன்றும்.

**மயக்கம் (தாமதம்)**

மேலோங்கி இருந்தால் சோம்பல் - பாவச்செயல் - தூக்கம் முதலிய தோன்றும்.

# இறைவனின் தொழில்

"தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உன் தொழிலே" என்று சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய இறைவன் தொழில் ஐந்து.

**1. படைத்தல்** : கேவல நிலையில் கிடந்த உயிர்கள் உய்வதற்கு தனு, கரண, புவன, போகங்களை மாயையில் இருந்து தோற்றுவித்துக் கொடுத்தல்.

**2. காத்தல் :** தோற்றுவித்த தனு முதலியவற்றை நிறுத்தி உயிர்களுக்குப் பயன்படுமாறு செய்தல்.

**3. அழித்தல் :** வினை காரணமாக உயிர்கள் பல பிறவிகள் எடுத்து உழன்றதால் ஏற்பட்ட களைப்புத் தீரச் சற்று ஓய்வு தேவை என்று தனு முதலியவற்றை உயிர்களை விட்டுப் பிரித்தல்.

**4. மறைத்தல் :** (திரயோதனசக்தி) உயிர்கள் வேறு ஒன்றில் நாட்டம் செலுத்தாது உலக இன்ப துன்பங்களை அனுபவித்தல் மூலமே ஆணவமலத்தின் சக்தி ஒடுங்கும். அதனால் உயிர்களின் நாட்டத்தைத் தன்பால் ஈர்க்கக் கூடாது என்று இறைவன் தன்னைக் காட்டாது மறைத்தல்.

ஓர் எடுத்துக்காட்டு: குழந்தை பள்ளியில் படிப்பதைத் தாயார் காண விரும்புகிறாள். வகுப்பின் உள்ளே சென்று நின்றால், அந்த மழலை 'அம்மா' என்று ஓடி வந்து அணைந்து கொள்ளும். அதனால் படிப்பிற்கு இடையூறு ஏற்படுமென்று மறைந்து நின்று பார்ப்பதற்கு ஒக்கும்.

**5. அருளல் :** ஆணவத்தின் சக்தி ஒடுங்கியவுடன் உயிர்களுக்கு இயல்பாக இறைவனை அடையும் விருப்பம் தோன்றும். அந்நிலையில் இறைவன் தன்னைக்காட்டி மலங்களை நீக்கி ஆட்கொள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தி

இவ்வாறு இறைவன் ஐந்தொழில்கள் புரிவது தன்னலம் கருதியன்று. உயிர்கள் பிறப்பு இறப்பு ஒழிந்து முத்திப்பேறு அடைதல் வேண்டும் என்பதற்கேயாம். இதனை மனதில் கொண்டால் அவனருளால் தனு, கரண, புவன, போகங்களைப் பெற்ற உயிர்களுக்கு இறைவன்பால் கடமை உணர்வும் நன்றி உணர்வும் தோன்றும். கல்மனமும் கசிந்து உருகும் அதுவே **பக்தி** ஆகும்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

-திருவாசகம் (650)

## பாவ புண்ணியம்

செயல்களில் எது பாவம், எது புண்ணியம் என்பதை எப்படி முடிவு செய்வது?

இறைவன் உயிருக்கு உயிராக நிற்பவன். எல்லாச் செயல்களுக்கும் அவன் சாட்சியகா இருப்பவன். அதனையே மனச்சாட்சி என்பர்.

ஒரு வினை பாவமா புண்ணியமா என்பதை அவரவர்கள் மனச்சாட்சியே அறிவுறுத்தும். அதன்படி நடப்பதே அறம்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்து அறன்"

என்று வள்ளுவர் உறுதியாகக் கூறுகின்றார்.

ஒரே செயல் பாவமாகவும் புண்ணியமாகவும் சில சமயங்களில் அமையும்.

எடுத்துக்காட்டு:

சிறுவன் ஒருவனை வெறிநாய் ஒன்று கடிக்கத் துரத்துகின்றது. அதைக்கண்ட ஒருவர் கல்லை எறிந்து நாயைக் காயப்படுத்தி விரட்டுகிறார். இவ்வினை நாயைப் பொறுத்தவரை பாவச்செயல். சிறுவனைப் பொருத்தவரை புண்ணியச்செயல். மனநிலையைப் பொருத்ததே பாவபுண்ணியங்கள். அவை அறிந்தும் அறியாமலும் நடைபெறலாம்.

### வினைகளின் மூன்று நிலைகள்

1. பழவினை - தொல்வினை (சஞ்சிதம்)
2. புதுவினை - வருவினை (ஆகாமியம்)
3. ஊழ்வினை - நுகர்வினை (பிராரத்துவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பழவினை (சஞ்சிதம்) மூலவினை முதற்கொண்டு செய்த வினைகள் பக்குவப்பட்டுப் பாவ புண்ணியப் பயனைக் கொடுக்கும் நிலை அடையும் வரை பழவினையாய்க் குவிந்திருக்கும். பக்குவப்படுதல் வினைசெய்த வரிசையில் இருக்காது.

தென்னையும் வாழையும் ஒரே நேரத்தில் பயிர் செய்தாலும் அவை பயன் தரும் நிலை முன்பின்னாக இருக்கும். அது போன்றே வினைகளும் முன்பின்னாக பக்குவம் அடையும்.

2. புதுவினை (ஆகாமியம்) பக்குவப்பட்ட வினைகளை அவ்வவ் உயிர்களே அனுபவிக்க வேண்டுவது நியதி. ஆனால் வினைகளோ உயிர்களோ தாமே சென்று ஒன்றையொன்று பற்றாது. அவைகளை இறைவனே கூட்டிவைப்பான். அதன் பயனாக வினைகளுக்கு ஏற்பப் பிறப்பு, உடல், வயது முதலியன உயிர்பெறும். இவற்றைக் கொண்டு இப்பிறப்பில் செய்யும் வினைகள் 'ஆகாமியம்' எனப் பெயர்பெறும்.

3. ஊழ்வினை (பிராரத்துவம்) செய்த எல்லா வினைகளின் பயன்களையும் ஒரே பிறவியில் அனுபவித்துத் தீர்தல் முடியாது. எடுத்த பிறவியில் எவ்வெவ் வினைகளை அனுபவிக்க வேண்டுமென்றுளதோ அந்த அளவு வினையே ஊழ்வினையாம். ஊழ்வினையை அனுபவிக்கும்பொழுது செய்யும் வினைகள் பழவினைக் குவியலை அடைந்து பக்குவமாகிய பின் புதவினையாகி அதற்குப் பின் ஊழ்வினையாகும்.

இவ்வாறு உயிரை வினைகள் ஒன்றையொன்று தொடர்ந்து பற்றி வந்தால் பிறவிக்கு எப்பொழுது முடிவு ஏற்படும். இதற்குச் சைவசித்தாந்தம் கூறும் உபாயம் என்ன? எல்லாம் வினைப்பயன்படியே நடக்கும் என்றால் கடவுள் என ஒருவர் தேவையா? என்ற எண்ணம் சிலருக்குத் தோன்றும்.

உயிருக்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து உயிருக்கு உயிராக நின்று இயக்குவது கடவுள். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று சாத்திரமும் தோத்திரமும் கூறும்.

"புத்திமற் காரியத்தால் பூதாதி புரடன் தானும்
அத்தனு கரணம் பெற்றால் அறிதலால், அவற்றை மாயை
உய்த்திடும் அதனால், மாயைக்கு உணர்வு ஒன்றும் இல்லை என்றே
வைத்திடும், அதனால் எல்லம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்"

-சாத்திரநூல் சித்தியார்

" நல்குரவும் இன்பமும் நலங்கள் அவை ஆகி
வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தன்" - சம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவினைகளைச் செய்யும் கருவிகள்

மனம் - (உள்ளம்)
வாக்கு - (உரை)
காயம் - (உடல்) ஆகிய மூன்றுமே ஆகும். நல்வினை பொன்விலங்கு. தீவினை இரும்பு விலங்கு. பிறவாமை வேண்டின் இவ்விரு வினைகளும் நீங்க வேண்டும்.
அதற்கு உபாயம்
மனம் வாக்கு காயம் மூன்றையும் இறைவனுக்குத் தொண்டு செய்யும் அடிமைகளாக ஆக்குதலேயாம்.

**மூன்று வகை உயிர்களும் மாயையும்.**

**1. விஞ்ஞானகலர்**

ஆணவமலம் ஒன்றே மென்மையாக உடையவர்கள். இவர் களையடையும் மாயை சுத்தமாயை எனப்படும். இது மயக்கத்தைச் செய்யாது. இறைவன் ஏவல் வழி ஐந்தொழில்களைச் செய்யத் தகுதிபெற்ற உயிர்களுக்கு உடலாக அமைவது இம் மாயேயாகும். இது நுண்பொருள்.

**2. பிரளயாகலர்**

ஆணவம் கன்பம் ஆகிய இருமலம் உடையோர். ஆணவம் நடுத்தரமாகப் பற்றி நிற்கும் இவர்களை அடைகின்ற மாயை சுத்தம் அசுத்தம் கலந்தது (சுத்தாசுத்தம்). இது சிறிதளவே மயக்கத்தைச் செய்யும் இது பருப்பொருள்.

**3. சகலர்**

ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களை உடையவர்கள் (மானிடர்). இவர்களை ஆணவம் வன்மையாகப் பற்றி நிற்கும். இம்மாயை அசுத்தமாயை எனப்படும். இது மயக்கத்தையே செய்யும். இது பருப்பொருள்.

**சரியை ,கிரியை,யோகம்,ஞானம்**

மனம், வாக்கு, காயம் மூன்றையும் இறைவனுக்குத் தொண்டு செய்யும் அடிமையாக்கச் சித்தாந்தம் நான்கு நெறிகளைக் கூறும்.
இறைவனுக்கு மனமுவந்து

1. உடலால் தொண்டு செய்தல் - சரியை
2. வாயாலும் உடலாலும் செய்தல் - கிரியை
3. அந்தக்கரணங்களினால் செய்தல் - யோகம்
4. சிந்தித்துத் தெளிந்து மெய்ப்பொருள் காண்பது - ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியை

மனமுவந்து, உடலால் செய்யும் தொண்டுகள் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் இடத்திற்கும் தக்கவாறே அமையும்.

பண்டைய காலத்தில் திருக்கோவிலைக் கூட்டிப்பெருக்கிச் சாணத்தால் மெழுகுதல், பூந்தோட்டம் அமைத்தல், மலர் மாலை கட்டுதல், திருவிளக்கு ஏற்றல், பூசைக்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்துக் கொடுத்தல், துதிப்பாடல் பாடுதல், சிவனடியார்களுக்குப் பணிவிடை செய்தல் ஆகியவை சரியை எனக்கருதினர்.

இன்றைய சூழ்நிலைக்கும் வாழ்க்கை முறைக்கும் இது எந்த அளவு பொருந்தும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

சரியைத்தொண்டிற்கு, துப்புரவு பணியாட்களும் ஓதுவார்களும் குருக்களும் நியமிக்கப்பெற்று இருக்கின்றனர். அதனால் நாம் செய்ய வேண்டியன இரண்டு.

1. மேற்கூறிய தொண்டர்கள் கவலையின்றி வாழச் செல்லும் வகையெலாம் நாம் உதவுதல் வேண்டும்.
2. திருக்கோயிலை அசுத்தப்படுத்தாது இருத்தல் வேண்டும்.

இவையே இயலும் சரியைத் தொண்டுகள்.

சரியைத் தொண்டில் சிறந்தது யாதெனின் நடமாடும் கோயில்களான உயிரினங்களுக்கு செய்யும் தொண்டே மிகச்சிறந்தது என்று திருமூலர் கூறுகின்றார்.


படமாடும் கோயில் பகவற்கொன்று ஈயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கங்கு ஆகா:
நடமாடும் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடும் கோயில் பகவற்கு அதாமே

-திருமந்திரம்

நாம் இறைவனாகப் பாவித்து ஒரு விக்கிரகத்தை அமைத்த இடத்தையே கோயிலாகக் கருதுகிறோம். உயிருக்கு உயிராக இறைவன் நிற்கும் உடல்பெற்ற உயிரினங்களே நடமாடும் கோயில்களாகும். ஆகவே இந்நடமாடும் கோயிலுக்குத் தொண்டு செய்வதே சிறந்த சரியைத் தொண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



02.10.2006 இல் கிளி/வேலவில் இந்துமகாவித்தியாலயம்
ஆரம்ப நாளும் நவராத்திரி விழாவும்



சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில்
சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்களின் ஏற்பாட்டில் வெளியீடு செய்யப்பட்ட
தரம் 6-11 வரையான மாணவர்களுக்கான இறுவட்டு வெளியீட்டின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் தெய்வத்திற்குச் செய்யும் தொண்டு

அவரவர்கள் செய்யும் தொழிலையே இறைவனை நோக்கிச் செய்யும் தவமாகக் கருதல் வேண்டும். நாயன்மார்கள் அவ்வாறு செய்தே முத்தி பெற்றனர் என்று பெரியபுராணம் கூறுகிறது.

திருநீலகண்டகுயவனார் திருவோடு செய்தும், திருக் குறிப்புத்தொண்டர் சலவைத்தொழில் செய்தும், அமர் நீதி நாயனாராகிய துணிவணிகர், கௌபீனம் கொடுத்தும் இளை யான்குடிமாறனார் ஆகிய நிலக்கிழார் உண்டிகொடுத்தும் இதுபோன்றே மற்றவர்களும் பேரின்பநிலை எய்தினர்.

ஆகவே தெய்வத்தொண்டு என்று எண்ணி நாம் செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் நேர்மையாக அதனைச் செய்ய வேண்டும். உணவுப்பொருட்களில் கலப்படம் செய்தல் கூடாது. வணிகத்தில் அளவுக்கு மிஞ்சி லாபம்பெற நினைத்தல் கூடாது. வாங்கும் கூலிக்கு வஞ்சனை இல்லாது கடமையைச் செய்ய வேண்டும். பிறர் துன்பத்தை, தன் துன்பமாகக் கருதி உதவ முன்வர வேண்டும். கடமையை உணர்ந்து பணியாற்றும் மருத்துவர்களும், செவிலிகளும் ஆற்றுவதே உடம்பால் செய்யும் சிறந்த சரியையாகும்.

### கிரியை

(மனமுவந்து வாயாலும் உடலாலும் செய்வன)

நடமாடும் தெய்வத்திற்கு வாயால் செய்யும் தொண்டுகள்

1. இனிமையாகப் பேசுதல்
2. உண்மையே பேசுதல்
3. பிறரைப்பற்றி புறங்கூறாமை
4. பெரியோர்களை இழிவாகப் பேசாமை
5. பயனற்ற பேச்சைப் பேசாமை முதலியனவாம்

பேச்சைத் தொழிலாகக் கொண்ட

1. ஆசிரியர்கள்
2. வழக்கறிஞர்கள்
3. மேடைப்பேச்சாளர்கள்
4. சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்
5. வழக்குகளில் சாட்சி கூறுபவர்கள் முதலானோர்.

எப்பொழுதும் வாய்மையை இனிமையாகக் கூறித் தம்தம் கடமைகளைச் செய்தலே சிறந்த கிரியை ஆகும். அதனால் மக்கள் நலம் பெறுவர். இன்ப உலகு மலரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகம்

(மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய அந்தக்கரணங்களால் செய்யும் தொண்டு)

இவற்றை மூச்சுப் பயிற்சியால் ஒருமுனைப்படுத்தி நாம் யார்? எப்படி வந்தோம்? நம் கடமை என்ன? அதனை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும். என்பதை சிந்திக்கத் தெரிதல் வேண்டும். இவ்வாறு "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து" என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

## ஞானம்

யோகத்தால் தெளிந்து மெய்ஞ்ஞானம் பெற்றோர், உலகப் பொருள்களின் பற்றை விட்டுப், பற்றற்றானாகிய இறைவனையே பற்றி இன்பநிலை எய்துவர்.

"கற்றீண்டுமெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்பது வள்ளுவரின் வாய்மையுரை.

ஞானத்தில் பாசம், பசு, பதி என மூன்று வகை உண்டு.

**பாச ஞானம்:** உயிர்கள், கண், செவி முதலிய புறக் கருவிகளாலும், மனம், புத்தி முதலிய அகக் கருவிகளாலும் படித்தும் கேட்டும், உணர்ந்தும் பொருட்களை அறியும். உயிகள் சார்ந்தவண்ணம் ஆகும் தன்மை உடையன. அதனால் அப்பாசக்கருவிகளால் அறிந்த பொருட்களைச் சார்ந்து, அவை தாமே யாம் என்று மயங்கி அறியும். அவ்வறிவே பாச ஞானம்.

**பசு ஞானம்:** மேற்கூறியவாறு அறிந்தவை அறிவில்லாத சடக்கருவிகளால் பெற்றவை என்ற உண்மையை உயிர் உணர்ந்த நிலையில் அவையாவும் அசத்துப் பொருளென்றும் தாம் அதற்கு வேறான சித்துப் பொருளென்ற உணர்வு தோன்றும். அவை அனைத்திலிருந்தும் தம்மை வேறான உயர்ந்த பொருளாகக் காணும். அந்நிலையில் கருவி கரணங்களுக்குத்தானே தலைவன் என்ற எண்ணம் தோன்றும். அதன் பயனாய்த் தாமே பதியாவோம் என்ற மயக்க அறிவும் தோன்றும். அவ்வறிவே பசுஞானம். (வேதாந்திகள் தாமே கடவுள் என்று கூறுவது இவ்வறிவின் பயனேயாகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதி ஞானம்:** உயிர்தாம் அறிவுடைப்பொருள் என்பதை அறிந்து, அவ்வறிவிற்கு அறிவாய் இறைவன் இருக்கிறான் என்பதை உணரும் நிலை தோன்றும். அப்பொழுது முன்கண்டு அனுபவித்த பாச ஞானத்தில் அறிவு சற்றும் செல்லாது எப்பொழுதும் பதியையே நோக்கும். அதுவே பதி ஞானம் என்னும் சிவஞானம்.

## திருவைந்தெழுத்து
## ந-ம-சி-வ-ய

என்பனவே

இதனை உச்சரிக்கும் பொழுது வகாரக் குறிலை நெடிலாக்கி நமசிவாய என்பர். இறைவன் நாமமாகக் கூறும் பொழுது நமச்சிவாய என்பர்.

ந - மறைப்பாற்றல் (மருள்)
ம - மும்மலங்கள் (இருள்)
சி - சிவபெருமான் (பதி)
வ - திருவருள் (சக்தி)
ய - உயிர் (ஆன்மா)

**நமசிவய** என்பதைத் தூல பஞ்சாட்சரம் என்பர். இதனைக் கணிப்பதன் மூலம் உலக இன்பங்களைப் பெறலாம். பொருள் அறிந்து கணித்தல் வேண்டும்.

இதன் பொருள்: (இறைவன்) மறைப்புச் சக்தியால் மும்மலங்களும் நீங்கி சிவபெருமான் திருவருளால் ஆன்மா உய்வு பெறும். இதை மனத்தில் நிறுத்தி ஜபம் செய்ய வேண்டும். **சிவயநம** என்பதைச் சூட்சும பஞ்சாட்சரம் என்பர். இதனைக் கணித்தால் முத்திப்பேறு கிட்டும். இதன்பொருள் சிவபெருமான் திருவருளால் ஆன்மா (இறைவன்) மறைப்புச் சக்தியால் மலம்நீங்கப் பெற்று உய்வு பெறும். இது பற்றி

## சம்பந்தர் - அப்பர் - மணிவாசகர்

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவிளக்கினை ஏற்றி தன் புலத்து
தேனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே - சம்பந்தர்

ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார்கட்கும்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வார் மாற்பேறரே -அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே -மணிவாசகர்

# ஓம்


ஓம் என்பதே பிரணவ மந்திரம். ஓம் என்று கூறியே மந்திரங்களை ஓத வேண்டும். ஆதியில் ஓம் என்று கூறியே வேதங்களை ஓதத் தொடங்குவர். பின்னரே "ஹரிஓம்" என்று அதை மாற்றினர்.

**அ–உ–ம்**

என்ற மூன்று எழுத்துக்களே ஓம் ஆகும். வாயைத் திறப்பதன் மூலம் அ ஒலியும், உதட்டைக் குவித்தல் மூலம் உ ஒலியும், வாயை மூடுதல் மூலம் ம் ஒலியும் ஒலிக்கும். உலகில் பேசும் மொழி எதுவாயினும் அதற்கு வாயின் இம்மூன்று அசைவுகளும் இன்றியமையாததாகும். ஓம் எந்த மொழியையும் சேர்ந்ததன்று அது பொதுவாக இறைவனைக் குறிக்கும் ஒரு மந்திர ஒலி.

தமிழைப் பொருத்தவரை "ஓ" வின் அமைப்புப் பிள்ளையாரின் யானை முகத்திற்கு ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. நாம் எழுதத் தொடங்கும் பொழுது போடும் பிள்ளையார் சுழி (உ) தான் ஓம். மந்திரங்களை ஓதும்பொழுது ஓம் ஒலியுடன் தொடங்குதல் மரபு.

ஓமெனும் ஓங்காரத்துள்ளே ஒருமொழி
ஓமெனும் ஓங்காரத்துள்ளே உருவரு
ஓமெனும் ஓங்காரத்துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரத்துள்ளே ஒண் முத்தி சித்தியே
-திருமந்திரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபூத கோவில்கள்

1. திருவாரூர் அல்லது காஞ்சீபுரம் (பிருதிவி) மண்
2. திருவண்ணாமலை (தேயு) தீ
3. திருவானைக்கா (அப்பு) நீர்
4. திருக்காளத்தி (வாயு) காற்று
5. சிதம்பரம் (ஆகாயம்) வெளி

## பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு - இரத்தின சபை
2. சிதம்பரம் - கனக சபை
3. மதுரை - ரஜித சபை
4. திருநெல்வேலி - தாமிர சபை
5. திருக்குற்றாலம் - சித்திர சபை

## தக்ஷிண கைலாசம்

1. திருக்காளத்தி
2. திருச்சிராப்பள்ளி
3. திருக்கோணமலை

## முக்தி தரும் கோவில்கள்

1. அயோத்தி
2. மதுரா
3. மாயா (பூரி)
4. காசி
5. காஞ்சி
6. அவந்திகா
7. துவாரகை

## எட்டு வீரட்டாங்கள்

1. திருக்கண்டியூர் - பிரமன் சிரங் கொய்தது
2. திருக்கோவலூர் - அந்தகாசுரனைச் சங்கரித்தது
3. திருஅதிகை - திரிபுரத்தை எரித்தது.
4. திருப்பறியலூர் - தக்கன் சிரங் கொய்தது
5. திருவிற்குடி - சலந்தராசுரனைச் சங்கரித்தது
6. வழுவூர் (வைப்புத்தலம்) - யானையை உரித்தது
7. திருக்குறுந்தொகை - காமனை எரித்தது
8. திருக்கடவூர் - யமனை உதைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு விடங்கங்கள்

1. திருவாரூர் - வீதி விடங்கர் - அசபாநடனம்
2. திருநள்ளாறு - நகவிடங்கர் - உன்மத்த நடனம்
3. திருநாகைக் காரோணம் - சுந்தர விடங்கர் - பாராவார - தரங்க நடனம், வீசி நடனம்
4. திருக்காறாயில் - ஆதி விடங்கர் - குக்குட நடனம்
5. திருக்கோளிலி - அவனி விடங்கர் - பிருங்க நடனம்
6. திருவாய்மூர் - நீல விடங்கர் - கமல நடனம்
7. திருமறைக்காடு - புவன விடங்கர் - ஹஸ்தபாத நடனம்

## ஏழு ஸ்தான கோவில்கள்

1. திருவையாறு
2. திருப்பழனம்
3. திருச்சோற்றுத்துறை
4. திருவேதிகுடி
5. திருக்கண்டியூர்
6. திருப்பூந்துருத்தி
7. திருநெய்த்தானம்

## காசிக்குச் சமானமாகச் சொல்லப்படுவன

1. திருவெண்காடு
2. திருவையாறு
3. மயிலாடுதுறை
4. திருவிடைமருதூர்
5. திருச்சாய்க்காடு
6. திருவாஞ்சியம்

## தேவாரம் பாடல் பெற்ற கோவில்கள்

| | |
|---|---|
| 1. மூவரும் பாடிய கோவில்கள் | - 44 |
| 2. சம்பந்தரும் அப்பரும் பாடியது | - 52 |
| 3. சம்பந்தரும் சுந்தரரும் பாடியது | - 13 |
| 4. அப்பரும் சுந்தரரும் பாடியது | - 2 |
| 5. சம்பந்தர் மாத்திரம் பாடியது | - 110 |
| 6. அப்பர் மாத்திரம் பாடியது | - 28 |
| 7. சுந்தரர் மாத்திரம் பாடியது | - 25 |
| ஆக பாடல் பெற்ற கோவில்கள் | 274 |

7 திருமுறைகளிலும் பாடல் பெற்றுள்ள கோவில்கள்
திருமறைக்காடு, காஞ்சீபுரம், திருவாரூர் ஆக மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தாந்த சாத்திரங்கள் - 14
## அருளியோரும் நூலும்

| | |
|---|---|
| 1. உய்ய வந்தார் | திருவுந்தியார் (கி.பி.1178) |
| 2. திருக்கடவூர் உய்ய வந்தார் | திருக்களிற்றுப்படியார் (கி.பி.1208) |
| 3. மெய்கண்டார் | சிவஞானபோதம் (கி.பி.1263) |
| 4. அருள்நந்தி சிவாச்சாரியார் | சிவஞானசித்தியார் (கி.பி.1211-1306) |
| 5. இருபா இருபஃது | |
| 6. மனவாசகங்கடந்தார் | உண்மை விளக்கம் (கி.பி.1286) |
| 7. உமாபதி சிவாச்சாரியார் | சிவப்பிரகாசம் (கி.பி.1301-1346) |
| 8. திருவருட்பயன் | |
| 9. வினாவெண்பா | |
| 10. போற்றிப்பஃறொடை | |
| 11. கொடிக்கவி | |
| 12. நெஞ்சுவிடுதூது | |
| 13. உண்மைநெறி விளக்கம் | |
| 14. சங்கற்பநிராகரணம் | |

## சைவத்திருமுறைகள் 12
## அருளியோரும் - பாடலும்

| | |
|---|---|
| 1. திருஞானசம்பந்தர் | திருக்கடைக்காப்பு (கி.பி.671-687) |
| 2. திருநாவுக்கரசர் (அப்பர்) | தேவாரம் (கி.பி.611-691) |
| 3. சுந்தரமூர்த்தியார் | திருப்பாட்டு (கி.பி.731-749) |
| 4. மாணிக்கவாசகர் | திருவாசகம், திருக்கோவையார் (கி.பி.3ஆம் நூற்றாண்டு சிலர் 9 என்பர்) |
| 5. திருமாளிகைத்தேவர் உள்ளிட்ட ஒன்மர் அருளியது | திருவிசைப்பா (கி.பி.980-1075) |
| சேந்தனார் அருளியது | திருப்பல்லாண்டு |
| 6. திருமூலர் | திருமந்திரம் (கி.பி.5ஆம் நூற்றாண்டு) |
| 7. ஆலவாய் அண்ணல் உள்ளிட்ட பன்னிருவர் அருளியது | பதினோராம் திருமுறை (கி.பி.7 முதல் 10 ஆம் நூற்றாண்டு தழுடிய) |
| 8. சேக்கிழார் | திருத்தொண்டர்புராணம் என்ற பெரியபுராணம் (கி.பி.1144-1181) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடக்கு

துடக்கு என்ற ஒரு விடயம் இந்துக்கள் மட்டுமே கவனிக்கின்ற ஒன்று. ஆசௌசம் எனக்கூறப்படும் இந்த விடயம் இந்துக்களின் அனுட்டானத்தில் இருப்பதால் அவர்கள் மிகவும் நுணுக்கமாகப் புனிதம் பேணுபவர்களாக விளங்குகிறார்கள். அதேநேரம், இன்று இந்தத் துடக்கு என்பது பலருக்குப் பெரும் தொந்தரவான ஒன்றாகவும், புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவும் உள்ளது.

துடக்கை யார் எந்தெந்த நேரத்தில் எவ்வளவு காலம் பேணவேண்டும் என்ற தெளிவு பலரிடம் இல்லாமலுள்ளது. இது பலருக்குச் சிரமம் தருவதாக இருப்பதுடன், சிலருக்கு வசதியாகவும் உள்ளது. "தேவைக்கேற்ப விரும்பியபடி துடக்கைப் பேணலாம். விரும்பிய நாளில் துடக்கைக் கழிக்கலாம்" என்ற அளவுக்கு அது ஒரு கேலிக்கூத்தாகவும் ஆகிவருகிறது.

நமது சமய நம்பிக்கைகள், சடங்காசாரங்களின் நடைமுறை என்பனபற்றி நமது அடுத்த தலைமுறையினரிடம் இயல்பாகவே கேள்விக்குறிகள் தோன்றிவரும் இன்றைய நாளில், துடக்கு பற்றிய அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறமுடியாமல் நம்மவர்கள் திகைக்கின்ற நிலைமை அவதானிக்க முடிகிறது. இதனால் துடக்கு என்பது தேவையற்ற ஒன்று என்னும் அலட்சியப் போக்கும் தோன்றக் காண்கிறோம்.

எனவே, பழைய தலைமுறையினருக்கும் புதிய தலை முறையினருக்கும் பாலமாக நிற்கும் இடைநிலையினரான நாம் நன்கு சிந்தித்து ஒரு தெளிவைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். மரபுவழிப்பட்ட இதன் ஆரம்ப விளக்கங்களும், காலதேச வர்த்த மானங்களுக்கிணங்க நாம் மேற்கொள்ளக் கூடிய பொருத்தமான நடைமுறைகளும், முடிந்த அளவில் அறிவியல் - விஞ்ஞான ரீதியாக இவ்விடயம் தொடர்பாக நாம் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் என்பனவும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

முதலில் ஒரு விடயத்தில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். வேதம், சிவாகமம், தர்மசாஸ்திரங்கள், இதிகாச புராணங்கள் முதலியவற்றை நாம் நம்பி அவற்றில் சொல்லப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற நிச்சயம் நமக்குள் ஏற்பட வேண்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் ஆன்மாக்கள் கடைத்தேற அருளுகிறார். அதற்கு இந்த நூல்கள் உதவுகின்றன என நம்பி, முன்னோர்கள் வழியில் நாமும் நடந்து, நல்லொழுக்க நெறியில் வாழ்ந்து தர்மம் பேணி, இவ்வுடலையும் மல அழுக்குகளையும் நீக்கி இறைவனுடன் ஐக்கியமாகவேண்டும் என்ற அசையாத நம்பிக்கையும் விசுவாசமும் இருந்தால்தான் நாம் தொடர்ந்து இவ்விடயங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்வதில் பயனுண்டு. அரைகுறை நம்பிக்கையுடன் இவற்றிலீடுபட்டு ஐயங்கள் பலவற்றை வளர்த்துக்கொண்டு அக்கறையில்லாமல் ஆசாரங்களைக் கைக்கொள்வதைவிட முற்றாக இந்த நம்பிக்கைகளைக் கைவிட்டு "பகுத்தறிவு வாதி" என்ற பெயருடன் நவீன வாழ்க்கையை முழுமையாக ஏற்றுக்கொள்வது மேல்.

பெண்ணானவள் தீட்டுக் காலங்களில் சேவைகளில் ஈடுபடுவதால் அவள் சேவையாற்றும் பல நிறுவனங்களில் உள்ள இயந்திரங்கள் முதலியவற்றில் கோளாறுகள் ஏற்பட்டிருப்பதையும், உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருப்பதையும் மேலைத்தேய விஞ்ஞானிகள் சிலர் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிந்துள்ளார்கள்.

தீட்டு, துடக்கு முதலிய ஆசாரக் குறைவுடையோர் கலந்துகொள்ளும் வைபவங்கள் பல ஏதாவது குழப்பங்களுடன் முடிந்துள்ளதை அனுபவத்தில் பலர் கண்டுள்ளனர். உடல்சம்பந்தமாக மட்டுமல்லாமல், மனம் சம்பந்தப்பட்டதாகவும் இவ்விடயம் இருப்பதால், மனோதத்துவ ரீதியாக இவ்விடயம் பல பாதிப்புக்களை ஏற்படுத்தவல்லது என்பதை மேலைத்தேய விஞ்ஞானிகள் பலர் இன்று ஒப்புக் கொள்கின்றனர். இவ்விடயங்களை நம்மவர்கள் முதலில் கவன த்தில் கொள்ள வேண்டும்.

துடக்குக் காலத்தில் ஆலயத்துக்குச் செல்லுதல், கிரியைகளில் பங்குகொள்ளுதல், விரதம் இருத்தல், சுபகாரியங்களில் கலந்து கொள்ளல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

இங்கு மிக முக்கியமான ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டும்.

ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் நேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு சீரணிக்கும் வரை ஆசௌசம். அறிந்து புசித்தால் ஆசௌசியின் ஆசௌசக் கழிவுநாள்வரை அவ்வுணவு புசித்தவரும் ஆசௌசம் காக்க வேண்டும்.

சில ஊர்களில் மரணச்சடங்கு நிகழ்ந்த மறுநாள் "உரிமைச்சோறு உண்ணுதல்" என்று அயலவர்கள் யாவரையும் வருந்தி அழைத்து உணவு கொடுப்பார்க்ள. "குறை நினைப்பார்களே" என்று அயலவர்களும் அங்கு சென்று வயிறு புடைக்கத் துடக்குச்சோறு உண்பார்கள். இதேபோல் "எட்டுச் செலவு" என்ற பெயரிலும் "மச்சப்படையல்" என்ற பெயரிலும் நடைபெறும் விருந்துபசாரங்களிலும் யாவரும் கலந்து கொள்வார்கள். ஆனால், அதனால் தங்களுக்கும் துடக்கல்லவா என்ற எண்ண சிறிதுமின்றி, அடுத்த நாளே ஆலயம் சென்று சங்கல்பம் செய்தல் முதல் சாமி காவுதல்வரை சகல சுபகாரியங்களிலும் பங்குபற்றுவார்கள். இது அறியாமையின் விளைவா? அல்லது அலட்சியத்தால் வரும் ஆணவச் செயலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குமிக முக்கியமாக விளங்கிக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன.

1. உரிமைச்சோறு என்பது துடக்குரிமை உள்ளவர்களுக்கு மட்டுமே உரியது. மற்றவர்கள் அதில் கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டும். கலந்துகொண்டால் முப்பது நாளும் துடக்குக் காக்க வேண்டும்.

2. இறந்தவர்கள் தெய்வ நிலைக்குப் போய்விட்டார்கள் என்பதே நமது நம்பிக்கை. அவர்களுக்கு மச்சம், மாமிசம் படைப்பது என்பது சற்றும் பொருத்தமில்லாத ஒன்று. பிரேத நிலையிலிருக்கும்போது அவர்களுக்கேற்படும் பெரும்பசி, பெருந்தாகம் என்பன தீருவதற்காகப் பெரும் **படையல் (பிரபூத பலி)** ஒன்று அவசியம் செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே "எட்டுச்செலவு" நிகழ்கிறது. இந்தப் படையல் அனைத்து உணவுப் பொருட்களையும் கொண்டதாகவும் அதிகமாகவும் இருக்க வேண்டும் என்பதே முக்கியமல்லாமல், இறந்தவருக்குப் பிரியமான அனைத்தையும் கொடுத்தல் எனப் பொருள்படாது. சுத்தபோசனமே இங்கு படைக்கப்பட வேண்டும். அதனை தொழும்புக்காரர் (முன்னாளில்) எடுப்பது அல்லது கடலில் சேர்ப்பது என்பதே முறை. உறவினரும் அயலவரும் அதனை ஒரு விருந்தாக உண்டு மகிழ்வது பாப காரியம். இன்று பல இடங்களில் மச்சமாமிசத்துடன் மதுவும் சேர்த்து, அமைதியாக ஆன்மீகரீதியல் நடத்த வேண்டிய நிகழ்வு, பிறந்தநாள் கொண்டாட்டம் போல் கேளிக்கைகளுடன் நடைபெறும் கேலிக்கூத்தைக் காணலாம். (அந்தணர்கள் வீடுகளில் நடக்கும் தசாகம் என்னும் கல்லெடுப்புக் கிரியைகளில் இறந்தவரை நினைத்துப் படைக்கப்படும் உணவு கல்லோடு சேர்த்துக் கடலில் போடப்படுகிறது. அதை உறவினர்கள் உண்பதில்லை)

3. ஜனன மரணம் நடந்த வீட்டிற்குள் செல்லுதலும் அவர்களுடன் கலந்து பழகுதல், அவர்களிடம் நீர் பருகுதல், உணவுண்டல் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும்.

4. இன்று பலரும் தெரிந்துகொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விடயம் உண்டு. உரிமைச்சோறு சாப்பிடுதல் என முன்னர் குறிப்பிட்டதுபோல, துடக்குரிமையுடையோர் மட்டுமே வாய்க்கரிசி போடுதல், குளிப்பாட்டுதல், சவம் தூக்குதல் முதலியவற்றில் ஈடுபட வேண்டும். அச்செயல்களும் துடக்கு என நூல்கள் விதிக்கின்றன.

31ஆம் நாளில் வீட்டிற்குப் புரோகிதர் (குருக்கள்) வந்து துடக்குக் கழித்தல் என்ற கிரியை செய்த பின்பே துடக்குக் கழிகிறது. இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, துடக்குக் கழித்தல் இரு அம்சங்கள் சரியாக அமைய வேண்டும். அதற்குரிய நாள்கள் நிறைவுபெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குரிய கிரியை நடைபெற வேண்டும். உரிய நாளின் முன் கிரியை செய்துவிட்டுத் துடக்குக் கழிந்துவிட்டது என நாம் திருப்தி கொள்ள முடியாது உரிய நாள் கழிந்து விட்டது தானே என என்பதால் கிரியை செய்யமலே துடக்கு கழிந்து விட்து என எம்மை நாம் ஏமாற்றிக் கொள்ள முடியாது. இரண்டும் சரியாக அமைய வேண்டும்.

இன்னும் சில தவறான நடைமுறைகள் நம்மவர்கள் மத்தியில் இன்று காணப்படுகின்றது. 'நான் இப்போது கொஞ்சநாள் மச்சம் சாப்பிடுவதில்லை" என்றும் 'நான் தீட்சை கேட்டனான்" என்றும் தூரத்துச் சொந்தம் தானே" என்றும் வெளிநாட்டில்தானே நடந்தது கடல்கடந்தால் துடக்கில்லை தானே" என்றும் குறித்த நாளிற்குச் சில நாட்கள் முன்னதாகவே துடக்குக் கழிப்பவர்கள் பலர் உள்ளனர். இவை யாவும் சாஸ்திர விதிப்படி பாப காரியங்களே. குறைந்த நாளில் துடக்குக் கழிக்கும் உரிமை பெற்றோர் பரம்பரை பரம்பரையாகச் சுத்த போசனராக உள்ள, சைவாசாரம் மிக்க, தீட்சை பெற்ற குடும்பத்தவர் மட்டுமே.

ஆசௌசம் பற்றிய அடிப்படை நியதிகளை வீழிநாதர் இயற்றிய அகபஞ்ச சஷ்டி நூல் வரையறுக்கிறது. **வைத்தியநாத தீட்சிதீயம், ஆசௌச தீபிகை, யஜுர்வேதீய ஆபஸ்தம்ப அபரப்ரயோகம்** முதலிய நூல்களும் **காமகாகமம், சுவாயம்புவ ஆகமம்** என்பனவும் இந்த விபரங்களைத் தெளிவாகத் தருகின்றன.

**காமிகாகமத்தில்,**

**விப்ரே சுத்திர் தசாஷஸ்யாத் ஷத்ரியெ த்வாதசர்நிகாத்**
**தச பஞ்சாஷ்நிகாத் சுத்தி வைஸ்யே, சூத்ரே ச மாசிகாத்"**

என ஆசௌச நியமம் கூறுகிறது.

அந்தணர்களுக்குப் பத்து நாட்களிலும், க்ஷத்திரியாகளுக்கு 12 நாட்களிலும், வைஸ்யர்களுக்கு 15 நாட்களிலும், சூத்திரர்களுக்கு ஒரு மாதத்திலும் துடக்கு நீங்குகிறது என்பது இதன் பொருள்.

இதே கருத்தைச் சுவாயம்புவ ஆகமமும் கூறுகிறது.

இந்நாளில் க்ஷத்திரியர், வைஸ்யர் என்ற வகுப்பினர் உரிய முறைப்படி காண்டலரிது. மாமிச போசனம் நீக்கிச் சமய, விசேட தீக்ஷைகளைப் பெற்று நித்ய சிவபூஜை வழிபாட்டுடன் இருக்கும் சைவக் குருமாரும், வேறுசிலரும் வைசிய வகுப்பார் போல நோக்கப்படலாம். ஏனையோர் யாவரும் அந்தணர், சூத்திரர் என்னும் இரு வகுப்பில் அடங்குவர்.

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்குப் பத்துநாள், மச்ச மாமிச போசனமின்றி சைவசமய ஆசாரப்படி ஒழுகும் சற்சூத்திரருக்கு 15 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசம் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் நியதிகள்.

ஆலயங்களில் தொண்டு புரியும் சிவகன்மருக்கு 20 நாளும், திராவிடகானம் பாடவல்லாருக்கு 15 நாளும் ஆசௌசம் என்ற ஒரு குறிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இவ்வெல்லை அவர்கள் சுத்த சைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இன்று ஆலயத்தில் தொண்டு செய்யும் பலர் காலையில் இறைச்சிக்கடையிலும், மாலையில் ஆலயங்களிலும் காணப்படும் நிலையில், பழைய வழக்கம் எனக் காரணம் காட்டி, அவர்கள் பதினாறு அல்லது இருபது நாளில் துடக்குக் கழிக்கலாமா என்பது அவர்கள் தம்மைத் தாமே கேட்க வேண்டிய கேள்வி.

பாரதத்தின் சில பிரதேசங்களில் 21ஆம் நாள் துடக்குக் கழிக்கும் வழக்கும் நிலவுகிறது. யாழ்ப்பாணத்தில் சிலர் 16ஆம் நாள் துடக்குக் கழிக்கின்றனர். மேலே குறிப்பிட்ட விதி விலக்கைத் தமக்குச் சாதகமாகச் சிலர் எடுத்துக் கொள்கின்றனர் அன்றி இதற்குச் சாஸ்த்திரப் பிரமாணம் இல்லை.

பிறப்பு, இறப்பு தொடர்பாகத் துடக்குக் காத்தல் என்ற பாரம்பரிய மரபு உடல் சம்பந்தமாக மட்டுமன்றி, மன உணர்வு தொடர்பாகவும் கைக்கொள்ளப்படுவது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உயிர் அல்லது ஆன்மா உடலோடு தொடர்புகொண்டு, பூமியில் பிறக்கின்ற நிகழ்வும், மறுதலையாக, உடலை விட்டு உயிர் பிரிந்து போகின்ற நிகழ்வும் மிக முக்கியமானவை. ஒன்று இன்பமானது. மற்றது துன்பமானது. இரண்டுமே மன உணர்வுகளை அதிகம் பாதிக்கத்தக்கவை. நேரெதிரான இவ்விரு சம்பவங்களிலும் ஒரு பொதுமை காணப்படுகிறது. அடுத்துவரும் வாழ்க்கை நன்றாக அமையவேண்டும் என எதிர்பார்த்து நல்ல அடிப்படைகளை ஏற்படுத்தித் தெய்வீக நிலையில் ஆசி வேண்டுதல் என்பதே அந்தப் பொது இயல்பு.

இந்நிகழ்வுகள் அந்த சுற்றாடலிலும், மிக நெருங்கியவர்கள் தொலைவில் இருந்தாலும், அவர்களையும் பாதிக்கக் கூடியவை. நுண்மையான சில அதிர்வுகள் அல்லது அருட்டுணர்வுகள் தொடர்பானவை என இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு மாதகாலம் இந்தத் துடக்கு நீடிக்கிறது. குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் தாய் தந்தையர்க்கும், தந்தையின் சகோதரர்கள், பெற்றோர் மற்றும் ஆண்வழி உறவினர்களுக்கும் இத்துடக்கு உண்டு.

இதேபோல ஒருவர் இறந்தால் இறந்தவரின் ஆண்வழி உறவினர்களுக்கு அத்துடக்கு உண்டு.

ஒரு பெண் திருமணமானபின் கணவன் வீடு செல்லுதல் என்ற பழைய முறை இன்று யாழ்ப்பாணத்தில் அதிகம் பின்பற்றப்படுவதில்லை. கணவன்தான் மனைவியின் வீட்டில் மாமன் - மாமியுடன் வாழ்கிறார்.

இந்நிலையில் துடக்குக் காத்தலை உரிய முறையில் பேணுவதிலும் சிக்கல் நேருகிறது. குழந்தை பிறந்ததும் ஒரே வீட்டில் வாழ்கின்ற காரணத்தால் குழந்தை பெற்ற பெண்ணின் பெற்றோர் ஆண்வழித் தொடர்பு இல்லாவிட்டாலும் துடக்குக் காக்க நேருகிறது. ஆனால் குழந்தையின் தந்தையுடைய பெற்றோரும் சகோதரர்களும் உண்மையான துடக்குக்காரர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு விதமாகப் பார்த்தால் அந்த ஆன்மாவானது சகோதரனுக்குக் குழந்தை பிறந்தால், அந்தத் துடக்கு அவனுக்கு மட்டுமல்லாமல் அவனது மனைவிக்கும் உண்டு எனப் புரிந்துகொள்ள வேண்டும். 'என்ரை மனிசன்ரை தம்பிக்குத்தானே துடக்கு' என எண்ணும் பெண்களும், தமது தந்தையின் துடக்கைக் காக்கும் பெண்களும் உள்ளனர். திருமணம் செய்த ஒரு பெண்ணுக்கு அவளது பெற்றோர் மற்றும் சகோதரர்களின் துடக்கு இல்லை என்பதும், அவளது கணவனுடைய பெற்றோர், சகோதரர்களின் துடக்கே உண்டு என்பதும் கவனிக்க வேண்டும்.

பெண்கள் ருதுவாகும்போதும் தீட்டு ஒன்று உண்டு. ஆனால், அது அந்தப் பெண்ணை மட்டுமே சாரும். பூப்புத்தீட்டு குடும்பத்தவரையோ உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாதவிலக்காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டு இல்லை.

ஆனால், அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும், மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும், ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்பு படுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

பெண் ருதவாகி 7ம், 9ம், 11ம் நாள் அவளுக்குத் தோயவார்த்து வீட்டில் துடக்குக் கழித்தல் செய்ததும் துடக்கு நீங்கிவிடுகின்றது.

மாதவிலக்குக் காலத்தில் ஒரு பெண் நான்கு நாட்களும் பூரணமாக விலக்கப்பட்டவளே. அந்த நாட்களில் அவள் சுபகாரியங்கள் எதற்கும் தகுதியற்றவளாகிறாள். அவள் தனியே ஒதுங்கி இருப்பது அவசியம். ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களில் கலந்து கொள்ளலாம்.

20 நாளின் மேல் பூப்புவரின் மேற்கூறிய முறையில் கடைப்பிடிக்கலாம். 20 நாளின் முன் பூப்புவரின் ஸ்நானத்தினால் சுத்தமாகும். அதை மாதவிலக்காகக் கொள்வதில்லை.

ஆசௌசம் பற்றிய மேலதிக விபரங்களையும் சிறப்பு விதிகளையும் விபரம் தெரிந்தோரிடம் கேட்டும், நூல்களில் படித்தும் நன்கு அறிந்து தவறின்றிக் கைக்கொண்டு, நமது பாரம்பரிய ஆசார ஒழுக்கங்களைப் பேணுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியைகள்

உயிர் உடலோடு கூடி வாழும் நிலையில் அதன் நன்மை கருதிச் செய்யப்படுங் கிரியைகள் பூர்வக்கிரியைகள். எடுத்த உடலை விட்டு விலகிய பின் அதன் நன்மை குறித்துச் செய்யப்படுங் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப் பெயர்பெறும்.

உயிர் என்றைக்கும் வாழும் வஸ்து (Soul is a living Principle). அதன் வாழ்க்கை மூன்று நிலைகளில் வைத்து அவதானிக்கப்படுகிறது. அது இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் வாழ்க்கை நிலை **இம்மை**. இவ்வுடல் வீழ்ந்த பின் திரும்பவும் இது போல் உடலிற் கூடி வாழும் வாழ்க்கை **மறுமை**. உடல் வாழ்க்கைக்கான வினைத்தொடர்பு முற்றாக நீங்கி இறைவனடி சேர்ந்து விடுதல் **அம்மை** எனப்படும்.

மூன்று நிலையிலும் உயிர்க்கு வாழ்வுண்டு. இவற்றில் இம்மை வாழ்க்கைக்கும் மறுமை வாழ்க்கைக்குமிடையில் குறிக்கப்பட்ட அளவு ஒரு இடையீடுண்டு. அந்த இடைக்கால எல்லை குறைந்த பட்சம் ஒரு வருடம் என்பார்கள்.

நம்மவர் யாரேனும் முன் பின் அறியாத ஒரு புதுத்தேசத்திற்குப் போக நேர்ந்துவிட்டால் எமக்குப் பெரும் விசாரமேற்படுகிறது. அங்கு இடந்துறைகள் எப்படியோ? வாழ்க்கை வசதிகள் எப்படியோ? என்ற வகையில் அவ்விசாரங்கள் தோன்றும். அது போலவே, நம்மோடு உடனாய் நம்மத்தியில் உடல் கொண்டு வாழ்ந்தவர் ஒருவர் உடலைவிட்டுப் போய்விட்டார் என்றபோது, எங்கே போனார்? அவர் போன இடந்துறை வசதிகள் எப்படியோ? அங்கு அவர் வாழ்க்கைக்கான ஏற்பாடுகள் எப்படியோ? என்ற விசாரங்கள் எழவேண்டியதியல்பேயாம்.

இங்கே வாழுங்காலம் முழுவதும் அவர் அறிவுணர்ச்சியுள்ளவராயிருந்தார். தம் அறிவுணர்ச்சிக்கேற்றபடி உண்ணுதல், பருகுதல் முதலிய பல்வேறு போகங்களை அநுபவிப்பவராயிருந்தார் இங்கே அவர் பெற்றிருந்த உடல் இவ் எல்லாவற்றையும் அவன் தேடுவதற்கும் அநுபவிப்பதற்கும் சிறந்த ஒரு சாதனமாயிருந்தது. இவ்வுடலை விட்ட மாத்திரத்தே அவர் அவ் வாய்ப்புக்களை இழந்தவரானார். இனி, அவர் மானங்காத்தற்கு, அவர் பசிக்கு, அவர் தாகத்துக்கு என்ன வழி? என்பது ஒரு வகை விசாரம். அநாதையாக அந்தர வழியில் விடப்பட்டிருக்கும் அவருக்குப் படைப்புப் பேதங்களாக உள்ளன என்று சொல்லப்படும். பூதபைசாசங்களால் ஏதும் நிகழ்ந்து விடுமோ என்தொருவகை விசாரம். மேல் அவருக்கு வாய்க்க இருக்கும் பிறப்பு நல்ல பிறப்பாக வாய்க்குமோ என்றது ஒரு வகை விசாரம். இவ்விடைக்காலத்தில் உளதெனப்படும் நரக வாதனையில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதியுங் துன்புற நேருமோ என்றதொரு வகை விசாரம். இங்கிருந்து இறந்து போன ஒருவரைப் பற்றி இங்குள்ளோருக்கு எழவேண்டிய விசாரங்களை இவைகளாகும்.

இக்கட்டத்தில் இவர்கள் சம்பந்தமான சேம நலன்களைக் கவனித்தற்கென்று இறைவனாற் படைக்கப்பெற்றுள்ள பிதிரர் என்ற ஒருவகைத் தேவசாதியார் இருக்கின்றார்கள். மரணத்துக்கு முந்திய நிலையில் நம் சேம நலன்களுக்குச் சிறப்பாக உதவும் இந்திரன், வருணன் முதலிய தேவர்களைப் போல, மரணத்தின்பின் நமது சேம நலன்களுக்குச் சிறப்பாக உதவும் பொருட்டாக இருப்பவர்கள் பிதிரர்கள். தேவர்களைப் போலவே பிதிரர்களும் தம்மைக் குறித்து நம்மாற் செய்யப்படும் சத் கிரியைகளினால் தாம் திருப்தியுற்ற பின்னரே தாம் கவனித்தற்குரிய சேமநலன்களைக் கவனிப்பவர்கள் ஆவார்கள்.

இறந்துவிட்டவர் அரூபியாய் விட்டார். எவ்வகையிலும் நாமாக அவரோடு தொடர்பு கொள்ளல் இயலாது. ஆகவே அதற்குரிய உத்தரவாதமுள்ளவர்களாகிய பிதிரர்களை வருந்தியழைத்து நம்முன் இருத்தி அவர்களை நமது பூசை, தானம், தர்ப்பணம் என்பவற்றால் திருப்திப்படுத்தி, இறந்தோரின் சேமநலன் பொருட்டாக நாம் எவற்றையெல்லாம் செய்ய விரும்புகிறோமோ அவற்றையெல்லாம் அவர்களைக் கொண்டே செய்வித்தல் தான் அபரக்கிரியைகளின் பொது நிலைப்பண்பாகும்.

பொதுவாக நம் வாழ்வில் நமக்கு நிகழும் சேமலாபப் பேறுகள் எல்லாவற்றிலும் தேவர், பிதிரர்களின் பங்கு முக்கியமானது. அவர்களின் திருப்தி எங்கள் சேமலாபப் பேறுகளை நன்கமையச் செய்யும். அவர்களின் வெறுப்பு அவைகளைக் குறைக்கவும் கெடுக்கவும் பார்க்கும். இவ்வுண்மை சமயநிலையில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு ஆஸ்திக உண்மையாகும். இருவர் சகாயமும் எப்போதும் வேண்டுவன எனினும், மரணத்திற்குப்பின் பிதிரர் சகாயம் பிரத்தியேகமாக வேண்டப்படும் நிலையுண்டு. இதனால், இல்வாழ்வார்க்கு தேவர் கடனும் பிதிர்கடனும் இன்றியமைதனவாயின.

உயிர்வாழ்வின் சேமநலப்பேறே கண்ணாகக் கொண்டு நூல் செய்த திருவள்ளுவர் இல்வாழ்வார் கடமைகளைக் குறிப்பிடும்போது,

**"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"**

என்றார். இதில் தென்புலத்தாரே முதலிற் குறிக்கப்பட்டிருத்தல் கருத்தாகும். தென்புலத்தார் என்போர் பிதிரர். பிரபஞ்ச வெளியில் தெற்குத்திசை அவர்களுக்கிடமாகக் கருதப்பட்டுள்ளமையால் அவர்கள் தென்புலத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பட்டனர். இப்பிதிரர்கள் தம்படைப்பமைதியின்படி ஸ்கந்தர், சண்டர், கணாதீசர் எனவும் ஈசன், சதாசிவர், சாந்தர் எனவும் மும்மூன்று பேர் இரு பகுப்பில் உள்ளனர். சமயதீட்சையாளர்களாய் இறந்தவர்களின் நலத்திற்கு முன்னைய மூவரும், விசேட தீட்சையளார்க்குப் பின்னைய மூவரும் உதவுவதாகக் கொள்ளப்படும். தனித்தனி இம்மூவர் தொகுதியிற் சேர்ந்தோர் ஒருவருக்கொருவர் விருத்தராய் தந்தை வழி மரபுத்தொடர்புள்ளவர்களாய் இருப்பார்கள். இறந்த சமய தீட்சையாளர் ஒருவர் சார்பில் பார்க்கும்போது ஸ்கந்தர் என்பவர் அவர் பிதா: சண்டர் பேரன்: கணாதீசர் பாட்டன் எனப்பாவிக்கப்படும் நிலையுண்டு. இக்காரணத்தினாலேயே அவர்கள் பிதிரர் எனப்பெயர் பெற்றதுமாம். பிதிரர்கள் - பிதாக்கள்

சாதாரண வாழ்க்கையில் நம் பிதா, பேரன், பாட்டன் ஆகியோரின் கரிசனையும் தாய் போர்தி, பாட்டி ஆகியோரின் கரிசனையும் நமக்கு உதவுவதற்கு நேரொப்பாக மரணத்தின் பின்னைய வாழ்வில் இவர்களின் கரிசனை நமக்கு உதவுவதாகும்.

"மாதா மனமெரிய வாழாய் ஒருநாளும்"

என்பது உலகநீதி. இந்த மாதா பிதாக்களுக்கு நேரொப்பாக அங்குள்ள பிதிரர்களையும் கருதி அவர்கள் மனங்கோண வகையில் அவர்களதைத் திருப்தி செய்யவேண்டும். கடப்பாடு இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அபரக் கிரியைகளின் பொதுநிலைப் பண்பாக உள்ளதொன்றையும், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுவதன் அவசியத்தையும் இதுவரை கவனித்தோம். இனி அவற்றை ஒழுங்கு முறைப்படி சற்று விரிவாக நோக்குவோம்.

## உத்கிராந்திக் கிரியை

தேகத்தை விட்டு உயிர் கிளம்புதல் சார்பாக அவ் விறுதிக்கட்டத்திற்கு செய்யப்படுங்கிரியை. உத்கிராந்தி - கிளம்பிப் போதல். உயிர் பிரிய இருக்கும் ஒருவர் அகப்புறத்தூய்மையுள்ளவராயும், சிவத்தியானமுள்ளவராயும், தன்னாலியலுமளவு தானதருமஞ் செய்த திருப்தி உள்ளவராயும் இருக்க வேண்டம். என்பது விதி. அந்நிலையிலும் அவருக்குப் போதுமான அளவு அறிவுத்தெளிவும் உடல் வலுவும் இருக்கக் கூடுமானால் அதற்குரியவற்றை அவரே தாமாகச் செய்யக் கடவர். அது இல்லாத பட்சத்தில் அவர்க்காக மற்றொருவர் அவற்றினைச் செய்யக் கடவர். இவ்வகையில் விசேடதீட்சையாளர் சார்பில் முறைப்படியான சிவபூசையும், சமயதீட்சையாளர் சார்பில் திருமுறைப்பாராயணத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவமந்திர செபமும் இடம்பெற வேண்டுவனவாம். விபூதிதாரணமும் சிவமூலமந்திர செபமும் எல்லோர்க்கும் இன்றியமையாதனவாகும்.**

**சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயே னுன்னை**
**எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என்கன் டாயே.**

- அப்பர் தேவாரம்

**நற்றவாஉனை நான்மறக்கினுஞ்சொல்லுநா நமச்சிவாயவே**

- சுந்தரர் தேவாரம்

**ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து**
**மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்**
**செய்யுந் திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக்**
**கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே**

-பட்டினத்தார் பாடல்

என இங்ஙனம் திருமுறைகள் இக்கிரியை உண்மைக்கு இடந் தந்துள்ளன. இக்கிரியைப் பண்பே இனிமேல் நிகழவிருக்குங் கிரியைகளின் போக்கை மட்டிடுதற்குஞ் சிறந்த கருவியாய் அமையும். செத்தவர் எப்படியாவது சிவலோகஞ் சேரவேண்டும் என்பதே பொது அபிப்பிராயமும் ஆசையுமாகும்.

## அந்தியேஷ்டி

அந்திய + இஷ்டி, அந்திய காலத்திற் செய்யுங் கிரியை. இஷ்டி - கிரியை. இறந்தவரின் தேகத்திற்குப் பிரேதம் என்ற சொல் பிரத்தியேகமாக வழங்கும். உடலோடு உயிர் வாழ்ந்த காலத்தில் அவ் விரண்டுக்குமிடையிலிருந்த பிரிக்கமுடியாத செறிவின் முறைமையை ஆதாரமாகக் கொண்டு உடல் விட்டுப்போன உயிரின் நன்மைக் காவனவற்றை இங்கே விடப்பட்ட அவ்வுடலில் வைத்துச் செய்யுங் கிரியைகள் அந்தியேஷ்டி எனப்படும். இதன் விரிவுகளைக் கவனிக்குமுன் இது சம்பந்தமான மற்றொன்று இங்கு இடம்பெற வேண்டியுள்ளது.

## சாதாரணமான நம்மவர்க்கு

அந்தியேஷ்டிக் கிரியை செய்யப்படுவதில் அவரவருடைய சமயாசார ஒழுக்கநிலை பிரதானம் பெறும். நிலை வேறுபாடு பலதரமாயிருக்குமாயினும், ஒரு பரவல் நோக்கில் வைத்து அது இரு வகையில் அடக்கப்படுகிறது. விசேடதீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரிய அபிஷேகம் என்பனவற்றில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டாவது பெற்றுள்ளவர்களின் நிலை ஒருவகை. சமயதீட்சை மாத்திரம் பெற்றுள்ளவர்களின் நிலை ஒருவகை. முந்திய வகையினர்க்கு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேதத்தின் சார்பாக நடைபெறவேண்டுங் கிரியைகள் அனைத்தும் ஒரே தொடர்பாக அவர் இறந்த அதே நாளில் நடந்து முடியும். அவர் இல்லத்தில் பிரேத சுத்திக்கான சாதாரண கிரியையும், மயானத்தில் அவருடைய **அத்துவாக்களைச் சோதனை செய்து** அவருக்கு நேரடியான ஆத்ம சுத்தி வருவித்தற்குரிய விசேட நிர்வாணக் கிரியையும் நடைபெற்று அவர் சிவாக்கினியில் தகிக்கப்பட்டுச் சிவமாவார். **இவ்வெல்லாக் கிரியைகளும் ஒரே கூட்டாக அந்தியேஷ்டி** என்ற பெயரில் அடங்குவன.

சமயதீட்சை மட்டுமுடைய சாதாரணமானவர்க்குப் பொதுவாகச் சமயாசாரத்தரம் குறைவாயிருப்பதாலும், இவர்களிற் பெரும்பாலார் சமயாசார ரீதியாக விலக்கப்பட்ட சில காரியங்களையும் (மது மாமிசாதி) தழுவுஞ் சுபாவமுடையாராயிருப்பதாலும், அவர்களுக்கு இவ் வந்தியேஷ்டிக் கிரியையாகிய ஒரே கிரியை இரண்டு கூறாக்கப்பட்டு இறந்த அன்று நடப்பது சவக்கிரியை எனவும், பின்பு முப்பத்தோராம் நாள் நடப்பது அந்தியேஷ்டிக்கிரியை எனவும் நடைமுறையில் இருந்து வருகின்றது. எந்தக்கிரியையும் விடப்பட்ட தேகத்தில் வைத்தே எவர்க்கும் நிகழவேண்டியது. ஆனால் நம்மவர் தகுதிக்குறைவு, குறைந்த பட்சம் முப்பதுநாட் காலக்கழிவு வேண்டி நிற்கின்றது. அதுவரை பிரேத தேகத்தை வைத்திருக்க முடியாமையால் சவக்கிரியையோடு அதைத் தகித்துவிட்டு, பிறகு 31 ஆம் நாள் **"புத்தலிகா"** என்ற ஒரு தேகம் தர்ப்பையினால் புதுவதாகப்படைத்து, அதுவே இறந்தவரின் சொந்தத் தேகமாகப் பாவித்து அந்தியேஷ்டி என்றதற்குரியன வெல்லாஞ் செய்து முடித்து முடிவில் அப் **"புத்தலிகாவையும் தகித்துவிடும்"** வழக்கம் நம்மவர்க்கிருத்தலின் தாற்பரியம் இதுவேயாகும்.

**இவ்விளக்கத்தின் பிரகாரம்,**

| அவர்களுக்கு | நம்மவர்க்கு |
|---|---|
| 1. ஒரே சூர்ணோற்சவம் | இரு சூர்ணோற்சவம் |
| 2. ஒரே தகனம் | இரு தகனம் |
| 3. ஒரே அஸ்திசஞ்சயனம் | இரு அஸ்திசஞ்சயனம் (சாம்பலள்ளல்) |
| 4. ஒரே நாட்கிரியை | இரு நாட்கிரியை |
| 5. பத்துநாள் ஆசௌசம் | முப்பதுநாள் ஆசௌசம் |
| 6. சிராத்தக் கிரியைகள் பத்து | சிராத்தக் கிரியைகள் நாளில் நாளாவட்டம் ஒன்றிரண்டு. எல்லாம் ஒருமித்துமுப்பத்தோராம் நாளில் |
| 7. ஒரே பிரேதகத்தி | இரு பிரேதகத்தி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற வேண்டியிருக்கும் வேறுபாடு தெரிகிறது. சமய தீட்சை மட்டுமுள்ளவர்களிலும் முறையான சமய ஆசார சுத்தமுள்ளவர்கள், தொடர்பான ஒரேநாள் அந்தியேஷ்டிக் கிரியை பெறத் தகுதி உடையோராகலாம். ஆனால் அவர்களும் பந்துமித்திரத் தொடர்பு காரணமாக மது மாமிசமுள்ளாரோடும் பந்தி போசனங் கொள் பவராயிருக்க வேண்டுதலின் அவ்வாய்ப்பை இழக்கின்றனர். பந்துமித்திரர் எல்லோரும் ஒரே வகையான சுத்தபோசனிகளாகுஞ் சைவர்களாய் இருக்கும் காலத்தில், இவ்வேறுபாடுகள் இல்லாதொழியலாம் என நம்புதற்கிடமுண்டு.

**இனி, இக்கிரியை சம்பந்தமான விரிவுகளைக் கவனிக்கலாம்.**

ஒருவர் இறந்ததும் உடனடியாக அவர்க்ககு நிகழவேண்டுவது பிரேதசுத்தியாகும். ஒன்றாயிருந்த உடலும் உயிரும் தம்மிற் பிரிந்தமைபற்றி இரண்டும் தனித்தனி தோஷமடைந்துள்ளன என்பதே கொள்கை. அதனை முன்னிட்டுப் பிரேதசுத்தி நிகழும் சிவதீட்சை, சிவாலய வழிபாடு, சிவத்தியானம், சந்தியாவந்தனக்கிரமம் என்பவற்றைக் கைக்கொண்டொழுகிய ஒருவருக்குச் சிவகும்ப தீர்த்தத்தினாலேயே பிரேதசுத்தி நிகழவேண்டும். அதன்பொருட்டு இறந்தவர் இல்லத்து முற்றத்திற் பந்தலிட்டுச் சிவகும்பபூசை நிகழும். நடுவிற் சிவகும்பமும், சுற்றிவர எட்டுத் திக்கிலும் திக்பாலகர் கும்பங்களும் தாபித்துச் சிவாக்கினி வளர்த்துச் சிவகும்பபூசை நிகழும்.

## சூர்ணோற்சவம் - சுண்ணமிடித்தல்

ஸ்நானத் தூய்மைக்குச் சுண்ணம் இன்றியமையாதது. அறுகும் மஞ்சளுமிட்டு இடித்தெடுக்குஞ் சுண்ணம் பொற்சுண்ணமாகும். இப்பொற்சுண்ணம் தயாரிக்கும் நிகழ்ச்சி ஆலயங்களில் தீர்த் தோற்சவத்திலன்று சுவாமி பேரிலும் நடைபெறுவதாகும். அதற்கென்றே அமைந்திருக்கின்றது திருவாசகத்தில் திருப்பொற்சுண்ணம் என்ற பகுதி. கோயிலிற் சூர்ணோற்சவத்தில் அது படிக்கப்படுவது போல இங்கும் அது படிக்கப்படும். ஆனால் சுவாமிக்குப் பொற்சுண்ணஞ் சாத்திய பின்பே தீர்த்தமாடல் நடைபெறும். எங்களுக்குச் சிவகும்பம் தீர்த்தமாட்டிய பின்பே பொற்சுண்ணஞ் சாத்தி மீளவும் நீராட்டு பாவனையில் கும்பநீர் தெளிக்கப்படுதல் சர்வதசாதாரணமாக நடைபெறுகின்றது. எங்களிலும் விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரிய அபிஷேகம் உடையாருக்குச் சுண்ணஞ் சாத்தியபின் நீராட்டும் வழக்கமே உண்டு. சிவகும்பத்தினால் நீராட்டுமுன், சாதாரண சமய தீட்சையாளர்களாகிய நமக்குப் பொற்சுண்ணஞ் சாத்துதற்கேற்ற அளவு தூய்மையில்லை என்ற விளக்கத்தினால் தான் இவ்வேறுபாடு காட்டப்படுகிறதாயிருக்க வேண்டும்.

இவ்விஷயத்தில், சுவாமிக்குச் செய்வதுபோலப் பிரேதத்துக்குஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாமோ? செய்தாலும் சுவாமி சூர்யோற்சவத்தில் படிக்கப்படும் திருப்பொற்சுண்ணம் இங்கு சவத்தின் முன்னிலையிலும் படிக்கப்டுவது தகுதியோ? என்ற ஆசங்கைகள் எழுவதுண்டு. அபரக்கிரியைகள் பற்றிக் கூறும் சைவபத்ததிகளிற் சிலவற்றில் சூர்ணோற்சவம் சொல்லப் படவில்லை என்பது ஒரு சாட்டாகாது. சைவபூஷணம் என்ற நூலில், அபரக்கிரியையில் பேரீதாடம் (மேளத்தில் தட்டுதல்) என்ற கிரியை மிக விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அகோர சிவாசாரியர் பத்ததியில் பேரீதாடனம், சூர்ணோற்சவம் இரண்டும் அபரக் கிரியா விதியிற் கூறப்பட்டுள்ளன. வழக்கத்தில் பேரீதாடனம் சூர்ணோற்சவக் கிரியைக்கு முன்னோடியாக உள்ளதொன்றே. ஆதலால் சூர்ணோற்சவம் அபரக்கிரியைக்கும் உள்ளதேயாம்.

இனி, கிரியாகிரம ஜோதிகை என்னும் அகோர சிவாசாரிய பத்ததியில் அபரக்கிரியைக்குச் சூர்ணோற்சவ விதி சொல்லுகையில் **"உலூகலே ஓம் ஹாம் ப்ருதிவ்யை நம: முசலே ஓம் ஹாம் மஹா மேரு பர்வதாய நம:"** என்ற மந்திரம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இம்மந்திரம் **"வையகமெல்லாம் உரலதாக மாமேரு வென்னும் உலக்கை நாட்டி"** என வரும் திருப்பொற்சுண்ணப் பாடலின் பொருளையே கொண்டுள்ளது. மேலும் தொடர்ந்து அம்ந்திரத்தில் **"ஹரித்ரா சூர்ணீ குர்யாத்"** என வரும் பகுதி, குறித்த அதேபாடலில், **"மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி... ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே"** எனவரும் பகுதியின் பொருளே பொருளாகக் கொண்டுள்ளது. இத்தமையால், **"திருப்பொற்சுண்ணம் படிக்க"** என நேரடியாக விதி சொல்லப்படாவிடனும் திருப்பொற்சுண்ணம் படித்தல் அபரக் கிரியாபத்ததிக்குச் சம்மதமேயாதல் தெளியப்படும்.

இனி, சுவாமிக்கு முன் படிப்பதைச் சவத்தின் முன் படிப்பதா? எனக்கிலேசிப்பதிலும் அர்த்தமில்லை. சுவாமி பூசைக்குதவும் சிவமந்திரங்களைச் சவக்கிரியையிலும் உபயோக்கிக்கப் பத்ததிகள் விதித்துள்ளதனாலும், சுவாமி தோத்திரமாகிய தேவராங்கள் சவக்கிரியைக்கும் அநுமதிக்கபட்டிருத்தலினாலும், திருப்பொற்சுண்ணப் பாடல்களும் அதில் இடம்பெற அநுமதிக்கப்படுதலில் ஒருவித தவறுமில்லையாகும். அன்றியும், அப்பாடல்கள் தரும் **சாந்தமான இசையின்பமும், உள்ளகக் கிளர்ச்சியும்** அக்கிரியையிற் சம்பந்தப்படும் **அனைவர்க்கும் புனர்வாழ்வளிப்பது போலாகும் புதுமையையும்** எண்ணிப்பார்க்க வேண்டும். இன்னும் அப்பாடற் பொருளாக அமையும். **சிவலோகக் காட்சிகளும் அங்குள்ளார் உரையால்களும், ஆரவாரங்களும்** இறந்த சீவன் சிவலோகமே சேர்ந்துவிட்டது என்ற தெம்தை, அதைப் பிரிந்து கவலையுறுவார்க்குத் தரும் அற்புதத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தெம்பு தற்காலிகமானதாயினுங் கூட, அந்த அவசரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் தரம் சொல்லொணா மகிமை வாய்ந்ததாம். இவ்வாற்றால் சவக்கிரியைகளில் திருப்பொற்சுண்ணப் பாடல்களின் சேவை மிகப்பெரிதென்றே கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் சிவகும்பதீர்த்த ஸ்நானமும் பொற்சுண்ணஞ் சாத்திக் கும்பநீர் தெளித்தலும் பிரேத சுத்தக்கிரியையின் பிரதான அம்சங்களாம். இத்தொடர்பில் நிகழும் எண்ணெய் அரப்பு முதலிய திரவிய ஸ்நானமும், பிரேதத்துக்கு விபூதி தரித்தலும் பிரசித்தமானவை. இவ்வகையிற் சுத்தி செய்யப்படும் பிரேதம் பாடையில் ஏற்றி மயானங்கொண்டு செல்லப்படுதல் விதியாகும். பச்சை மரந்தறித்துப் பாடைகட்டுதல் முறை என்றும் அம்மரமும் யாகத்துக்குரிய மரமாயிருந்தால் விசேடமென்றுங் கொள்வர். இப்படியாக எடுத்துச் செல்லப்பட்டு மயானத்தில் பிரேத தகனஞ் செய்யுமளவும் சமயதீட்சை மட்டுமுள்ள சாதாரணர்களாகிய எங்களுக்கு முதல் நாட்கிரியையாகும். விசேட தீட்சை முதலாயின உடையார்க்கு மயானத்தில் வைத்து விசேட **அந்தியேஷ்டியோ, நிர்வாண அந்தியேஷ்டியோ** முடிந்த பின்பே தகனம் நிகழும்.

## அஸ்திசஞ்சயனம் - சாம்பலள்ளல் - காடாற்றுதல்

தகிக்கப்பட்டவரின் எலும்பையும், சாம்பலையும் முறையான சம்ஸ்காரங்களுடன் எடுத்துப் புண்ணிய தீர்த்தத்திற் சேர்த்தல் இதன் பண்பாகும். தகிக்கப்பட்டவர் **எலும்பு மேனியில் முழு உருவமாக** இருக்கிறார் என்ற பாவனையோடு முன் பிரேத ஸ்நானஞ் செய்தவாறே, அங்கும் அவருக்கு ஸ்நானஞ் செய்து சிவமந்திரங்களை உச்சரித்துக் கொண்டு முறையே முழந்தாள், மார்பு, நெற்றி, சிரசு என்ற இடங்களின் எலும்புகள் பிரதானமாக எடுக்கப்படும். அவ்விடத்தை ஆக்கிரமித்திருக்கக் கூடிய பூத பைசாசங்களின் திருப்திப் பொருட்டு பழம், ரொட்டி, இளநீர் முதலிய பொருட்கள் பலியாக இடப்படும். அவரைத் தீயிட்டுத் தகித்தமை பற்றிய தோஷத்துக்கு இது சாந்தியாக அமையும். இதற்காக நிலமும் தகிக்கப்பட்டதற்குச் சாந்தியாகவும் இனி, ஒருகால் நிலங்குளிர்வித்து நவதானியம் விதைக்கப்படும். விதைக்கபடப்ட தானியங்கள் முறை கொண்டு செழிக்குமளவுக்கு நிலங்குளிர வேண்டும் என்பது விதி. இக்கிரியைக்குக் காடாற்றுதல் என்ற பெயர் வழங்க வந்தது இதனாலேயாம். பிரேத சரீரத்தோடு உயிர்க்கிருந்த தொடர்பு பற்றிச் சரீரத்தில் வைத்துச் செய்தவற்றின் பலன்உயிர்க்காயது போல எலும்பில் வைத்துச் செய்வனவம் உயிர்க்கேயாம் என்ற விளக்கம் அவசியமானது. **பெரியபுராணத்துப் பூம்பாவை** வரலாற்றில் வைத்து இவ்வுண்மை விளக்கபட்டிருத்தல் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் நாட்கிரியை (எட்டு)

தகனத்திற்கு முன்பே அந்தியேஷ்டி நிகழப்பெறாத சாதாரணர்கள் சார்பில் நடைபெறுங்கிரியை இதவாகும். இப்பெயரில் இது பத்ததிகளிற் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆனால் அவற்றில் வரும் பிரபூதபலி என்ற கரியைக்குச் சமானமாக இது இடம்பெறுதல் காணலாம். நம்மவர்க்குள் இது பிரபல்யமாயிருப்பதால் இதை விசாரித்தல் தகும்.

அந்தியேஷ்டி செய்து பிரேத தகனம் முடித்துக் கொண்டவர் சார்பில், அன்றே அவர் இறந்த இடத்தில் சவிகும்பந்தாபித்துப் பூசித்து அதன் அயலில் கல் அல்லது செங்கல் அமைத்து, அதில் இறந்தவரின் உயிர் சாந்நித்தியமாய் இருப்பதாகக் கண்டு தினசரி காலை மாலை ஜலம், அன்னம், இளநீர் ஆகியன வைத்துத் தூபதீபசகிதம் பூசித்துவர வேண்டும். இதன் ஆரம்பத்திற்குப் **பாஷாணத் தாபனம்** என்று பெயர். இப்பாஷாண பூசை 10 நாள் தொடர்ந்து நடைபெற்றுப் பத்தாம் நாள் பாஷாணம் உரிய சம்பிரதாயப்படி விசேஷ அலங்கார வைபவங்களுடன் எடுத்துச் செல்லப்பட்டுத் தீர்த்ததில் இடப்படும். இது **பாஷாண உத்தாபனம்** எனப்படும். கல்லெடுப்பு என வழங்கப்படுவது இந் நிகழ்ச்சியே. இக்கல்லெடுப்பு நேரத்துக்கு முன் அப்பாஷாணத்தின் முன்னிலையில் உணவுப் பண்டங்கள் சகலமும் பெருமளவிற் படைத்தத் தூபதீப நைவேத்திய உபசாரங்களுடன் கூடிய விசேட பூசை நடைபெறும். இப்பூசைக்குப் பிரபூதபலி என்று பெயர். பத்ததிகளிலுள்ளபடி இக்கிரியையின் வரலாறு இதுவாகும்.

சாதாரணர்களாகிய நம்மவர்க்கு உடனடியாக அந்தியேஷ்டி முடியாக் குறையினாலே மேற்காட்டியவாறு இக்கிரியை செய்யும் வாய்ப்பில்லையாயிற்று. அதனால் எமக்குப் **பாஷாணஸ்தாபனம், உத்தாபனம்** இரண்டும் அந்தியேஷ்டியில் சுட்டபின் சீக்கிரமாக முடிக்கும் ஒரு சிறு கிரியையாகப் பின்போடப்பட்டுள்ளது. இதனை நோக்கி, இதற்கொரு மாற்று வழியாம் பாங்கில், எங்கள் இல்லங்களிலும் இறந்தவர் கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் **நீர்க்கலசமும் இளநீரும் வைத்து அழுதுந்தொழுதும் வணங்கும்** வழக்கமும் எட்டாம் நாள் உண்பனவும், தின்பனவும், பருகுவனவுமான பண்டங்களைப் பெருமளவில் தயாரித்துப் படைத்துக் கற்பூரங் கொளுத்திப் பூசிக்கும் வழக்கமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாற்றால் எங்கள் சாபில் நிகழும் **"எட்டு"** வைபவம் அபரக்கிரியா விதியிற் காணும் **பிரபூதபலியின்** பிரதியேயாம். பலி என்ற கருத்திற்கிணங்க அன்று படைத்தவற்றில் ஒரு பகுதியைப் பேயும் பிசாசும் ராட்சசருங் கூட அநுபவிக்குமாறு சந்ததியிற் கொண்டு சென்று கழித்துவிடும் வழக்கமுமிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேஷ்டி

நிர்வாண அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, சமய அந்தியேஷ்டி என அந்தியேஷ்டியில் மூன்று வகையுண்டு. முன்னைய இரண்டும் உயர்தீட்சையாளர்க்குரியவை. சமய அந்தியேஷ்டியே சாதாரண சமயதீட்சையாளர்க்குரியது. இவர்களுக்குரிய சாமானிய மண்டபக் கிரியைகள் அவர்களுக்குமுரியவை. அவர்களுக்குரிய அத்துவசோதனை கலாசுத்தி காரியங்கள் எங்கிளுக்கில்லை. எங்களுக்குத் தத்துவபூசை மட்டுமே உண்டு. சம்பந்தப்பட்ட உயிரானது அபரக்கிரியையின் இறுதியாக வருஞ் சபீண்டீகரணம் என்னுங் கிரியையின் பின் தன்தகுதிக்கேற்ற அளவு சிவகதியில் மேல்நிலை அடைதற்காகவும், தன்வாழ்நாளில் அதுசெய்து வந்த சமயக்கிரியைகளில் அவ்வப்போது ஏற்படக் கூடியதாயிருந்த குறைகளை நிறைவாக்குவதற்காகவும் இச்சமய அந்தியேஷ்டி செய்யப்படுகின்றது. இதற்கேற்றவாறு இவ்வந்தியேஷ்டியில் சக்திகும்ப பூசை, தசாயுத பூசை, பஞ்சகவ்ய பூசை, தத்துவ பூசை, நிர்வாண பூசை, சிதாவாஸ்து பூசை, சிவாக்கினி காரியம், சிவகும்ப பூசை என்பன நடைபெறும். இக்கிரியைகளின் ஒழுங்கில் அவ்வுயிர் மேல்கதியடைதற்கு ஏதுவான தகுதிப்பாட்டை வருவித்தற்காக வேண்டுவனவெல்லாம் மந்திரக்கிரியா ரூபமாகச் செய்து, முடிவில் அதனைச் சிவாக்கினியிற் சேர்த்து விடுதலாகிய நடைமுறைக்கிரமம் அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. இவற்றில் விஷேட முக்கியத்துவமுள்ள சில அம்சங்களைக் கவனித்தல் பயனுடையதாகும்.

## சிதாவாஸ்து பூசை

சிதா என்பது பிரேதத்தைத் தகிக்கும் விறகுப்படுக்கை. வாஸ்து என்பது தகனத்துக்குத் தெரியப்பட்ட இடம். அந்தியேஷ்டி மண்டபத்தில் தென்கிழக்குப் பாகம் இதற்கென ஒதுக்கப்படும்.

இந்த அந்தியேஷ்டிக் கிரியைகள் உண்மையான பிரேதத்திலும் அதன் முன்னிலையிலுமே நடைபெறற்பாலன என்பதை முன்னே கண்டோம். சமயதீட்சை மட்டுமுடையார்க்கு முப்பது நாள் முன்பாகவே தகனம் முடிந்துவிட்டமையால், இப்பொழுது அப்பிரேத சரீரத்துக்குப் பிரதியாக மற்றொன்று வேண்டும். அதற்காகவே சிதாவாஸ்து பூசையில் **"புத்தலிகா"** என்ற பொருள் இடம்பெறுகின்றது. புத்தலிகா என்பது இறந்தவரின் சரீரத்துக்குப் பிரதியாகத் **தர்ப்பையினாற் சமைக்கப்படும் பிரதி சரீரமாகும்.** அதை, முன் பிரேத சுத்திப் பொருட்டுச் செய்தனவெல்லாஞ் செய்து, ஒரு சிறு பாடையிற் கிடத்தி விறகப் படுக்கையில் வைத்துக் கொண்டே சிதாவாஸ்து பூசை செய்யப்படும். விசேட அந்தியேஷ்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாண அந்தியேஷ்டியாளர்களை மயானத்தில் கொண்டு சென்று அந்தியேஷ்டி செய்யும் வழக்கம் இதனால் ஏற்பட்டதேயாம். இச்சிதாவாஸ்து கிரியை, சமய தீட்சையாளர்க்கு இறந்த நாளில் நடந்த கிரியையின் தொடர்ச்சியேயாதலின் அங்கு நடைபெற்ற சூர்ணோற்சவத்தை முதற்செய்தே இங்கும் தொடங்கும். பிரேத சரீரத்தில் அன்று செய்த கிரியைக்கும் புத்தலிகாவில் இங்கு நடக்கும் கிரியைக்குமிடையில் வேறுபாடுண்டு. அங்கு சிவகும்ப தீர்தத்தினால் ஸ்நானஞ் செய்விக்கப்பட்டுச் சிவாக்கினியினால் தகிக்கப்பட்ட அளவே நடைபெற்றது. (இங்கு புத்தலிகாவில்) சிவாக்கினியின் சிவத்துவப் பிரகாசம் நாடீசந்தான மூலம் ஏற்படுதல் உண்டு. அதனால் அன்று நிகழ்ந்த பிரேதசுத்தியை விட இது பிரபாவம் மிக்கதாகின்றது. இனி, இறந்துபோன உயிரைச் சிவாக்கினயிற் சேர்த்தலும், பின் சிவத்தில் சேர்த்தலும் அங்கில்லை. இங்கு தான் இடம்பெறும்.

## தத்துவ பூசை

அந்தியேஷ்டி மண்டபத்தில் தென்கீழ்த்திசையில் சிதா வாஸ்துவுக்குப் பக்கத்தில் இருபத்தைந்து அறைகள் உண்டாக ஒரு ஸ்தண்டிலமிட்டு, அவற்றில் ஐந்து நிறப் பொடிகள் பரப்பப்படும். இந்நிறங்கள் ஐம்பூதங்களைக் குறிப்பனவாகும். ஒவ்வோர் பூதப்பகுதியிலும், அவ்வப் பூதத்தைச் சார்ந்த கலைகளும், அவ்வவற்றின் அதிதெய்வங்களும் பூசிக்கப்படும். தத்துவ விளக்க அட்டவணையில் இது பின்வருமாறு அமையும்.

| பொடி | பூதம் | கலை | அதிதெய்வம் |
|---|---|---|---|
| மஞ்சட்பொடி | பிருதிவி (மண்) | நிவிர்த்திகலை | பிரமா |
| பச்சைப்பொடி | அப்பு (நீர்) | பிரதிஷ்டாகலை | விஷ்ணு |
| சிவப்புப்பொடி | தேயு (தீ) | வித்தியாகலை | ருத்திரன் |
| கறுப்புப்பொடி | வாயு (வளி) | சாந்திகலை | மகேஸ்வரன் |
| வெண்பொடி | ஆகாயம் (வெளி) | சாந்தியதீதகலை | சதாசிவன் |

**இத்தத்துவ பூசையின் தாற்பரியமாவது:** சம்பந்தப்பட்ட உயிரின் தத்துவ விரிவு இயலுமளவு ஒடுக்கப்பட்டுவிட்டது. இனி அதுதன் தகுதிக்கேற்பச் சிவத்துவச் சார்பில் தனக்கேற்குமளவுக்கு உயர்கதி பெறலாம் என்பதே.

இவ்விவ்வகையில் அந்தியேஷ்டிக் கிரியைகள் நடந்து இறுதிக் கட்டத்தில் புத்தலிகா செய்யப்படும். இதுவே முன் ஓரிடத்தில் எங்களுக்கு இருதகனம் எனக் குறிப்பிடப்பட்டதாம். அந்தியேஷ்டியைக் குறிப்பிடுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தருப்பை சுடுதல்"** எனச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ளல் பெரும்பான்மை.

இவையெல்லாம் முடிந்த பின்பே எமக்குப் பாஷாண ஸ்தாபனமும், இறுதி நாளாய் விட்டபடியால், கையோடே பாஷாண உத்தாபனம் நடைபெறும்.

இதுவரை விபரிக்கப்பட்ட இவ்வளவும் அபரக்கிரியையில், பிரேதசரீரம் சம்பந்தப்பட்ட வரையில், அதனை முன்னிலையாகக் கொண்டு நிகழ்ந்தனவாகும். இனி இவற்றின் தொடர்பாக நடைபெறுவன எல்லாம் நாம் முன் கவனித்தவாறு இறந்துபோன உயிரின் பிரேதத்தன்மை நீக்கி அது பிதிரர்களின் சகாயத்தால் தன் தேவைகள் நிரம்பப் பெற்று மேல்கதியிற் செல்லுமாறு கருதிச் செய்யப்படுவனவாம்.

அக்கிரியைகள் **நக்னதானம்** முதல் **சபிண்டீகரணம்** இறுதியாகப் பலவாகும். சபிண்டீகரமும் முடிந்த பின்பே அதற்கு மேல்கதிப் பேறென்பது ஆகமக் கொள்கை.

இப்பகுதிக் கிரியைகள் அனைத்தும் பொதுவில் **சிராத்தம்** எனப்படும். இறந்தவர் ஒருவரின் ஈடேற்றத்தை இங்கிருப்பவர்கள் பெரும் விஷயமாகக் கருதி இயன்ற அளவு கூடுதலான சிரத்தையுடன் இவற்றைச் செய்தல் வேண்டும் என்பது இப்பெயர்ப் பொருள் தரும் விளக்கமாமம். **சிராத்தம் – சிரத்தையுடன் செய்யப்படுவது** என்பர். முன் ஆரம்பத்திற் காட்டியவாறு பிதிரர்களே இச்சிரார்த்தக் கிரியைகளில் மிகுதியாக இடம்பெறுவர். தானங்களும் மிகுதியாக இடம்பெறும். இன்றைய நம் வழங்குமுறையில் இவையனைத்தும் **வீட்டுக்கிரியைகள்** என்ற பெயரில் அடங்கும்.

எங்கள் வீட்டுக்கிரியைகளில் புரோகிதர்கள் இடம்பெறுவார்கள். புரோகிதர்களாகிய ஐயர்மாரை அழைத்து அவர்கள் மூலமாகவே எல்லாக் கிரியைகளும் நடைபெறுதல் பிரசித்தம். இவ்வெல்லாக் கிரியைகளிலும் **புரோகிதர்களிடத்தில் பிதிரர்கள் ஆவாஹனஞ் செய்யப்படுதல்** ஒரு சிறப்பம்சமாயிருக்கும். அவர்கள் அப்போதைக்குத் தாம் பிதிரர்கள் என்ற பாவனையுடனிருந்து நாம் வழங்கும் தானங்களை ஏற்றுத் திருப்தியடைந்து, அவ்வகையால், இறந்தோர்களுக்கு உதவ இருப்பவர்களாகிய மூலப்பிரதிகள் திருப்தியடையும் நிலையை உருவாக்குகிறார்கள். சிராத்தக் கிரியைகள் எல்லாவற்றிலும் அவற்றை நடத்துவிக்குங் கர்த்தா திருப்தியோ என வினவுதலும் அவற்றை நடத்தும் புரோகிதர்கள் திருப்தி என்று சொல்லிக் கொள்ளுதலும் நிகழ்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சிராத்தக் கிரியைகளில் **ஏகோதிஷ்டம்** மட்டும் பிதிர் ஆவாஹனத்திற்கு விலக்காகும். அக்கிரியையில் அமரும் புரோகிதரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்ததாகிய பிரேதத்துவ சம்பந்தமான உயிரே ஆவாகிக்கப்படுகிறது. அதன் பிரேரத்துவம் முற்றாக அகலுதற்கு உபகாரமாக, ஏகோத்திட்டத்தில் அமரும் புரோகிதருக்கு எல்லா வகையிலும் கூடுதலான தரமும், தொகையுமான பொருள்கள் பெருமளவிற் தானஞ் செய்யப்படும். இந்த ஏகோதிட்டத்தை ஏற்பவர் இது காரணமாக ஒரு வருஷகால ஆசௌச முடையாராயிருப்பர் எனவும் அக்காலத்தில் அவர் சமயக்கிரியைகள் எதிலும் பங்குபற்றதற்கு அருகதையற்றவராகவர் எனவும், அவர் புண்ணிய தீர்த்த யாத்திரை பண்ணுதல் மூாமாகவே அவருடைய ஆசௌச தோஷம் சரியாக நிவிர்த்தியாகும் என்றும் கொள்ளப்படும். இங்ஙனமாதலால் இதை நடத்துவிக்குங் கருத்தா தமது சக்திக்கு இயலுமான அளவு முயன்று அவர்க்கு ஆகவேண்டிய சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியவர் ஆகிறார். சிரார்த்தங்களுள் மாகசிரத்தையுடன் நடத்தவேண்டிய பெருஞ்சிராத்தம் இதுவாகின்றது. இனி, இச்சிராத்தக் கிரியைகளின் சிறப்பம்சங்களைத் தனித்தனியாக முறையே நோக்கி மேற்சொல்வோம்.

## நக்னதானம்

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய ஆடையில்லாத குறையை நீக்குதற்பொருட்டுச் செயப்படுவது. நக்னம் - நிர்வாணநிலை. அதனுடன் அவருடைய பசிதாகத்துக்கும் இது சாத்தியமளிப்பதாகக் கொள்ளப்படும். உயர் தீட்சையார்க்கு இது பிரேத தகனம் முடிந்த கையோடே செய்யப்படுவது.

## இடபதானம்

எருதுக்குச் சிறப்புச் செய்து அதனைப் பூசித்துத் தானஞ் செய்தல்: இறந்தவர் சார்பில் இருக்கக் கூடியதான தர்ம பலன்களை, இன்னும் அவர்சார்பில் உளதாக வைக்காது, இடபத்தின் மூலம் சிவனிடத்தில் சேர்த்துவிடுதல் இதன் நோக்கமாகும். இறந்தவர் தம்வாழ்விற் செய்தனவாகிய தானதர்மங்கள் ஒவ்வொன்றும் அவர், நான் எனது என்ற உணர்விற் செய்தனவாகலின் அவை மேலும் அவரோடே ஒட்டிக்கிடந்து மேலும் மேலும் தம்பயனாகிய பிறப்புக்களைக் கொடுத்தல் கூடும். அது அவர் அடைய வேண்டிய சிவகதிப்பேற்றுக்குக் குந்தகமாமம். இந்நிலையத் தவிர்த்தற்கு ஒரே ஒருவழி அவற்றைச் சிவனிடத்திற் சேர்த்துவிடுதல் தான். நான், எனது அற்ற நிலையிற் செயல்களைச் செய்பவருக்கு இப்படியொரு தேவை ஏற்படாது. இந்நோக்கில், சாதாரண சிவபூசை, அடியார் பூசையிலுங்கூட அதனதன் பலனைச் சிவனிடத்திற் சேர்த்துவிடும் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியை முகமாக உண்டு. இச்சைவஞான உண்மையின் அடிப்பாடாக இச்சிராத்தக்கிரியை அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கதாம். இக்கிரியை சூத்திர நூல்களில் மிகவிரிவாகச் சொல்லப்படும். ஆனால், அங்கு இதன் விபரமும் விளக்கமும் வேறு. இச்சைவஞான விளக்கம் அங்கில்லை. அங்குள்ளபடியே இவற்றைக் கொள்வது வைதிகம். கிரியைகள் பெயரளவில் ஒன்றாயிருப்பினும் வைதிகத்துக்குஞ் சைவத்துக் குமிடையில் இத்தகைய வேறுபாடுகள் பெரும்பான்மையாகும்.

## ஏகோதிஷ்டம்

புரோகிதரிற் பிரேதசரீர சம்பந்தமான உயிரை ஆவாகனஞ் செய்து தானஞ் செய்யும் சிராத்தம் இதுவாகும். இது பற்றி முன்னுங் கவனித்தோம். இதை ஏற்குப் புரோகிதரை, "ஏகதட்டர்" என்று சாதாரண வழக்கிற் கூறுவதுண்டு. சிலர் சிலரைச் சிலநேரத்தில் "அவர் ஒரு ஏகதட்டர்" என்று பரிகாசமாகக் கூறும் பொதுசன வழக்கம் இச்சராத்தப் பயிற்சியால் ஏற்பட்டதேயாகும். இந்த ஏகோத்திஷ்டத்துக்கு விதிக்கப்பட்ட தானங்கள் இருபத்துநான்கு. அவை வருமாறு:

| | | |
|---|---|---|
| பவித்திரம் | பாதுகை | யோகபட்டம் |
| பூணூல் | தண்டு | குடை |
| கமண்டலம் | கௌபீனம் | குல்லா |
| ஜபமாலை | விபூதிப்பை | மேலங்கி (போர்வை) |
| வஸ்திரம் | நெய் | சமையல் உணவுப் பாத்திரங்கள் |
| மோதிரம் | வெண்ணெய் | தானிய வகைகள் |
| பொன் | பசு | சர்வாலங்கார தாசிகள் |
| இரத்தினம் | பூமி | தாசர்கள் |

## மாசிகங்கள்

மாசாமாசம் இறந்த திதியிற் செய்யப்படுஞ் சிராத்தம் மாசிகம் எனப்படும். இது முதல்வருடம் முழுவதும் நடைபெற வேண்டியது. மேற்குறித்த ஏகோதிஷ்டத்தோடு, முதல் மாசிகம் முடிவுற்றதாகக் கருதப்படும். எனவே மாசத் திதிக்கணக்கில் எஞ்சியிருப்பது பதினொன்று. இவற்றுடன் இடைக்கால மாசிகங்களாக நான்கு சேர்த்து எல்லாமாக 15 மாசிகங்கள் கொள்ளப்படும். இடைக்கால மாசிகங்கள் நான்கும் வருமாறு

1. ஊனமாசிகம் - ஏதோதிஷ்டம் முடிந்து 27ஆம் 30ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.
2. ஊனதிரிபட்ச மாசிகம் - அத்தொடர்பில் 40ஆம் 45ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களுக்கிடையிற் செய்வது.

3. ஊனஷாண் மாசிகம் - அவ்வாறே 170ஆம் 180ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.

4. ஊன ஆப்திக மாசிகம் - அவ்வாற்றால் 350 ஆம் 365ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.

இந்த இடைக்கால மாசிகங்களுக்கு மட்டும் திதி நியமம் கொள்ளப்படுதலில்லை. செய்யும் தினம் ஒரு சுபதினமாயிருந்தாற் சரி. இம்மாசிகங்கள் பதினைந்தும், இறந்தவர்க்கு வாழ்க்கைச் சார்பிலிருக்கக் கூடிய பற்றுக்களை இயலுமளவு நீக்கி வைக்கம் நோக்கமாகச் செய்யப்படுவன. இப்பதினைந்து மாசிகமும் நிறைவுற்ற பின் சபிண்டீகரணம் என்பதோர் கிரியையுள்ளது. இதுவும் நிறைவுற்ற பின்பே குறித்த உயிர் சிவகதிக்காளாகும் என்பர். இந்நோக்கில், ஒருவர் இறந்து ஒரு வருட முடிவிலேயே சபிண்டீகரணம் நிகழவேண்டியது. ஆனால் அவ்வளவுக்கு அதைச் செய்தற்குரிய கர்த்தா நிலைத்திருத்தல் பற்றியெழுஞ் சந்தேகத்தை முற்கொண்டு இச்சபிண்டீகரத்தையும் ஏகோதிஷ்டம் முதலியன நடந்த அன்றே (எங்களுக்கு 31) செய்தல் வழக்கமாகிவிட்டது. அதற்காக, அதற்கு முன்னோடியாக நிகழ்தற்குரிய 15 மாசிகங்களையும் அவ்விடத்தில் ஒருங்கே செய்து விடுதலும் வழக்கமாயிற்று. முன்னெச்சரிக்கையாக அப்படிச் செய்தாலும், மேலும் கிரமந்தவறாமல் மாசாமாசம் மாசிகஞ் செய்தே வரல் வேண்டும் என்பது விதி.

## தடுமாற்றங்கள் சில

ஏகோதிஷ்டம் என்றால் ஏக + உத்திஷ்டம்: ஏக - ஒன்று. உத்திஷ்டம் உத்தேசிக்கப்பட்டது. அதாவது ஒன்றையே உத்தேசித்துச் செய்யப்படுவது எனப் பொருள்படும். மற்றும் சிராத்தக் கிரியைகளில் விநாயக பூசை, சிவகும்ப பூசை, பிதிர் ஆவாகன பூசை என்பனவற்றுக்கும் இடமுண்டு. அத போலாகாது இங்கு இறந்ததாகிய உயிர் ஒன்றுக்கே நேரடியாக இது நிகழ்தலால் இது ஏகோதிஷ்டம் எனப்பட்டது என்பர். சூத்திரங்களிலும் சரி சைவ பத்ததிகளிலுஞ் சரி ஏகோதிஷ்டத்தைத் தொடர்ந்து மாசிகம் இடம்பெறுகின்றது. முதலாவது மாசிகம் ஏகோதிஷ்டக் கணக்கில் விடப்படுவதாக அங்குஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நோக்கில் ஏகோதிஷ்டத்துக்கும் மாசிகத்துக்கும் அந்தரங்கத் தொடர்பு இருக்க வேண்டுதல் இயல்பே. அதற்கேற்றாற் போல்,

"கிரியாக்ரம ஜோதிகை" என்ற அகோரசிவாசரிய பத்ததியில் ஏகோதிஷ்டஞ் சொல்லி முடிவில், "இவ்வாறு செய்த பதினொராம் நாளிலும், மாசாமாசம் நாற்பத்தைந்தாம் நாளிலும் ஆறாம் மாசத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருஷாந்தத்திலும் பதினைந்து ஏகோதிஷ்ட சிராத்தஞ் செய்க" என்றும்,

திரு.சி.சுப்பிரமணிய தேசிகர் எழுதிய " சைவக்கிரியைகள்" என்ற நூலில், மாசிகங்கள் பற்றிக் கூறும் பகுதியில், "இவைகளும் இறந்தவரை மட்டுங் குறித்துச் செய்யப்படுவனவாதலால் ஏகோதிஷ்டங்களேயாகும்", என்றும் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

எங்கள் சார்பில் இன்று நடைமுறையில் உள்ளதை அவதானிக்கையில் ஏகோதிஷ்டக் கிரியைக்கும் மாசிகக் கிரியைக்குமிடையிற் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுண்டு. ஏகோதிஷ்டமென்றால், இறந்தவரின் பிரேதத்துவத் தொடர்பை நீக்குவது. அவரது பிரேதத்துவத்தைப் புரோகிதரில் ஆவாஹித்துத் தூய்மை செய்துகொள்வது என்ற விளக்கம் சூத்திர நூல்களில் உள்ளது. அருணாசல சாஸ்திரிகள் பதிப்பித்துள்ள ஆபஸ்தம்ப ஸ்மிருதியிலும் அவ்வாறேயுள்ளது. அதற்கியைந்தாற்போல், சைவ பத்ததியாகிய கிரியாக்ரம ஜோதிகையிலும், "ஏகோதிஷ்டமாவது தேவ கரியங்களில்லாமல் மரித்தவரைப் பரிசுத்தஞ் செய்வது" என்ற வசனங் காணப்படுகின்றது. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள், ஏகோதிஷ்ட விஷயத்தை அதிகதரஞ் சுருக்கமாகச் சொல்லி அக்கிரியையின் சுவரூபத்தைச் சொல்லாமலே விட்டிருக்கின்றார்.

சிலவேளைகளிற் சிலர் சிலரை "ஏகதட்டர்" என்று பரிகாசம் பண்ணும் தன்மையை அவதானிப்பதிலிருந்து நாம் சிந்திக்க வேண்டியது உளது. யார் தமக்கு எதைச் செய்தாலும், அதாவது தூஷணையோ, பூசனையோ எது பண்ணினாலும், எதிர்க்கும் ஆற்றலில்லாமல் ஏற்றுக் கொண்டிருப்பவரைத்தான் நம்மவர் "ஏகதட்டர்" என்று பரிகசிக்கிறார்கள். கிரியையில் சம்பந்தப்படும் "ஏகோதிஷடர்" க்கு நடப்பனவற்றிலும் இத்தன்மை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. அவர் தலையில் எண்ணெய் வைக்கிறார்கள். எலுமிச்சப்புளி வைக்கிறார்கள். அரப்புக்கூட வைக்கிறார்கள். முடிவில் அவரைப் போக விட்டுச் சாணமும் தெளிக்கிறார்கள். அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். எங்கள் சூழலில் நிகழும் ஏகோதிஷ்டங்களில் இப்படி நிகழ்தல் காணப்படும். இந்த ஏகோதிஷ்டர் பண்பே, குறித்த பரிகாசபாத்திரமாகிய ஏகதட்டர் பண்புமாயிருத்தலினால் இந்த வழக்கம் சமுதாயத்தில் நெடுக இருந்துள்ளதென்பதற்கு ஐயமில்லை. ஸ்மிருதியில், இங்ஙனம் எண்ணெய், சிகைக்காய் முதலியன அவருக்கு வைக்கும் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. பிரேத தேகசுத்தி என்ற கருத்து நிலைக்கு இது பொருத்தமாயும் இருக்கிறது. ஆனால், சைவபத்ததியாகிய கிரியாக்கிரம ஜோதிகையிலாவது, சைவக்கிரியைகள் என்ற நூலிலாவது ஏகோதிஷ்டருக்கு எண்ணெய், அரப்பு வைக்குஞ் செய்தி சொல்லப்படவில்லை. இனி ஏகோதிஷ்டந்தான் மாசிகமென்றால், மாசிகக் கிரியையிலும் , இப்படி எண்ணெய், அரப்பு முதலாயின வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் இருக்கவேண்டுமே. அன்றியும் மாசிகத்தில் பிண்டமிட்டுத் தர்ப்பணம் பண்ணும் நிகழ்ச்சியுண்டு. ஏகோதிஷ்டத்தில் அது இல்லை.

இந்நிலைமைகளை நோக்குகையில், எங்களுக்குரிய ஏகோதிஷ்டமும் மாசிகமும் சம்பந்தப்பட்ட வகையில் ஏதோ சில தடுமாற்றம் இருப்பதாகத் தெரிகிறது. இது மேல் விசாரணைக்குரியதொன்றாகும்.

## சோதகும்ப சிராத்தம்

சோதகும்பம் - உலகத்தோடு கூடிய பாத்திரம்: அதாவது நீர்ப்பாத்திரம். இறந்த உயிருக்குரிய முக்கியகுறை தாகம் எனக் கொண்டு இறந்த அன்றே தகனம் முடிந்ததும் அவர் கிடந்த இடத்தில் தண்ணீர் வைக்கும் வழக்கம் இத்தானத்தின் முன்னோடி நிகழ்ச்சியாகும். வருடம் முழுவதுமே இத்தேவைப்பொருட்டு நீர் நிறைந்த பாத்திரம் தானஞ் செய்ய வேண்டுமென்பது கொள்கை. அது இயலாமைக்காகச் சபிண்டீகரணத்தின் முன் இத்தானஞ் செய்தல் பிரதானமாகக் கருதப்பட்டு வருகிறது.

## சபிண்டீகரணம்

இக்கிரியை சபிண்டி என்றாவது சவுண்டி என்றாவது சுருங்கிய பெயரால் நம்மவரிடை வழங்கும். பிண்டங்களின் மூலமாக இறந்தவரான உயிரைப் பிதிரர்களுடன் சேர்த்தல் சபிண்டீகரணம் எனப்படுகிறது. பிண்டம் என்பது மாவைக் குழைத்திடும் உருண்டை. இறந்த உயிரின் நலநோக்காளர்களாகிய பிதிரர்களைப் பற்றி ஏலவே கவனித்தோம். அவர்களைப் பிரீதிப்படுத்தும் நோக்கமாகவே முன்னைய கிரியைகள் பெரும்பாலும் நடைபெற்றன. இனி, அப்பிதிர் தேவர்களோடு உயிரைச் சேர்த்தல் இக்கிரியையினாற் கருதப்படுகிறது. அதன்மூலம், இறந்த உயிர் தன் பிரேதத்துவதோஷம் முற்றாக நீங்கிப் பிதிர்த்துவத்தை அடையினும் அடையும் அல்லது தேவத்துவமடையினுமடையும். தனக்குத் தகுதியுண்டேல் சிவத்துவத்தையுமடையும் என்பதே கொள்கை.

இக்கிரியையில் பிதிரர்களோடு தேவர்களும் ஆவாகனம் பெறுவர். எல்லாம் 8 புரோகிதர்கள் இக்கிரியைக்குத் தேவைப்படுவர்.

| | |
|---|---|
| தேவர் பொருட்டு இருவர் | நந்தி, மகாகாளர் |
| பிதிரர் பொருட்டு மூவர் | ஸ்கந்தர், சண்டர், சணாதீசர் |
| அதிதி அப்யாகதர் இருவர் | ஆரேனும் அப்போது அவ்விடம் வந்தவராக உள்ளோர் |
| நிமித்தர் ஒருவர் | இறந்த உயிரின் பொருட்டு நியமிக்கப்படுபவர் |

சபிண்டிக்கிரியையில் இவர்கள் எண்மரும் அமர்த்தப்படும் ஒழுங்கு கவர்ச்சிகரமானது. தேவர் இருவரும் மேற்குப் பக்கத்தில் கிழக்கு முகமாகவும், பிதிரர் தெற்கில் வடக்கு முகமாகவும், நிமித்தர் கிழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு முகமாகவும், மற்ற இருவரும் நிமித்தருக்கு வடக்கே மேற்கு முகமாகவும் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு ஆக வேண்டிய உபசாரங்கள், பூசைகள், தானங்கள் முடிந்தபின் சபிண்டீகரணம் இடம்பெறும்.

வாழையிலையில் மேற்கு ஓரமாக மூன்று பிண்டங்கள் தர்ப்பையின் மேல் தனித்தனி இடம்பெறும். கிழக்கில் தனியாக ஒரு பிண்டம் தர்ப்பையின் மேல் அமையும். இப்பிண்டம் சற்று நீளமானதாய் அந்தங்கள் இருக்க வேண்டும். குறித்த மூன்று பிண்டங்களிலும் முறையே ஸ்கந்தர், சண்டர், காதீசர் என்ற பிதிரர் மூவரும் ஆவாகிக்கப்படுவர். கிழக்குப் பிண்டத்தில் இறந்த உயிரே ஆவாகிக்கப்படும்.

பிதிரர்களை ஆவாகிக்கும் போதும் பூசிக்கும் போதும் முறையே ஸ்கந்தரைக் குறித்து "அஸ்மத் பித்ரே நம" என்றும், சண்டரைக் குறித்து "அஸ்மத் பிதாமஹாய நம" என்றும், சண்டரைக் குறித்து "அஸ்மத் பிதாமஹாய நம" என்றும் மந்திரிக்கப்படும். பித்ரே - பிதாவுக்கு, பிதாமஹாய - பேரனுக்கு, ப்ரபிதாமஹாய - பாட்டனுக்கு என்பது அர்த்தம். கிழக்கிலுள்ள நிமித்திகரைக் குறித்து "ஓம் சிவகோத்ரஜாதாய, சிவ பூதாய தீக்ஷ நாம யுக்தாய பித்ரே நம" சிவகோத்திரத்திற் பிறந்தவரும் இறந்து சிவமாந்தன்மையைச் சார இருப்பவரும் தீக்ஷா நாமமுள்ளவருமாகிய பிதாவுக்கு வணக்கம் என்று மந்திரித்தல் வேண்டும்.

இப்படியமைக்கப்பட்ட பிதிரர்கள் மூவருக்கும் நிமித்தருக்கும் நைவேத்திய பூசை உபசாரங்களெல்லாம் கர்த்தாவாற் செய்யப்படும். கந்தத்துக்காக இவர்களுக்கு மஞ்சள் சாத்திப் பத்திரபுஷ்பங்களும் சாத்தபடும். முடிவில், நிமித்தப் பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திரத்தையெடுத்துப் பிதிரர்கள் பிண்டத்திற் சேர்த்தல் மூலம் இந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார் என்று பாவிக்கப்படுகின்றது. இது சைவ சிராத்தத்திற் சபிண்டீகரண முறையாகும்.

நிமித்தப் பிண்டத்தை மூன்று பகுதியாக்கி, பிதிரர் பிண்டங்களுடன் தனித்தனி சேர்க்கும் முறையும் ஒன்றுண்டு. அது வைதிகத்துக்கு சைவத்துக்கன்று.

குறித்த இவ்வொழுங்கே சமயதீட்சையாளர்களுக்கும், விசேட தீட்சையாளர் முதலியோர்க்கும் பின்பற்றப்படுவது. ஆனால், உயர் தீட்சையாளர்க்கு தேவர், பிதிரர் சார்பில் உள்ளார் பெயர்கள் மட்டும் வேறு. அவர்களுக்குத் தேவர் சார்பில் அநந்தர்,உருத்திரர் என்போரும், பிதிரர் சார்பில் ஈசர், சதாசிவர், சாந்தர் என்போரும் இடம்பெறுவர்.

மேற்காட்டிய விபரத்தில் நாம் கவனித்த பிதா, பிதா மஹர், ப்ரபிதாமஹர் மூவரும் தந்தை மரபு குறித்தவர்கள். கிரியை செய்யும் ஒருவர் (கர்த்தா) தமது தந்தைக்காவது. அவரது சகோதரர்க்காவது சபிண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கையில் இந்த முறையை அநுசரிக்கலாம். இனி, தாய் அல்லது அவரது சகோதரங்களைக் கருதிச் செய்கையிலும் இதுவே முறை. இங்கு இடம்பெறும் தேவர்களும் பிதிரர்களுமே அதற்குமுரியவர்கள். ஆனால் பிதா, பிதாமஹர், ப்ரபிதாமஹர் என்ற பெயர்களுக்குப் பதிலாக மாதா, மாதாமஹீ, ப்ரமாதாமஹீ என்பன இடம்பெறும்.

இப்படித் தாய் மரபு, தந்தை மரபு இரண்டுக்கும் பொருந்தாத சந்தர்ப்பத்தில் இந்த ஒழுங்கு முறை பின்பற்றவராது. உதாரணமாக கணவன் மனைவிக்குச் சபிண்டி செய்கையிலும், ஒருவன் தன் சகோதரனுக்குச் செய்கையிலும், மேற்கூறியவாறு தாய்மரபில் மூவருக்கு அல்லது தந்தை மரபில் மூவருக்குப் பிதிரர்களை கருதும் நிலை பொருந்தாது. அந்நிலையில், பிதிரர் மூவர்க்குப் பதிலா ஒருவரையே கருதி ஒரே பிண்டமேயிட வேண்டும் என்பர். இதற்கு ஏகோதிட்ட விதானம் என்று தனியான பெயருண்டு.

இங்ஙனம், நிமித்தர் (இறந்த உயிர்) பிதிரர்களோடு ஒன்றாக்கப்பட்டு விட்டமையால் இனி மாசாமாசம் நிகழவிருக்கும் மாசிகங்களில் அவருக்குத் தனிப்பிண்டம் வேண்டியதில்லை. அவரையும் பிதிரர்களுடன் ஒன்றாகவே கொண்டு மூன்று பிண்டத்துடன் மாசிகக்கிரியை முடிக்கலாம்.

### ஆப்திக சிராத்தம்

முதலாவது வருஷ முடிவில் இறந்த திதியிற் செய்யப்படும் சிராத்தம். இதில் மேற்காட்டியவாறு நிமித்தருக்குப் பிண்டமோ தானமோ வேண்டியதில்லை. இதுவே அபரக்கிரியைகளின் பூர்த்தியாகக் கருதப்படும்.

### வருட சிராத்தம்

சிராத்தக் கிரியைகளின் தொடர்பு இடையறாதிருக்கச் செய்வதற்காகவும், பிதிரர்களை இடையறாத திருப்திநிலையில் வைத்துக் கொள்வதற்காகவும், வசிக்குமிடங்களில் மந்திரக் கிரியை வாசனையை ஏற்படுத்துமுகமாகவும், வருடாவருடம் இறந்த திதியிற் செய்யப்படுவது வருட சிராத்தம் எனப்படும்.

## மஹாளயம்

வருடத்தில் புரட்டாசி மாசத்து அபரபக்கம் (அமாவாசைக்கு முன் 15 நாள்) பிதிரர்க்கு விசேட காலம் என்னும் கருத்துண்டு. அக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் திருப்தி வேண்டிச் செய்யப்படும் சிராத்தம் மஹாளய சிராத்தம் எனப்படும். மற்றும் சிராத்தங்களில் ஏற்படும் குறைநிறைகளுக்கு இது சாந்தியாக அமையும். மஹாளயம் - பேரொடுக்கம். ஆலயங்களில் அர்த்தயாம பூசை போல அபரக்கிரியையில் இது இடம்பெறும்.

## அமாவாசைத் தர்ப்பணம்

அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காக எள்ளுந் தண்ணீரும் இறைத்தல். தந்தை வர்க்கம், தாய் வர்க்கம் இரண்டினுக்கும் இது நன்மை தருவதாகும்.

## அபரக் கிரியைகளும் நாங்களும்

சீவன் சீவத்தன்மைகள் கெட்டுச் சிவத்தன்மை அடையச் செய்தலே அபரக்கிரியைகளின் பண்பும் பயனும் என்பது மேற்கண்ட கிரியை விபரங்களாற் புலனாகின்றது. நாம் ஒவ்வொருவரும் இக்கிரியைகளுக்குத் தகுதியாகும் நிலையில் நம்மை வைத்துக் கொள்ள வேண்டுவதன் அவசியத்தை இக்கிரியைகள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்குரிய அடிப்படைத் தகுதி சிவதீட்சையும், சந்தியாவந்தன அநுஷ்டான கிரமமும் இயலுமளவுக்குக் கூடுதலான சமயாசார சுத்தியுமாமம்.

மண்மூடிக் கிடக்கும் இரும்பைக் காந்தம் வலிக்காது. செழும்பு மண்டிக் கிடக்கும் பாத்திரத்துக்கு மெருகு பூசினாற் பிடிக்காது. மேற்குறிப்பிட்ட சமயாசார சுத்தமில்லாத நிலையில் உயிருக்குச் செய்யும் அபரக்கிரியைகளும் அத்தன்மையனவே ஆகிவிடும்.

எவரெனினும் இறந்தவருக்கு அபரக்கிரியை செய்தேயாக வேண்டும் என்ற கொள்கை, சைவத்தில் நியதியாய் இருக்கிறது. அது சமய சம்பிரதாயமாக மட்டுமல்ல இன்றியமையாத சமயக்கடமையுமாய் இருப்பதால் அதற்குரிய தகுதியை நாமே நாமாக நம்மில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது சொல்லாமலே அமையும். இறந்தவர்களாகிய நாம் நன்மையடைய வேண்டுமென்று கருதி இருப்பவர்கள் அருந்தி வருந்தி நமக்காச் செய்யுங் கிரியைகள் வீண்போதல் கூடாதல்லவா.

இறந்தவர்களைக் கருதி இக்கிரியைகளைச் செய்வார்க்கும் அதற்குரிய தகுதிப்பாடு இன்றியமையாததே. அவரும் அதற்கேற்ற அடிப்படைத் தகுதியாகிய சிவதீட்சை, சந்தியா வந்தன அநுஷ்டானம். இயலுமளவு சமயாசாரசுத்தி என்பன உள்ளவராய் இருத்தல் வேண்டும். இக்கிரியைகளைச் செய்விக்கும் பொருட்டாக நம்மால் நியமிக்கப்படும் குருக்கள்மாரும், புரோகிதர்களும் கூட அதற்கேற்குமளவு ஆசார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலர்களாயிருக்க வேண்டியதும் அவசியமேயாம். சிவபூசை, அக்கினிகாரியம், வேதபாராயணம் என்ற அநுசரணைகள் உள்ள குருக்கள்மாரும் புரோகிதர்களுமே இதற்குரியவர் ஆவர்.

மேற்கண்டவாறு, இக்கிரியைகளில் மிகுதியாக இடம்பெறுவது தானம். தானத்துக்கு வரையறவான ஒர இலக்கணமுண்டு. உரிய தகுதிவாய்ந்த ஒருவரை வரவழைத்துச் செய்யுங் கொடையே தானமெனப்படும். ஏதும் தேவை கருதிவந்தவருக்குத் தகுதி நோக்காது கொடுப்பது தருமம் எனப்படும். அபரக்கிரியைகளின் போதுந் தருமத்துக்குப் போதிய இடமுண்டு. அது வேறு, இது வேறு. இடபதானம், சோதகும் பதானம் முதலாகிய தானங்களைச் செய்யும்போது ஏற்பவருடைய தகுதியைக் கண்டிப்பாக அவதானித்தே செய்தல் வேண்டும். உரிய தகுதியுள்ளோர் கிடைக்காத பட்சத்தில் ஒரு தர்ப்பையை வைத்து, ஆசாரியலட்சணம் வாய்ந்த ஒரு நற்புரோகிதராக, அல்லது தாம் வழிபடும் ஒரு ஆலய மூர்த்தியாகப் பாவித்துத் தியானித்தத் தம்மியல்புக்கேற்ற முறையில் வழிபட்டுத தானத் திரவியங்களை அதன்முன் படைத்து நேர்த்தி செய்து கொண்டு அத்திரவியங்களைக் கோயிலுக்கே கொடுத்துவிட வேண்டும் என்னும் விதியுமுண்டு.

தானம் என்பதைத் தகுதியற்றவர் கையிற் கொடுத்தலே பாபம் என்பர். தகுதியற்றவனுக்குத் தானங் கொடுப்பவர் வனாந்தரங்களிலே மந்திகளாய்ப் பிறந்து அலைவார்கள் எனச் சீவகசிந்தாமணியில் ஒருகருத்துண்டு. அக்கினிகாரியம் வேதபாராயண மாதியன இல்லார்க்குத் தானங் கொடுப்பவர் நரகத்துன்பத்துகாளாவர் என்கிறது நாரத பக்தி சூத்திரம். தாம் வருந்தி முயன்று செய்யுந் தானம், தரவேண்டிய பலனைத் தராமை மட்டுமன்றித் தமக்கே தீங்கும் விளைப்பதெனின், தானங் கொடுக்கப்படுவோரின் தகுதி விஷயத்தில் எவ்வளவு கவனஞ் செலுத்தப்பட வேண்டுமென்பதை உணர்தல் நம் கடனாகின்றது.

கொடுக்கப்படும் பொருளளவு மிகச்சிறிதாயினும் அத தக்கவன் கையிற் கொடுக்கப்படுமானால் அது அளவிறந்த பயனைத் தரும் என்பது தமிழ்நீதி.

-கைப்பொருள்

**தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்**
**வான்சிறி தாய்ப்போர்த்து விடும்.**

-நாலடியார்-

இது இங்ஙனமாதல், பிரேதக்கிரியையைக் கொள்ளி வைத்தல் என்றும் அந்தியேஷ்டியைத் தர்ப்பை சுடுதல் என்றும் சிராத்தத்தை அரிசி கொடுத்தல் என்றும் அவற்றின் பெயர் வழக்கை இலகுபடுத்திக் கொள்வது போல இக்கிரியைகளைச் சர்வ மானியமாகவோ சிரத்தைக் குறைவாகவே நடத்துதல் விரும்பத்தக்ககாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, செத்தவரெல்லாங் சிவலோகஞ் சேர்வாரோ? இவைகள் யார் யாரோ ஏதேதோ சுயநல நோக்கமாக வகுத்த சம்பிரதாயங்கள் என்ற அபிப்பிராமும், சம்பிரதாயத்துக்காக ஏதோ நடந்தாற்சரி என்ற திருப்தியும் ஒரோவோர் கோணங்களில் நிகழ்வதும் ஏதோ உண்மைதான். ஒரே மண்டபத்தில் ஒரே வேளையில் ஒன்பது பத்து அந்தியேஷ்டி ஒருமிக்க நடைபெறும் நிலைக்குரிய காரணங்களில் இதுவுமொன்றாயிருக்கின்றது. இவ்விளக்கம் துர்அதிர்ஷ்ட வசமானது.

சிவலோகமடைவதற்கும் உரிய தகுதிப்பாடு ஒன்று உண்டென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், எல்லோருஞ் சிவலோகஞ் சேர்தலே மனித வாழ்விலட்சியமாம். அன்றியும், ஒவ்வொருவரும் தத்தம் தகுதிப் பிரகாரம் ஒவ்வோர் காலத்தில் சிவலோகம் அடைந்தே தீர்வர் என்பது சைவசித்தாந்த முடிபுமாம். சைவசமய அநுபவ நிலையில் பாவனைக்கு முக்கிய இடமுண்டு. கருதப்படும் இலக்கு உண்மையானதெனில் பாவனை உடன் பலன் தராவிடினும் உரிய காலத்திற் பலன்தரும் என்பது சைவக் கொள்கையாகும். சிவோகம் பாவனை செய்பவர் எடுத்த முதலெடுப் பிலேயே சிவமாய் விடுவர் என யாருங் கொள்வதில்லை. எனினும், உயிர் சிவமாதல் நியதமான ஒரு உண்மையாய் இருத்தலை முற்கொண்டு சிவோகம் பாவனை நடைபெறுவது போல்வதே இதுவுமாமம்.

ஒரே உயிர் பலதடவை பிறந்து பிறந்து இறக்கலாம். இறக்கும் ஒவ்வொரு தடவையும் அத சிவலோகஞ் சேர்கிறது. சிவலோகஞ் சேர்கிறது என்று அதன்பொருட்டுத் தகுதியான மற்றொரவர் செய்யும் பாவனை ஒவ்வொன்றும் அது மந்திரக் கிரியா பாவனையாயிருத்தலினால் அந்த உயிரின் சிவத்துவப் பேற்றுக்கு உரிய காலத்தில் உதவுதல் தப்பாது. அந்த உயிர் தன்போக்கில் சிவத்துவத்துக்கான நெறியில் முயல்கின்ற குறிக்கப்பட்ட ஒரு கட்டத்தில், இப்பாவனைகள் அனைத்தும் அதன் பேற்றுக்கு அணைதுணையாய் நின்றுதவும் என்பதே அபிப்பிராயமாகும்.

அன்றியும், இறந்த உயிர் தன் மறுபிறப்பிற் போய்க் கொண்டிருக்கும் போதிலும், அங்கு அதற்கு விளையவிருக்கும் சுகபோக நிலைகளுக்கு, இப்பாவனைப் பலன் பெருமளவிற் கைகொடுத்துதவும் என்ற நம்பிக்கையும் சைவ அனுபவத்தில் இடம்பெற்றிருத்தல் அறிதற்பாலதாம்.

உயிரோடிருப்பவர் பற்றிய கடமைகளிலும் பார்க்க இறந்தோர் பற்றிய கடமைகள் சைவத்தில் மிகப் பிரதானமாகக் கருதப்படுவதன் தாற்பரியம் இதுவாகும்.

இறந்த உயிர் ஒன்று.

1. சிவலோகமே சேர்ந்து விடுதல் முடிவான பயன்.
2. இடைப்படும் பிறப்புக்களில் சுகபோக நலங்கள் அதிகரிக்கப் பெறுதல் தற்காலிகபயன். இவ்விரண்டுக்கும் உரியது அபரக்கிரியை என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியை விளக்க வினாவிடை

**01 இறந்தவருக்குக் கிரியை செய்வதன் அர்த்தம் என்ன?**

இறந்தவர் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அர்த்தமாகும்.

**02 இறந்த பின்பு அவருக்கு எங்கே வாழ்வு? எப்படி வாழ்வு?**

அவருக்கு சுவர்க்கத்திலும் நரகத்திலும் வாழ்வுண்டு. திரும்பவும் அவர் புவியிற் பிறந்து முன் வாழ்ந்தது போல் வாழும் வாழ்வு உண்டு. சுவர்க்க வாழ்வு இன்ப துன்பக் கலகலப்பான அனுபவம்.

**03 இறந்த பின்பு அவர் இங்கில்லை அந்நிலையில் அவருக்குச் செய்வதை அவர் பெறுவதெப்படி?**

இறந்த பின்பு குறைந்தது முப்பத்தொரு நாள்வரை அதாவது அந்தியேட்டிவரை அவர் இங்கேதான் இருக்கிறார். அதாவது தான் விட்ட உடலினைத் தொடர்ந்து நீங்காமல் அருவமாய் இருந்து கொண்டிருக் கிறார். அந்நிலையில் உடலைத் தொடர்பு படுத்திச் செய்யுங் கிரியையின் பலனை மேலுலகத்தில் உள்ள பிதிர்கள் என்ற தேசசாதியர் ஏற்று அவர் எங்கிருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கிறார்கள்.

**04 இக்கிரியைகளை அபரக் கிரியைகள் என்பதேன்?**

அவை இறந்தபின் செய்யப்படும் கிரியை என்பதனால் தான். அபரம் என்றால் பின் என்று பொருள்.

**05 அபரக் கிரியைகள் என்ன?**

பிரேதக்கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆட்டைத்திதி, திவசம் என்பனவாகும்.

**06 அபரக்கிரியைகள் உடலுக்காகவா? உயிருக்காகவா?**

உயிருக்காகவேதான். ஆனால் அந்தியேட்டிவரை உடல் தொடர்பில் வைத்தும், பிறகு தனியாகவும் உயிரைக் கருதிச் செய்யப்படும்.

**07 இக்கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவிப்பது எங்ஙனம்?**

இக்கிரியைகளினால் உயிருக்கு இருவிதத்தில் நன்மை விளையும். தனது சரீரத்தை விட்டுக் கிளம்பிய உயிர் அதன்மேல் பெறவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களுக்கு உப கரிப்பது ஒன்று.படிப்படியாக அவ்வுயிர் சிவத் தன்மை பெறுவது ஒன்று.

**07 சிவத்தன்மை பெறுவது என்பது எங்ஙனம்?**

அபரக்கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அதிகரிக்கப்படுகின்றன. அதற்குத் தக்க அளவு உயிரைப் பற்றியுள்ள மலபந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத் தன்மை சிறிது சிறிதாகப் பற்றும். கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும் போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்றுவிடும்.

**08 நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்துவிட்டார் என்றுதானே எல்லோரையும் குறிக்கின்றார்கள். அப்படியானால் கிரியைக்கு என்ன அவசரம்?**

அப்படிக்குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதம் அடைய வேண்டும் என்ற நல்ல விருப்பத்தினால் உரைப்பது. உபசாபரம் என்ற அளவில் கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்ய வேண்டும்.

**09 பிரேதக் கிரியையில் கும்பபூஜை, அக்கினி காரியங்கள் எல்லாம் செய்வதேன்?**

அவையெல்லாம் முன்சொல்லியவாறு இறந்தவரைச் சிவ மாக்கும் முயற்சிகள்தான். கும்பங்களில்உருத்திரனையும் திக்குப் பாலகர் களையும் எழுந்தருள வைத்துப் பூசிப்பதனால் அவற்றிலுள்ள நீருக்குச் சிவத் தன்மை உண்டாகும். அந்நீரினால் இறந்த உடலுக்கு நீராட்டு வதனால் நீரிலுள்ள சிவத்தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாகப் பூசிக்கப்பட்டால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மைஅந்த அக்கினியால் உடலை எரிக்கும் போது அதன் சிவத்தன்மை மேலும் அதிகரிக்க உதவும்.உடலைவிட்டுப் பிரிந்தாலும் ஒரு வகையில் அதன்தொடர்பு நீங்காதிருக்கும். உயிருக்கு அச்சிவத்தன்மை புரியும்.

**10.உடலை விட்டு பிரிந்த பின்னும் உயிர், உடல் தொடர்பு நீங்கா திருக்கிறது என்பதை விளக்க முடியவில்லையே! அதை எப்படி நம்ப முடியும்?**

அப்படியொரு தொடர்பு நீங்காதிருப்பதை நாங்கள் காட்சியால்காண முடியாது. காணும் பக்குவம் சாதாரணமாக எங்களுக்கு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவம் உள்ளவர்கள் கண்டு சொல்லியுள்ளார்கள். அவர்கள் சொல்வதை நாம் அனுமானித்து இறந்தவர் உயிர் விடும் போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர் அல்லது தண்ணீர் செம்பு வைப்பதுண்டு. அங்கே பாடல் படிப்புக்கள் முடிந்த பின் படைத்த வற்றில் சிறிது எடுத்து முகட்டை நோக்கிக் காட்டுவதுண்டு. இவையெல்லாம் இறந்தவர் தனது உடம்பு எரிந்த பின்னும் கூட உடல் இருந்த சூழலில் இருக்கிறார் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

**1 அங்ஙனமாயின் அவர் சுவர்க்க நரகம் போவரென்றல்லவோ முதலிற் சொல்லப்பட்டது. இப்போது இங்கேதான் இருக்கிறார் என்பது இதற்கு மாறுபாடாய் இருக்கிறதே?**

அதற்கு இது மாறுபடாது. எங்ஙனமெனில் இப்போது சொல்லப் படுகின்ற இந்தத் தொடர்பு முற்றாக நீக்கப்பட்டதன் பின்புதான் இவர் சுவர்க்க நரகங்களுக்கு செல்வார். அந்தியேட்டியில் தான் அத்தொடர்பு முற்றாக நீக்கப்படும்.

**12 அந்தியேட்டியில் அது நீக்கப்படுவது என்பது எப்படி?**

அந்தியேட்டி கிரியையை அவதானிப்பதால் அதுபுலனாகும். அந்தியேட்டி கிரியைக்கு அமைக்குமுகமாக கோடிட்ட மண்ட பத்தில் தென்கிழக்கு மூலையில் ஐந்து நிறங்கள் உண்டு. அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்சபூதங்களினால் அமைந்த உடம்பால் அவர் தொடர்புற்றிருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில் மாவடிவமான சதுரங்களில் பஞ்சபூதங்களைப் பொருத்தி அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கி விடுவது அக் கிரியையின் விளக்கமாகும்.

**13 அந்தியேட்டி தர்ப்பையில் ஆளுருவம் செய்து குளிப்பாட்டி பொற்சுண்ணம் இடித்து சுடுகிறார்களே அது ஏன்?**

அதுவும் அந்தியேட்டிவரை உயிருக்கு உடல் தொடர்பு இருக்கு மென்பதற்கான மற்றொரு அறிகுறிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14 சிலருக்கு மட்டும் பிரேதக் கிரியையோடு அந்தியேட்டியும் செய்கி றார்கள் அது ஏன்?**

அதையும் அறியத் தான் வேண்டும். சாதாரணமாக நம்மவரைப் போலல்லாது சிலர் விஷேசமான தீஷைஆசாரம், ஒழுக்கம்,சாதனை, சிவபூசை ஒழுங்குக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு விஷேட பக்குவம் இருக்கிறது. அந்த வாய்ப்பினால் அவர்கள் இறந்த உடனேயே தேகத்தால் அப்படி நிகழ்கிறது

**15 அஃதிருக்க பிரேதக் கிரியையிலும் அந்தியேட்டியிலும் பொற் சுண்ணம் இடிக்கிறார்கள். அது எதற்காக?**

அதுவும் அவர் உடல் தொடர்புள்ளவராயிருத்தலிற் சம்பந்தப் படும்.அவருடைய தநு, கரணம், புவனம், போகம் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் என்ற கருத்தில் தான் செய்யப்படுகிறது.

**16.பொற்சுண்ணமிடிக்கையில் திருவாசகத்தில் இருக்கும் திருப் பொற்சுண்ணப் பதிகமும் படிக்கிறார்களே அது ஏன்?**

பொற்சுண்ணமிடித்தலினால் இறந்தவருடைய தேகத்தின் தொடர்பு நீக் கப்பட அவர் சிவலோகஞ் சேரும் பட்சத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓசை போலவும் பொருள் விளக்கமும் திருப்பொற்சுண்ணப் பதிகப் பாடல்களில் உண்டு.அதனாலேயே திருப்பொற் சுண்ணமிடிக்கும் நிகழ்ச்சியோடு இதுவும் தொடர்புபட்டிருக் கிறது.உண்மையில் சிவலோகஞ் சேரும் தகுதியுள்ளவர் விஷயத்தில் அது என்றாலும் பரவாயில்லை. ஏனெனில் இவர்களும் எப்பவோவெனினும் தமக்குரிய காலத்திற் சிவலோக மடைய வேண்டியவர்களே. அது திருத்தத்திற்கு சிறந்த வழி என்பது விளக்கநிலை.

**17 அந்தியேட்டி முடிவில் வீட்டுக்கிரியை செய்வதேன்?**

அந்தியேட்டி முடிவில் இறந்தவரது வீட்டில் நக்னதானம்,ஏகோதிட்டம், பசுதானம்,சபீண்டிகரணம் முதலிய பல கிரியைகள் நிகழும். இவை யெல்லாம் பொதுவில் வீட்டுக் கிரியைகள் எனப்படும். அந்தியேட்டியில் தேகத் தொடர்பு நீக்கப் பெற்றவர் தான் சுவர்க்க நரகத்துக்கு செல்வார். அவ்வாறு செல்லும் அவர் பாதை தனிமையானது, இருளானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினங்களேஉடு கூடியது. ஆதலால் அவ்வித கஸ்டங் களில் இருந்து அவருக்கு விமோசனமளிக்கும் நோக்கில் வீட்டுக் கிரியைகள் நிகழ் கின்றன. கிரியைகளில் குடை, செருப்பு, விளக்கு, செம்பு, தண்ணீர் முதலியன எல்லாம் கொடுப்பது, அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதனால் தான்.

**18. வீட்டுக் கிரியை அழைப்பிதழ் சிலர் சபீண்டிகரணக் கிரியை என்று மட்டும் குறிக்கிறார்களே அது ஏன்?**

அது வேறொரு விஷேஷத்தினாலுமல்ல. வீட்டுக் கிரியையின் பகுதிகள் என மேற்சொன்னவற்றிற் சபீண்டிகரணம் பிரதான மானது என்பதனால் தான். எங்ஙனமெனில் இறந்தவர் நரகப் பேறுகளைப் பெறுவதற்கு முன் கூறிய பிதிர்களின் சகாயம் வேண்டும். அதற்காக அவர் பிதிர்களோடு அறிகுறியாக மாவுடன் எள், அரிசி, தேன், சர்க்கரை, தயிர் குழைத்து உருட்டிய பிண்டங்களை விட்டு வைத்து அவற்றுக்கெதிர் இறந்தவர்க்கு அறிகுறியாக ஒரு பிண்டமிட்டு,கிரியை செய்பவர் எல்லோரையும் நைவேத்தியம் கதலிப்பழம் தாம்பூலம் எல்லாம் சமர்ப்பித்து தூப தீபராதனை செய்து முடிவில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபீண்டிகரணம் எனப் பெயர் பெற்றது.

## மறுபிறவித் தத்துவம்

நிரந்தரமான ஒரு தெய்வீக சக்தி நமக்குள்ளேயே இருக்கிறது. அதையே ஆத்மா என்று கூறுகிறோம். நமது கனவில் நமது மனம் இல்லாத இடம் இல்லை. அதே போல உலகியல் வாழ்வில் ஆத்மா நிலவாத இடம் இல்லை. எங்கேயாவது இல்லை என்றால் அல்லவா ஒரிடத்தை விட்டு இன்னொரு இடத்துக்குப் போவதற்கு இறந்த பிறகு பூதஉடல் மட்டுமே எஞ்சி நிற்கிறது. அந்தக் காரணம் என்னும் சூக்ஷ்ம் உடலுடன் ஆத்மா விடை பெற்றுச் செல்லுகிறது. அத்துடன அது வாழ்க்கையில் அனுபவித்து உணர்ந்த அனுபவங்களின் வாசனையும் தொடர்ந்து செல்கிறது. இப்போது நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் .உங்களுடைய வீட்டில் இல்லை அதே போல வீட்டுக்கு போய்விட்டால் இங்கே இருக்கமாட்டீர்கள்.

அதே போல சுஹம் உடல் இடம் மாறுகிறது. நல்ல வாழ்க்கை வாழ்ந்தால் பதவி உயர்வு பெற்று இன்னும் உயர்வான வாழ்க்கையை அநுபவிக்கப்போகிறது.நல்ல விஷயங்களை நாடி ஆசைப்பட்டிருந்தால் அந்த நல்ல வாசனையுடன் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவி யை நாடிப்போகிறது. இதை புரிந்து கொள்ள வேண்டும் .இவ்வாறு நாம் கூர்ந்த முனைப்புடன் உருவாக்கும் எண்ண சக்தியே நமது அடுத்த பிறவியை நிர்ணயிக்கிறது.ஆக மறு பிறவித்தத்துவம் என்பது விஞ்ஞான பூர்வமானது. தர்க்க பூர்வமானது.

## மலர்கள் பழங்கள் தேங்காய்

ஆலயங்களுக்குச் செல்லும் போதும் மலர்கள் பழங்கள் ஆகியவற்றை எடுத்துப் போவது தேங்காயை எடுத்துச் சென்று உடைப்பதுயாவும் நமது வாழ்க்கை யைத்தான் பிரதிபலிக்கின்றன. மலர் என்பது வாழ்க்கையின் மலர்ச்சி. அது குவிந்து காயாகி கனியாகிறது. அது வாழ்க்கையின் முழுமை நமக்கு இறைவன் கொடுத்த இந்த இன்பங்களை இறைவனுக்கே அர்ப்பணித்து மகிழ்கிறோம்.

அதுவே பூஜா திரவியங்களாக நம்முடன் ஆலயத்துக்கு வருகின்றன. தேங்காய் என்பது வெளியே அழகான வழுவழுப்பான மேற்தோல் ஆனால் உள்ளே அவ்வளவும் பிசிறுபிடித்த தேங்காய் நார்.அதேபோல் நமது உடல் பார்க்க அழகாக இருக்கிறது.ஆனால் உள்ளே எண்ணங்களில் எத்தனை அழுக்கு? தேங்காயை நார் உரித்து எடுத்து செல்லுவதைப் போல கோயிலுக்கு செல்லும் போது இந்த எண்ண அழுக்குகளைப் பின்னால் விட்டுச் செல்லுகிறோம் .

ஆயினும் துளிபாக்கி இருக்கிறது. தேங்காயில் குடுமியை நாம் பாக்கிவிட்டு வைப்பதைப் போல் மூன்று முறை வலம் வந்து முடிவில் கருவறைக்குள் உள்ள இறை உருவத்ததைத் தரிசிக்கிறோம். அங்கே குருக்கள் கற்பூரம் ஏற்ற அந்தத் தெய்வ உருவத்தை நாம் தரிசிக்க முடிகிறது. பத்தி அதே போல வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி நாம் நம்மையே உணர முற்படுகிறோம்.

அப்போது குருநாதர் வந்து நமக்கு வழிகாட்டுகிறார்.வித்தியா மூலம் நாம் இறை உணர்வைப் பெற உதவுகிறது. ஞானதீபம் கடவுளை நமக்கு அடையாளம் காட்டுகிறது. குருநாதர் ஞானப்பார்வையை அளித்து மூன்றாவது கண்ணைத் திறக்கிறார் . அதேபோல குருக்கள் மூன்றுகண் உள்ள தேங்காயை உடைக்கிறார்.

ஆசைகளும் பற்றுக்களும் நீங்கிய நமது உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணிக்கிறோம். அதேபோல உடைந்த தேங்காய் சத்தான நீரும் பருப்புமாக இறைவனுக்கு நைவேத்தியம் ஆகிறது போல நமது வாசனைகளும் வெளியேறி விடுகின்றன.

கற்பூரம் என்பது என்ன அபூர்வமான தோர் மணம் உறைந் திருப்பதுதானே? அதைக் கொள்ளுத்தினால் ஒலிபெருக்கி வாசனையைப் பரப்பி அது தன்னையே அழித்துக் கொள்கிறது. அதேபோல நம்முடைய எண்ண வாசனைகள் நிறைந்த உடலை இறைவனுக்குரிய பணிக்கு அர்ப்பணிக்கும் போது அது தனக்குரிய தொண்டுகளை நிறைவேற்றி உலக வாழ்க்கையிலிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறது. அந்தந்த தெய்வீகப் பணியை நமது வாழ்க்கையில் ஒளியோதி மயமாக ஒளிபரப்புகிறது. நமது அகந்தை ஆணவம் ஆகிய யாவும் கற்பூரம் கரைந்து மறைவதைப் போல உருத்தெரியாமல் மறைந்து போகின்றன.

-செல்வி கல்பனா வரதராஜன்-

வேரவில்,பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலசத் தத்துவம்

சங்கரபகவத்பாதர் நம்முடைய மனத்தை ஒரு கலசமாக வருணித்து பகவானின் விஷயத்தில் நமக்குள்ள அளவிடமுடியாத பிரேமை என்ற நூலைக் கொண்டு அதை சுற்றவேண்டும் என்கிறார். தண்ணீருக்கு அமிர்தம் என்ற ஒரு பெயர் சமஸ்கி ருதத்தில் உண்டு. மனமாகிய கலசத்தில் சந்தோஷம் என்ற நீரை ஊற்றவேண்டும் என்பதற்காக சங்கரர் முதம்ருதாபூர்ணே என்று சொல்லுகிறார். சந்தோசமாக உள்ளவனால்தான் எந்த நல்ல காரியத்தையும் நன்றாகவும் செய்யமுடியும். அதுவே தூய்மையானதாகக் கலப்பற்றதாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் அந்நச் சிந்தனை பகவானிடத்தில் ஈடுபடும் எல்லோருக்கும் நல்லதையே நினைக்கும் அதற்காகவே கலசத்தில் தூய நீரை நிறைக்கிறோம். கலசத்தின் மேல் மாந்தளிர்களை வைத்து அதன் மேல் தேங்காயை வைப்பது நம்முடைய வழக்கம். பக்தனுடைய மனதில் பகாவானுடைய இரு பாதார விந்தங்கள் தாம் பிரரிபலிக்க வேண்டும் பகவானுடைய பாதங்களுக்கு மலரிதழ்களை உவகையாகக் கூறுவதைப் போல தளிரையும் உவமையாக சொல்லுவ துண்டு.அதனால்தான் தளிரைப்போன்ற உன்னுடைய பாதாரவிந்தத்தை எனது மனமாகிய கும்பத்தின் மேல் வைத்து என்கிறார்.

கலசத்தின் மேல் உள்ள மாந்தளிர் இதையே குறிக்கிறது. கடைசியில் வைக்கப்படும் தேங்காய் ஞான பலத்தைக் காட்டுகிறது.நமக்கு இறைவன் ஞானஸ்வ ரூபத்தைக் கொடுக்க வேண்டும்.அதனால் நாம் சிரயேஸ்ஸை அடைய வேண்டும். என்ற எண்ணத்தோடுதான் நாம் எப்போதும் இறைவனை ஆராதிக் கிறோம்.ஞானருபமாய் உள்ள பலத்தை நாம் பிடித்துக் கொண்டு வந்து சேர்க்க வேண்டியதில்லை . அது தானகவே வந்து உட்கார்ந்து விடுகிறது.

ஸாம்ப தவாஸ்க்ரி பல்லவயுகம் ஸம்ஸ்தாப்ய ஸம்வித்பலம் என்று சங்கரர் கூறுகிறார் .இப்படி நம்மிடம் வந்து அமர்ந்து நம்மை ஆட்கொள்ளும் ஞானபலத்தையே தேங்காய் உணர்த்து கிறது.வீட்டில் நல்ல காரியங்கள் நடைபெறும் போதே இப்படிப் பூர்ண கும்பம் வைப்பதுண்டு.அப்போது நம்முடைய மனம் நல்ல எண்ணாங்களால் நிறைந்து இறைவன் அருளால் ஞான பலம் கொண்டு இருக்க வேண்டும் என்பதையே இந்த அமைப்பு உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சிவஸ்ரீ.குமாரசாமி வரதராஜன்



அமரர் செல்வன்
சண்முகலிங்கம் ஹரிகரன்




அமரர் திருமதி
கதிரவேற்பிள்ளை சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உசாத்துணை நூல்கள்.

1. சிவவழிபாடு
2. சைவக் கிரியை விளக்கம்
3. ஐங்கரன் அமிர்தம்
4. பட்டினத்தார் தோத்திரத் திரட்டு
5. சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்
6. சைவக் கோயில்களும் மனித உடலும் வியத்தகு உவமைகளும்
7. வெள்ளைமாவடியான் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அவசர தொலைபேசி அழைப்புக்கு.....

| | |
|---|---|
| யாழ் அரசினர் வைத்தியசாலை | - 3348 |
| திருநெல்வேலி நேர்சிங்கோம் | - 2263 |
| கோலிகுறொஸ் | - 2512 |
| அப்பலோ வைத்தியசாலை | - 3305 |
| சம்பந்தர் சிகிச்சை நிலையம் | - 7259 |
| நடன முருகன் வைத்தியசாலை | - 3635 |
| யாழ். பொது நூலகம் | - 2019 |
| யாழ். மத்திய பேரூந்து நிலையம் | - 2281 |
| கோண்டாவில் பஸ் டிப்போ | - 2207 |
| யாழ். மாநகரசபை | - 2275 |
| யாழ். மின்சாரசபை | - 2496 |
| யாழ். தீயணைக்கும் படை | - 3556 |
| யாழ். செயலகம் | - 2235 |
| யாழ். பிரதேச செயலகம் | - 2209 |
| யாழ். பொலிஸ் நிலையம் | - 2222 |
| யாழ். நீதிமன்றம் | - 2357 |
| யாழ். தபாலகம் | - 2250 |
| சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் | - 2026 |
| போரூட் | - 2177 |
| UNHCR | - 2005 |
| கலோஸ்ரஸ்ற் (கண்ணிவெடி அகற்றும் பிரிவு) | - 3779 |
| TRRO | - 2416 |
| கைதடி முதியோர் இல்லம் | - 0602<br>- 213526 |
| உதயன் பத்திரிகை | - 2030, 2083, 3837 |
| வலம்புரி | - 3387 |
| தினக்குரல் | - 2127 |
| கற்றன் நஷனல் வங்கி | - 2787 |
| இலங்கை வங்கி | - 2760 |
| வர்த்தக வங்கி | - 3148 |
| தேசிய சேமிப்பு வங்கி | - 2735 |
| யாழ். ரெலிக்கொம் | - 2211 |
| எக்ஸ்போ எயார் | - 6297 |
| லயன் எயார் | - 2504 |
| செரண்டிப் | - 3916 |

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இரவு - பகல்**
**அம்புலன்ஸ் சேவை**



- 222 2562 ● 077 3979389
- 222 9792 ● 077 3979390 ● 060 221 5555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்ப விளக்காகவும், அச்சாணியாகவும்
விளங்கிய அன்புத் தந்தையை இழந்து துயருற்றிருந்த
வேளையிலே எம்துயர் துடைக்க நீண்ட கரங்களுக்கும்,
மனங்களுக்கும் உறவினராய் உண்டி கொடுத்து
உறுதுணையாய் நின்றோர்க்கும், மரணச் சடங்கில்
பங்குகொண்டோர்க்கும், அஞ்சலிப்பிரசுரங்கள்
வெளியிட்ட கிளி/வேரவில் இந்து மகா வித்தியாசாலை
சமூகத்தினருக்கும், இரங்கல் உரை
நிகழ்த்தியோர்க்கும், தொலைபேசி, தொலைநகல்,
பத்திரிகைச் செய்திகள், மலர்வளையங்கள் சாத்திய
யாழ்/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய
சமூகத்தினருக்கும், கடிதங்கள் வாயிலாக அஞ்சலி
செலுத்தி எமது சோகத்தைப் பகிர்ந்த உற்றார்,
உறவினர், நண்பர்கள், அயலார் அனைவர்க்கும்
கிரியைகளைச் செய்த அந்தணப் பெருமக்களுக்கும்,
நெஞ்சச் சிமிழ்திறந்து நினைவு மலருக்கு ஆக்கங்கள்
தந்தவர்களுக்கும், இம்மலரினை அச்சிட உதவிய
நல்லூர் பிள்ளையார் அச்சக நிறுவனத்தினருக்கும்
எமது இதயபூர்வமான நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.



வேரவில்,
பூநகரி

இங்ஙனம்,
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளையார் அச்சகம், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org